# பெரியார் கொட்டிய போர் முரசு



தொகுப்பாசிரியர்

**கி.வீரமணி**

மொழியோ, நூலோ, இலக்கியமோ எதுவானாலும்
மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, பண்பு
ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்.



இன்றைய இளைஞர்களே !
அன்றைய நிலையும்,
இன்றைய மாறுதலும் தெரியுமா ?

# பெரியார் கொட்டிய போர்முரசு



தொகுப்பாசிரியர்
**கி.வீரமணி**

**திராவிடர் கழக (இயக்க) வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | பெரியார் கொட்டிய போர்முரசு |
| தொகுப்பாசிரியர் | : | கி.வீரமணி |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு : 2017 |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 172 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை (குறைந்த அளவு) | : | ரூ.120/- |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **திராவிடர் கழக (இயக்க) வெளியீடு** சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சுக் கோப்பு | : | பெரியார் கணினி ஆய்வுக் கல்வியகம், சென்னை - 600 007. |
| அச்சிட்டோர் | : | ‘விடுதலை’ ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம் |

- பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163
- பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-2771815

info@periyar.org | www.dravidianbookhouse.com



# பதிப்புரை

தமிழ் அறிவியல் மொழியாக வேண்டும்; தமிழ் பகுத்தறிவு மொழியாக வேண்டும்; தமிழ் உலக மொழியாக வேண்டும்; அதற்கேற்ற வகையில் தமிழ் வளர்ச்சியடைய வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் தமிழ் மொழியின் மேன்மைக்குத் தொண்டாற்றியவர் அய்யா தந்தை பெரியார் அவர்கள் கட்டாய இந்தித்திணிப்பை எதிர்த்தவர்; தமிழ் உரிமையை மீட்க பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியவர் தந்தை பெரியார் என்ற வரலாற்று உண்மையை ‘குடிஅரசு’, ‘விடுதலை’ இதழ்களின் ஆதாரங்களுடன் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ள நூல் ‘தந்தை பெரியார் கொட்டிய போர்முரசு’ தமிழர்களே ஊன்றிப் படியுங்கள்; உண்மையை உணருங்கள்.

# நுழையுமுன்

**பழி சொல்லுவதிலும், அபாண்டமாகப் பேசுவதிலும், எழுதுவதிலும், ஆதாரமில்லாமல் அவதூறுகளை அள்ளி வீசுவதிலும் தேர்ந்த புத்தி இந்தப் பார்ப்பனர் கூட்டத்தின் டி.என்.ஏ.வி.லேயே இருக்கிறதுபோலும்!**

“பெரியார் தமிழை காட்டுமிராண்டி மொழி என்றும், கடவுளை வணங்குகிறவர்கள் காட்டுமிராண்டிகள் என்றும் ஒரு முறை அல்ல, பலமுறை கூறினார். தமிழ் இலக்கியங்களைத் தூற்றினார். தமிழர்கள் இன்று போற்றும் புலவர்களைப் பொய்யர்கள் என்றார். தமிழ்நாட்டைத் தமிழர்தான் ஆள வேண்டும் என்று சொல்பவர்கள், முதலில் பெரியாரைக் கைவிட வேண்டும். மாறாக, அவர்கள் பெரியாரைப் போற்றுகிறார்கள். அப்படியானால் அவர்கள் பெரியார் அகராதிப்படி தமிழகத்தை காட்டுமிராண்டிகள் ஆள வேண்டும் என்றுதானே சொல்கிறார்கள்.”

**‘துக்ளக்’ 12.7.2017 பக்கம்.17**

ஒரு தலைவரைப் பற்றிச் சொல்லும் பொழுது அவர் எங்கு சொன்னார்? எப்பொழுது சொன்னார்? என்று எழுதாமல் சாராயம் குடித்தவன் சகட்டு மேனிக்குப் பேசுவது போல் உளறுவது உகந்தது தானா?

குடந்தை நிலக்கிழார் ஒருவர் விருதுநகர் மாவட்டம் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலுக்கு வந்து குளப் படிக்கட்டில் வழுக்கி விழுந்தது குறித்து தகவல் தெரிவிக்க தன் பணியாளரிடம் பின்வருமாறு சொல்லி அனுப்பினார்.

திருக்குடந்தை திரு லோக தாத்தாச்சாரியார் திருத்தங்கள் திருநின்ற நாராயணப் பெருமாள் திருமுகம் சேவிக்க, திருக்கோயிலுக்கு வந்து,

திருக்கோயில் வளாகத்தில் இருக்கக் கூடிய திருப் படிக்கட்டுகளில் இறங்கி திருத்துழாய் பிடுங்கிறச்சே, திருக்குளத்துப்படிப் பாசிகள் வழுக்கி, திருக்குளத்தில் விழுந்து திருக்காலில் ஹீனமடைந்தார்னு சொல்லிடு. இரண்டு முறை கேட்டு கேட்டுப் பார்த்த பணியாளரிடம் எப்படிச் சொல்லுவாய் சொல் என்றார் அந்த நிலக்கிழார்! சொல்லிடுறேன், சொல்லிடுறேன் என்று சொன்ன பணியாள் சொல்லிக் காட்டினான் பின்வருமாறு: கும்பகோணத்து பார்ப்பான் குட்டையிலே விழுந்தான்னு சொல்லிடுறேன் சாமி என்றானே பார்க்கலாம். பார்ப்பான் சுத்தி சுத்தி சொன்னாலும் கடைசியில் அவன் கதை இப்படித்தான் முடியும் - அவன் சரக்குதான் குப்புத்துப் படுத்துக் கிடக்கும்.

தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று தந்தை பெரியார் சொன்னது உண்மைதான். எதற்காக அப்படி சொன்னார்? தமிழை இழிவுப்படுத்துவதற்காகவா? தமிழை மேன்மைப்படுத்துவதற்காகவா?

தமிழ்பற்றி தந்தை பெரியாரின் கருத்தென்ன? இதோ பெரியார் எழுதுகிறார்:

“எனக்குத் தமிழ்மீது வெறுப்பு இல்லை. நான் வீட்டிலும், வெளியிலும் பேசுவது தமிழ். படிப்பது தமிழ், எழுதுவதும் தமிழ். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று, சில முறைகளைப் புகுத்தியவனும் நான்தான். தமிழ் வளர்ச்சி அடையாத பழங்கால மொழியாக அப்படியே இருந்து வருகிறது. விஞ்ஞான மொழியாகவும், பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை. ஆகையால் தமிழில் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பில் சலுகை தருவதாக அரசு கூற வேண்டியதாகிறது - இது வரவேற்கத்தக்கதே! **(‘விடுதலை’ 1.12.1970)**

இதற்கு மேல் என்ன விளக்கம் தேவை? பெரும்பாலும் புராணங்களும், மூடநம்பிக்கைகளும் மிகுந்து காணப்படுவது - ஒரு மொழிக்கான சிறப்பாகாது. ஏதோ எந்தக் காலத்தில் கிறுக்கப்பட்டவை என்றால், தொலைத்து விட்டு புதுமைகளையும், அறிவியலையும் குருதியாகச் செலுத்தினால்தானே ஒரு மொழி வளர்ச்சித் திசையில் வானோங்கி நிற்க முடியும்.

சமயம் என்னும் சூளையில் தமிழ் நட்டால் முளையாது! என்று புரட்சிக் கவிஞர் பாடியதும் இந்தப் பொருளில் தானே!

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வந்தவர் யார்? தமிழ்நாட்டையும், தமிழர்களையும், தமிழையும் சூறையாட வந்த இந்தியை, சமஸ்கிருதத்தை எதிர்த்துப் போர்க் கொடி தூக்கி விரட்டிய கை எந்தக் கை?

நமஸ்காரம் போய் வணக்கம் வந்ததும், அக்ராசனாதிபதி போய் தலைவர் ஆனதும், வந்தனோபசாரம் நன்றி என்றானதும், மகாராஜஸ்ரீ, சிரஞ்சீவிகள் இருந்த இடம் தெரியாமல் போனதும், ஸ்ரீ போய் திரு பிறந்ததும் எந்தக் கால கட்டத்தில்? 1937ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினை தலைமை தாங்கி தந்தை பெரியார் நடத்தியதன் தாக்கம்தானே - இல்லை என்று மறுக்க முடியுமா?

நாராயணசாமி நெடுஞ்செழியன் ஆனதும், இராமையன் அன்பழகன் ஆனதும், சோமசுந்தரம் மதியழகன் ஆனதும், கோதண்டபாணி வில்லாளன் ஆனதும், அரங்கசாமி அரங்கண்ணல் ஆனதும், சீனிவாசன் செழியன் - ஆனதும் எல்லாம் தமிழ் வளர்ச்சிக்குத் தந்தை பெரியார் அளித்த அருட்கொடையல்லவா!

தொடர் வண்டி நிலையங்களில் ஊர்ப் பெயர்ப் பலகைகளில் முதலில் இந்தி என்றிருந்த நிலையை நிர்மூலம் செய்து முதலிடத்தில் தமிழ் இடம் பெற்று இருக்கிறதே - இந்த நிலை எப்படி வந்தது - எப்பொழுது வந்தது?

1952, 1953, 1954 ஆண்டுகளில் தார் கொண்டு இந்தி எழுத்துக்களை அழிக்கும் போராட்டத்தைத் தந்தை பெரியார் நடத்தியதன் விளைச்சல் அல்லவா இது!

தமிழன் வீட்டு நிகழ்ச்சிகள் (குறிப்பாக திருமணம்) தமிழன் தலைமையில் நடப்பதும், தமிழில் நடப்பதும் எப்படி வந்தது - யாரால் வந்தது? தமிழர் பண்பாட்டு விழாவாக பொங்கலை பரவலாக்கியது யார்? எந்த இயக்கம்? தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற தடத்தில், அவற்றின் வளர்ச்சியில் தந்தை பெரியார் முத்திரை பதிக்காத துறை உண்டா? தமிழர்களைக் கண்டித்ததும், தமிழ் மீதான குறைகளை எடுத்துக் கூறியதும் அவற்றின் வளர்ச்சி நலன் கருதியே என்பது -

ஆசாபாசம் இல்லாமல் அறிவைச் செலுத்தும் எவருக்குமே எளிதில் புலனாகுமே. தமிழ்மீது அக்கறை செலுத்துவதாக கிளிசரின் கண்ணீர் வடிக்கும் குருமூர்த்தி வகையறாக்களான பார்ப்பனர்கள் தமிழில் பெயர் சூட்டிக் கொள்ளாதது ஏன்? இந்தத் திசையில் பரிதிமாற் கலைஞர் (சூரிய நாராயண சாஸ்திரி) ஒருவரைத் தவிர அடுத்த வரை எடுத்துக்காட்ட விரலை மடக்க முடியாதது ஏன்? ஏன்?

திராவிடர் இயக்கம் எத்தனை எத்தனை எழுத்தாளர்களை, படைப்பாளிகளை உருவாக்கியது! மயிலை சுப்பிரமணியன் பற்றி துதிப் பாடல்களை எழுதிய ஒரு கனகசுப்புரத்தினத்தை புரட்சிக் கவிஞனாக - பகுத்தறிவுப் பாவலராக வடித்தது யார்? எந்த இயக்கம்? புரட்சிக் கவிஞரின் படைப்புகள் தமிழ்மொழிக்கு அணிவிக்கப் பட்ட விலை மதிக்க முடியாத நவமணி அல்லவா!

தமிழுக்குச் செம்மொழி தகுதி - சென்னை மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம் வந்ததெல்லாம் எப்படி? வாய்ப் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று உளறலாமா?

தந்தை பெரியார் தமிழை காட்டுமிராண்டி என்று சொன்னது தமிழை இழிவுபடுத்த அல்ல! காட்டுமிராண்டித்தன மூடச் சகதியிலிருந்து அறிவியல் பகுத்தறிவு மொழியாக வளம் பெற வேண்டும், வளர்க்க வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு!

**- 'விடுதலை' ஞாயிறுமலர், 15.07.2017**

# பொருளடக்கம்

## பகுதி - 1
## தமிழ் காக்க முன்வாருங்கள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழுக்குத் தொண்டு | 13 |
| 2. | தமிழ் இந்நாட்டு பண்புக்கு ஏற்றமொழி | 14 |
| 3. | இந்நாட்டில் தமிழே மேலானமொழி | 15 |
| 4. | நமக்கு தமிழ்தான் உயர்ந்தமொழியாகும் | 16 |
| 5. | எங்கள் மொழி | 17 |
| 6. | அந்தந்த நாட்டில் அந்தந்த மொழி | 18 |
| 7. | நாம் தமிழர்கள் - பூர்வீகக் குடிகள் | 19 |
| 8. | ஆரியர் தாய்மொழி | 20 |
| 9. | தமிழ்ச் சொல் எங்கே? | 21 |
| 10. | தமிழ்நாட்டில் பார்ப்பனன் | 22 |
| 11. | ஆதாரம் ‘குடிஅரசு’ | 23 |
| 12. | தமிழ் காக்க முன்வாருங்கள் | 24 |
| | ● எந்த நாட்டின் பொது மொழி | 35 |
| | ● யாரை நீ கேட்க வேண்டும்? | 36 |


## பகுதி - 2
## கட்டாய இந்தி பார்ப்பனர்களின் தந்திரம்

| | | |
|---|---|---|
| 1. | ஆரிய கலாச்சாரத்தைப் புகுத்தவே சமஸ்கிருதம்! சமஸ்கிருதத்தைப் புகுத்தவே கட்டாய இந்தி!! | 38 |
| 2. | பார்ப்பனர் சர்வ ஜாக்கிரதையாக காரியம் செய்து வருகிறார்கள் | 40 |
| 3. | சமஸ்கிருத மொழி ஒரு செத்தமொழி (Dead Language) | 41 |

## பகுதி - 3
## ஆங்கிலம் ஏன் வேண்டும்?


1. நான் ஒரு பகுத்தறிவு நிபந்தனையற்ற முற்போக்குவாதி 52
2. இந்தி ஏன் வேண்டாம்? ஆங்கிலம் ஏன் வேண்டும்? 55
3. இந்தியாவுக்கு பொது மொழி ஆங்கிலம் 57
   - மொழியின் பண்புதான் முக்கியம் அளவு அல்ல 58


## பகுதி - 4
## உலக மொழி வரிசையில் தமிழ் இருக்க வேண்டும்


- மதத்தை பிரித்துவிட வேண்டும் 60

1. தமிழ்மொழியை முன்னேற்றும் வகையில் மாற்றம் செய்யுங்கள் 61
2. தமிழ் இலகுவாக்கப்பட வேண்டும் 62
3. ஒரு நியூட்டன் தோன்ற முடியவில்லையே 63
4. தமிழ் நூல்களை பார்ப்பனர் பாழாக்கிவிட்டனர் 64
5. தமிழில் ஆரியம் கலப்பு 65
6. இந்து மதம் - ஆத்திகம் - ஆரியம் கூடாது 66
7. இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? 67
8. புலவர்கள் 68
9. பாரதிதாசன் கவிதையைப் படி 69
10. மானம் - பகுத்தறிவு வளர்ச்சி - பண்பு 70
11. திருக்குறள் மக்களின் நல்வாழ்வுக்கு ஆன நீதி நூலாகும் 71
12. திருக்குறளைப் போற்றுங்கள் 73

## பகுதி - 5
## தமிழ்மொழி வளர்ச்சியும் தமிழர் மேன்மையும்


| | | |
|---|---|---|
| 1. | தமிழர்கள் முன்னேற்றம் - சுயமரியாதை - விடுதலை | 77 |
| 2. | பெரியார் நடத்திய மாநாட்டுத் தீர்மானங்கள்! | 78 |
| 3. | தமிழை விட மேலான ஒரு மொழி இந்நாட்டிலில்லை | 97 |
| 4. | தமிழை 'நீசபாஷை' என்று சொல்லும் மகாபாவிகளும் பார்ப்பனர்களில் இன்றும் உண்டு | 101 |
| 5. | நமக்கு பழந்தமிழ் கிடைத்துவிடும் | 103 |
| 6. | தமிழ் மொழி வளர்ச்சிக்காக செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் | 104 |
| 7. | எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது | 111 |
| 8. | பெரியார் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தமிழ்நாடு அரசு ஆணை | 112 |
| 9. | பெரியார் ஒரு தொலைநோக்காளர் | 113 |
| 10. | கல்வி இலாகாவில் தமிழர்களுக்கு எதிராக பார்ப்பனர்கள் | 117 |
| 11. | "உனக்குப் படிப்பு எங்கேடா வரப்போகிறது; எங்காகிலும் மூட்டை தூக்கு, போடா" | 121 |
| 12. | மதுவிலக்கு என்னும் சாக்கில் தமிழர்களின் கல்விக்கு எதிரான சதி | 126 |
| 13. | சங்கீதத் துறையிலும் தமிழர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும் | 129 |
| 14. | ஒரு முப்புரி நூலைச் சுமந்து இருக்குமானால்... | 136 |

| | | |
|---|---|---|
| 15. | பழைய நிலை எப்படிப்பட்டது என்று தெரியாத வாலிபர்கள்! | 140 |
| 16. | தமிழர் வாழ்வு 'மானமும் உயர்வும்' பெறவேண்டும் | 149 |


## பகுதி - 6
## தமிழ் அறிஞர்கள் போற்றிப் புகழும் 'பெரியார்'


| | | |
|---|---|---|
| 1. | பெரியார் சொல்வதன் பொருள் | 157 |
| 2. | பெரியார் தொண்டு மிக விரைவில் வெற்றி காண இருக்கிறது | 160 |
| 3. | பெரியார் ஒருவரே | 161 |
| 4. | பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார் | 162 |
| 5. | இராவண காவிய ஆசிரியர் புலவர் குழந்தை | 162 |
| 6. | முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன் | 163 |
| 7. | திருக்குறள் வீ.முனுசாமி | 163 |
| 8. | பின் சரித்திரங்களில் எழுதப்படும் தீரபுருஷன்! | 164 |
| 9. | பெரியார் என்னும் பெரும் பேரரசனை இழிப்புரை சொல்வதா? சொல்லியிங்கிருப்பதா? | 165 |
| 10. | எவன் பிறந்தான் இதுவரை? | 167 |



## இணைப்பு


| | | |
|---|---|---|
| 1. | பார்ப்பனர்கள் தமிழர்களா? | 169 |
| 2. | தமிழ்த் தாத்தா என்ன சொல்லுகிறார்? | 172 |

# பகுதீ - 1

## தமிழ் காக்க முன்வாருங்கள்

# 1. தமிழுக்குத் தொண்டு




நான் தமிழுக்குத் தொண்டு செய்வது தமிழுக்காக என்று அல்ல. தாய் மொழியைப் பாதுகாத்தல் ஒவ்வொருவருடைய கடனாகும். நம் தமிழ் மொழி தாய் மொழி என்ற மட்டிலும் அல்லாமல் எல்லா வளப்பங்களும் கொண்ட சிறந்த மொழி. இந்தியாவிலேயே பழைமை வாய்ந்த பண்பட்ட மொழியாகும். அப்படிப் பெருமைக்குரிய மொழிக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை எதிர்த்தும் அது மேன்மை அடைய வேண்டும் என்றும் அதற்காகப் போராட்டங்கள் நடத்துகின்றோம்.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 20.6.1959**

❒

# 2. தமிழ் இந்நாட்டு பண்புக்கு ஏற்றமொழி



தமிழ் இந்நாட்டு சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைந்துள்ளது. இந்நாட்டு நல்வாழ்வுக்கு, பண்புக்கு ஏற்ப அமைந்துள்ளது.

**- தந்தை பெரியார்,**

**நூல் : எழுத்துச் சீர்த்திருத்தம்**

❒

# 3. இந்நாட்டில் தமிழே மேலானமொழி



நமது மேன்மைக்கு, தமது தகுதிக்கு, நமது முற்போக்குக்கு ஏற்றமொழி தமிழை விட மேலான ஒருமொழி இந்நாட்டில் இல்லை

**- தந்தை பெரியார்,**

**நூல் : எழுத்துச் சீர்த்திருத்தம்**

❒

# 4. நமக்கு தமிழ்தான் உயர்ந்தமொழியாகும்




தமிழ்நாட்டு மக்களின் வழக்கங்கள் யாவும் பெரிதும் ஆண், பெண் இருபாலர்க்கும் பகுத்தறிவு என்ற அடிப்படையின் மீதும் அமைந்திருக்க காண்கிறோம். நம் நாட்டு சீதோஷ்ண நிலையைப் பொருத்தும் கருத்துக்களின் செழுமையைப் பொருத்தும் நமக்குத் தமிழ் தான் உயர்ந்த மொழியாகும்.

**- தந்தை பெரியார்**

**நூல் : எழுத்துச் சீர்த்திருத்தம்**

❒

# 5. எங்கள் மொழி




எங்கள் நாட்டு ஆட்சி எங்களுக்கு வேண்டும். எங்கள் நாட்டுக்குள் எங்கள் மொழி அல்லாதது ஆட்சி மொழியாக, தேசிய மொழியாக, கல்வி மொழியாக இருக்கக் கூடாது. இந்தியை வலியுறுத்தும் ஆட்சி எங்கள் (தமிழ்) நாட்டிற்கு வேண்டாம்.

- தந்தை பெரியார்,

‘விடுதலை’, 21.7.1955

❒

# 6. அந்தந்த நாட்டில் அந்தந்த மொழி




அந்தந்த நாட்டில் அந்தந்த மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும். அந்தந்த நாட்டு மொழியிலேயே சர்க்கார் நடக்க வேண்டும். அந்தந்த நாட்டுக் கலையே பொது அறிவுக்கு உணவாக இருக்க வேண்டும்.

**- தந்தை பெரியார்,**

**'குடிஅரசு', 2.5.1948**

❐

# 7. நாம் தமிழர்கள் - பூர்வீகக் குடிகள்



நாம் தமிழர்கள்; இந்நாட்டின் பூர்வீகக் குடிகள்; நமது மொழி தமிழ் மொழி. நமது மொழிச் சொல்லை விட்டுவிட்டு வேறு ஒருவனுடைய சொல்லை நாம் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? அவனுடைய சொல்லை ஏற்றுக் கொண்டால் நாம் எல்லோரும் வேசி மக்கள் என்று சொல்லுகின்ற சம்பிரதாயங்களை எல்லாம் ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம்.

**- தந்தை பெரியார்,**

**நூல்: வாழ்க்கைத் துணைநலம்**

❒

# 8. ஆரியர் தாய்மொழி



இந்நாடு நம்முடைய நாடு; இந்நாட்டில் நாம் தமிழர்கள் 100க்கு 97 பேர்கள் வாழ்கிறோம். நமது நாட்டு மொழி தமிழ் மொழி. இந்த நிலையில் நமது மொழிக்கும், நம் கலாச்சாரத்திற்கும், நம் பழக்க வழக்கங்களுக்கும் சம்பந்தமில்லாத – நம் நாட்டு மக்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கு 3 பேராக உள்ள – இந்நாட்டிற்குப் பிழைக்க வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்களுடைய தாய்மொழியாக உள்ளதும், எழுத்தே இல்லாததுமான சமற்கிருதம் என்னும் மொழிக்கு இன்று இருந்துவரும் செல்வாக்கு, தமிழுக்கு உண்டா? இவ்வாரியர் புகுதலுக்குப் பின் இருந்திருக்கிறதா?

**– தந்தை பெரியார்,**

**‘விடுதலை’, 15.2.1960**

# 9. தமிழ்ச் சொல் எங்கே ?



ஆச்சாரியார், 'இந்தி புகுத்துவதால் தமிழ் கெடாது' என்று மனதறிந்த பித்தலாட்டம் பேசுகிறார். இன்று தமிழ் எங்கே இருக்கிறது? தமிழ்ப் பழக்க வழக்கம், சுதந்திரம், மானம் ஆகியவைகளை உணர்த்தும் தமிழ் வார்த்தைகள் எங்கே? ஒரு தமிழ் மகன் தன் மகளுக்கோ, மகனுக்கோ கலியாணம் செய்ய வேண்டுமானால் தமிழ்ச் சொல் எங்கே? தமிழ்க் கருத்தினால் - 'வாழ்க்கைத் துணைநலம்' என்பான். ஆனால், ஆரியக் கருத்தில் பேசும்போது 'கல்யாணம்', 'விவாகம்', 'கன்னிகாதானம்' என்கிறான். வார்த்தை வரும்போது கருத்தும் மாறிவிடுகிறது. இதற்குத் தகுந்தபடி புரோகிதம், சடங்கு, செலவு, பார்ப்பான் பிழைக்க வழி ஏற்படுவதல்லாமல் - வாழ்க்கைத் துணை என்பதில் சம உரிமையும், கன்னிகாதானம் என்பதில் ஆண்டான் அடிமைத்தன்மையும் புகுத்தப் பட்டுவிடுகிறது. இம் மாதிரியே ஆரியக் கலப்பால் தமிழின் தன்மை, உரிமை, நேர்மை எல்லாம் கெட்டு, ஆரியருக்குத் தமிழன் அடிமை என்பதுதான் மிஞ்சி விடுகிறது. அப்படி இருக்கும்போது இனியும் ஆரியப் பாஷையைக் கட்டாயமாக்கினால் என்ன ஆகும்?

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 30.6.1938**

❒

# 10. தமிழ்நாட்டில் பார்ப்பனன்




தமிழ் நாட்டில் பார்ப்பனன் தேசத் துரோகி, மொழித் துரோகி, கலைத் துரோகியாய் இருந்து இந்தியைக் கொண்டு வந்து பேய்த் தன்மையில் புகுத்துகிறான்.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை',** 17.10.1954

❐

# 11. ஆதாரம் 'குடிஅரசு'



நான் இந்தியை 1924, 1925 முதலே எதிர்த்து வருகிறேன். அதற்கு ஆதாரம் 'குடிஅரசு'ப் பத்திரிகையில் பார்க்கலாம். இன்றைய இந்தி எதிர்ப்புத் தோழர்களும் மற்றும் அநேகரும் வெகுநாள்களாகவே தமிழ்நாட்டிற்கு இந்தி ஏன் என்று எதிர்த்து வந்திருக்கிறார்கள்.

இந்தி என்றால் பார்ப்பன மொழி என்றுதான் அர்த்தம். 'டிக்சனரியை'ப் பாருங்கள்! பார்ப்பன மொழியை, பார்ப்பனரல்லா தாருக்குக் கட்டாயமாகப் புகுத்தினால் பார்ப்பனரல்லாதாருக்கு வீரமும், அறிவும், மானமும் இருந்தால் ஒப்புக் கொள்ள முடியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

**- தந்தை பெரியார்,**

**'குடிஅரசு', 10.7.1938**

❒

# 12. தமிழ் காக்க முன்வாருங்கள்

பேரம்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இந்த மாநாடு இந்தி எதிர்ப்பு மாநாடு என்ற பேரால் துவக்கப்பட்டிருந்த போதிலும், நமது மாகாணத்தில் ஆட்சியாளர்கள் இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டுவந்து புகுத்தியுள்ளார்களே, அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும். என்று சிந்தித்து முடிவு செய்யவே இம்மாநாடு கூட்டப்பட்டதாகும்.

இம்மாநாட்டில் செய்யப்படப்போகும் முடிவு ஓரளவுக்கு முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கூடியதேயாகையாலும், எதிர்த்துப் போராடினாலன்றி இந்தி இம்மாகாணத்தைவிட்டு ஒழியாது என்பதும், ஓரளவுக்கு உய்த்துணரக்கூடியதேயாகையாலும் இவ்வாறு தலைப்புக் கொடுத்து மாநாடு கூட்டப்பட்டுள்ளது. இம்மாநாடு தனிப்பட்ட கட்சிக்காரரோ, தனிப்பட்ட மதத்தவரோ அல்லது தனிப்பட்ட ஒரு கோஷ்டியாரோ நடத்தும் மாநாடாக இல்லாமல், திராவிட மக்கள் அல்லது தமிழ் மக்கள் எல்லோருடையவுமான மாநாடாக நடைபெறுகிறது.

இம்மாகாண முஸ்லீம்லீக் பிரதிநிதியாக தோழர் அப்துல் மஜீத்தும், கிறிஸ்துவர் பிரதிநிதியாக தோழர் அருள் தங்கையா அவர்களும், தாழ்த்தப்பட்ட திராவிடர்கள் பிரதிநிதியாக தோழர் வி.பி.எஸ். மணியார் அவர்களும், தமிழ்ப் புலவர்கள், கவிவாணர்கள், இலக்கிய நிபுணர்கள் இவர்கள் பிரிதிநிதியாக வணக்கத்துக்குரிய மறைமலை அடிகளாரும், பெரியார் கல்யாண சுந்தரனாரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள்.

ஆகவே, இதை யாரும் சுலபத்தில் சுயமரியாதைக்காரர் மாநாடு என்றோ, கருப்புச்சட்டைக்காரர்கள் மாநாடு என்றோ, நாஸ்திகர்கள் மாநாடு என்றோ கூறிவிட முடியாது. திராவிடர் கழகத்தவர் மாநாடு என்றும் யாராலும் கூறிவிட முடியாது, ஏன்?

**பல கட்சி பிரமுகர்கள்**

தொழிலாளர் இயக்கம் தவிர்த்து வேறு எந்த இயக்கத்திலும் வெகுவாக ஈடுபடாதவரான நண்பர் திரு.வி.க. அவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். மேலும் நமது எதிர்க்கட்சியாக கருதப்பட்டு வரும் காங்கிரஸ் பிரமுகரும் அதுவும் இன்றும் அமைச்சர் பதவியில் வீற்றிருப்பவர்களுக்கு அப்பதவிகளை அடைய பேருதவி செய்தவருமான தோழர் சிவஞான கிராமணியாரும், தமிழ் எழுத்தாளர் தலைவர் நாரண துரைக்கண்ணன் அவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள். தோழர் துரைக்கண்ணன் அவர்களை நான் இன்றுதான் சந்தித்தேன். தோழர் கிராமணியார் அவர்களை இன்று சந்தித்துப் பேசுவது 3ஆவது முறைதான். முதல்முறை வெறும் கும்பிடு போட்டேன். இரண்டாவது இலேசாகப் பேசியிருக்கிறேன். இன்றுதான் மூன்றாம் முறையாக சந்திக்கிறேன். மற்ற எக்கட்சியிலும் சேராத தோழர் டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி அவர்களும் உற்சாகத்தோடு இதில் பங்கெடுத்துக் கொண்டுள்ளார். தோழர் பாரதிதாசன் அவர்கள், சி.என். அண்ணாதுரை அவர்களும் கலந்து கொண்டுள்ளனர். மற்றும் சென்னைக்கு வெளியில் இருந்து, தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுமார் இரண்டாயிரம், மூவாயிரம் பேர்களுக்குமேல் வந்து கலந்து கொண்டுள்ளார்கள். தாய்மார்களும் ஏராளமாக வந்து கலந்து கொண்டுள்ளார்கள். போதிய அவகாசம் மட்டும் கொடுத்திருந்து மாநாட்டை நடத்தியிருப்போமானால் இம்மாநாட்டுக்கு தூத்துக்குடியையும் தோற்கடிக்கும் அளவுக்கு ஜனத்திரளை சமுத்திரம்போல் கூட்டியிருக்கலாம். மற்றும் விருதுநகர் வி.வி. ராமசாமி, பி. பாலசுப்ரமணியம், டி. சண்முகம் ஆகிய தோழர்களும் வந்திருக்கிறார்கள்.

ஆகவே, ஏதோ அரசியல் போட்டா போட்டிக்காக கூட்டப்பட்ட மாநாடல்ல இது. இன்று நடைபெற்று வரும் மாகாண ஆட்சியைக் கவிழ்த்தே ஆக வேண்டும் என்ற கருத்தில் அல்ல. இம்மாநாடு கூட்டப்பட்டிருப்பது, இன்று நடைபெற்று வரும் அரசாங்கத்தை பொதுமக்கள் சுயராஜ்ய அரசாங்கம் என்றுதான் இன்னமும் கருதி வருகிறார்கள். அப்படியே பலர் நினைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அரசாங்கத்தாரும் அப்படித்தான் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள். அத்தகைய சுயராஜ்ய சக்காரை லேசில் கவிழ்த்துவிட முடியாது என்பதும் எங்களுக்குத்

தெரியும். கவிழ்க்க வேண்டுமென்ற விருப்பமும் நமக்கில்லை. மறுபடியும் வெள்ளையனே வந்து ஆட்சிபுரிய வேண்டும் என்ற மனப்பான்மையும் நமக்கில்லை. மேலும் இன்று நடக்கும் மாகாண ஆட்சியைக் கவிழ்ப்பதில் எவ்விதப் பயனுமில்லை.

மாகாண ஆட்சியைக் கவிழ்ப்பதென்றால் ரெட்டியாரையும் பக்தவத்சலத்தையும், அவினாசிலிங்கனாரையும் ஆகிய இவர்களைத்தான் நாம் கவிழ்க்க வேண்டும். இவர்களைக் கவிழ்ப்பதால் நமக்குத்தான் புண்ணியமென்ன? இவர்கள் இல்லாவிட்டால் ஓர் அய்யரோ ஓர் அய்யங்காரோ தான் இவர்களுக்குப் பதிலாக மந்திரியாக இருப்பார்.

ஆகவே, இவர்கள் இருப்பது நமக்கு முழு திருப்திதான், இதையும் நாம் ஓரளவுக்கு நமது வெற்றியாகவே கருதுகிறோம். இந்த அளவுக்கேனும் வெற்றி கண்டுவிட்டோமே என்று கொஞ்சம் பெருமைகூட அடைகிறோம்.

இதற்கு மேலும் வெற்றி கிடைத்து மந்திரிகளை நியமிக்கும் உரிமை எனக்கே வந்துவிடுவதாக வைத்து கொள்வோம். அப்போதுக்கூட இத்தனை திராவிடர்களை மந்திரியாகப் போட நானே கொஞ்சம் அச்சப்படலாம் அல்லது வேறு யாராவது என்னை ஏமாற்றினாலும் ஏமாற்றி விடலாம். ஆகவே இவர்களைப் பதவியிலிருந்து வெளியேற்றும் எண்ணம் நமக்குச் சுத்தமாக இல்லவே இல்லை.

10 ஆண்டுகளுக்கு முந்தி மந்திரிசபையில் இருந்த ஆதிக்கம் வேறு. இன்றுள்ள ஆதிக்கம் வேறு. 10 ஆண்டுகளுக்கு முந்தி இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வந்தபோது தோழர் ராஜகோபாலச்சாரியார் பிரதம மந்திரியாயிருந்தார். அவரே மேற்படி திட்டத்தையும் கொண்டு வந்தார். இன்றோ நிலைமை வேறு. இன்று முதன் மந்திரியார் ரெட்டியார், கல்வி மந்திரியார் அவினாசியார். இருவரும் நம்மவர்கள்; திராவிடர்கள். இவர்களோடுதான் போராட வேண்டிருக்கிறது. எவனோ வைத்த வினைக்கு அண்ணன் - தம்பிகள் சண்டையிட்டுக் கொள்வதுபோல் இருக்கிறது. இதனால்தான் முன்னைய கட்டாய இந்தி அன்றிருந்த அளவுக்கு போதிய உற்சாகம் இன்று கிளம்புவது கஷ்டமாயிருக்கிறது.

இவர்கள் தங்கள் இடங்களைக் காலி செய்துவிட்டு இரண்டு பார்ப்பார்னர்களிடம் தம் பதவியை ஒப்புவித்து விடுவார்களானால்,

இன்றேகூட இரண்டிலொன்று பார்த்து விடுவோம். அத்தகைய துணிவு பிறந்துவிடும்.

**வலது கை இடது கையை அடிக்கும் நிலை!**

இன்றுள்ள நிலையோ வலது கை இடது கையை அடிப்பதாகத்தான் இருக்கிறது. இருந்தபோதிலும் இங்கு கூடியுள்ள தாய்மார்களையும், சிறுவர், சிறுமிகளையும் பார்க்கும்போது மந்திரிகளுக்கு அவர்களுடைய பதவியைப் பாதுகாத்துக் கொடுப்பதைவிட இவர்களின் தன்மானத்தைப் பாதுகாத்துத் தருவதுதான் நமது முக்கிய கடமை என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

போன தடவை ராஜகோபாலாச்சாரியார் மந்திரியாக இருந்தார். அப்போது அவர் தமது ஆட்சியை ஒழிக்கப் பார்க்கிறோம் என்று குற்றங்கூறி தப்பிக்கப் பார்த்தார். இன்றோ அத்தகைய சாக்குப்போக்கு சொல்ல முடியாது. ரெட்டியாராலோ, அவினாசியாராலோ, உள்ளப்படி சொல்கிறேன், ஓமந்தூராருக்கும் எனக்கும் என்ன விரோதமிருக்கிறது, அவரைக் கவிழ்க்கப் பார்க்கிறேன் என்று சொல்ல? ஒரு சீனியர் வக்கீல் தன்னிடம் வேலை கற்றுப் பழகிய ஒரு ஜூனியர் வக்கீலுக்கு நீதிபதி உத்தியோகம் கிடைத்தால் அதை எவ்வளவு பெருமையாகக் கொள்வாரோ, அவ்வளவு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். நான் ரெட்டியார் பிரதம மந்திரியாக இருப்பது குறித்து, நான் காங்கிரஸில் இருந்தபோது என்னுடைய கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு என்னுடன் வந்தவர் தானே இவர். நான்தானே ஒவ்வொரு முறையும் இவரைத் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு அங்கத்தினராக நியமித்தேன். அவருக்கு என்னிடத்தில் எவ்வளவு அன்பும், மரியாதையும், பக்தியும் உண்டென்று அவரையே கேட்டுப் பாருங்கள் தெரியும். அவர் மந்திரியாராகும் முன் அதுவரை அவர் ஈரோட்டு பக்கம் வந்தால் என்னைப் பார்க்காமல் திரும்ப மாட்டாரே! அப்படிப்பட்ட ஒருவர் பிரதம மந்திரியாராக வந்திருப்பது குறித்து நான் அகமகிழ்வேனா அல்லது அவரை ஒழிக்கப் பார்ப்பேனா? அன்று அவருடைய பதவிக்கு போராட்டம் வந்த காலத்து முடிவறியும் ஆவலுடன் தூக்கமின்றி எவ்வளவு நேரம் கண்விழித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா நான். ஆகவே அவரை ஒழிக்கப் பார்க்கிறேன் என்று என்மீது அவரால்கூட கண்டிப்பாக குற்றம் சாட்டமுடியாது.

அடுத்தபடியாக கல்வி மந்தியாரை எடுத்துக் கொண்டாலோ, அவர் என் ஜில்லாக்காரர், எங்கள் குடும்பத்துக்கும், அவருடைய குடும்பத்துக்கும் நெருங்கிய சம்பந்தமும் மொய்முறை வழங்கலும் உண்டு. மேலும், அவர் என்னுடைய நம்பிக்கைக்கு வேறானவரும் அல்ல. இன்னும் கூறப்போனால் தம்முடைய சட்டசபைப் பதவியைக் கூட ஒருசமயம் எனக்காக விட்டுக்கொடுக்க வேண்டிய ராஜாஜியை அழைத்துக்கொண்டு என் வீடு தேடி வந்தவர்தான் அவர். அதுவும் நான் காங்கிரசை விட்டு வெளியேறி, எதிர்க்கட்சியில் இருந்தபோது இது நடந்ததாகும். இப்படியிருக்க அவர் ஒழியவேண்டுமென்றா நான் நினைப்பேன்? எந்த காங்கிரஸ் மந்திரிகளைப் பற்றி நாணயக் குறைவான எண்ணம் எனக்கிருந்தாலும், இந்த இரண்டு பேர்களுடைய நாணயத்தில் எனக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் கிடையாதே. இவர்கள் லஞ்சம் வாங்குவதில்லை என்று உறுதி கூறி, உன்னால் கொதிக்கும் எண்ணெயில் கைவிட முடியுமா என்று கேட்டால், உண்மைக்காக கொதிக்கும் எண்ணெய்க்கு கையைச் சுடாமல் செய்ய சக்தி இல்லாவிட்டாலும், கை வெந்தாலும் பரவாயில்லை என்று என் கையைக்கூட எண்ணெயில் விடத் தயாராயிருப்பேனே நான்! இருவரும் குற்றமற்றவர்கள்தான். சுயநலமற்றவர்கள்தான்.

என்றாலும், இவர்களுடைய அடிமைப் புத்திக்கு நான் என்ன செய்யட்டும்? அந்த அடிமைத் தனத்திலிருந்து அவர்களால் மீள முடியவில்லையே. அவர்களுடைய பதவியைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களுக்கும் வேறு வழியில்லையே, பதவிப்பித்து இல்லாவிட்டால், அந்த அடிமைப் புத்தி இல்லாவிட்டால், இந்தி தமிழைக் கெடுக்கும் என்று அறிந்திருந்தும் அதைத் தமிழ்நாட்டில் நுழைய விட்டிருப்பாரா தன் புத்தியைத்தான் அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பாரா?

ஆகவே, நாம் இந்தியை எதிர்ப்பது மந்திரி சபை மீது நமக்குள்ள விரோதத்தாலோ, காங்கிரஸ் கட்சியின்மீது நமக்குள்ள விரோதத்தாலோ அல்ல என்பதை எல்லோரும் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். இந்தியால் வர இருக்கும் கேடு கருதித்தான் அதை வன்மையாக எதிர்க்கிறோம்....

நமது குழந்தைகளுக்கு 1ஆம் வகுப்பு, 2ஆம் வகுப்பு படிக்கக்கூட பள்ளியில் இடமில்லை என்று நகர்ப்புறங்களில் கூறப்படுகிறது. அதாவது போதிய பள்ளிக்கூடங்களில்லை, வாத்தியார்கள் இல்லை என்றாலும் ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு இந்தி வகுப்பும் இந்தி

வாத்தியாரும் வைத்துக் கொள்ள வேண்டுமாம். யார் அப்பன் வீட்டுப் பணம் கொள்ளை போவது இதற்கெல்லாம்? ஏற்கெனவே பஞ்சத்தில் அடிப்பட்டுப் பஞ்சைப்பராரிகளாகக் கிடக்கிறோம். மேற்கொண்டு பள்ளிக்கூடப் பிள்ளைகள் சம்பள உயர்வு வேறு. ரூ. 2-12 கொடுத்தவர்கள் இப்போது ரூ. 5-4 கொடுக்க வேண்டும். ரூ. 5-4 கொடுத்தவர்கள் ரூ. 7-9 கொடுக்க வேண்டும். முன்பு 8 மாதம் சம்பளம் கொடுத்தவர்கள் இப்போது இந்த உயர்ந்த தொகையை 10 மாதம் கொடுக்கவேண்டும். இந்தி நுழைவு கல்வித் துறையில் பெருத்த சங்கடமென்றால் கலைத்துறையிலும் அதைவிட சங்கடந்தான்.

### கலைகள் உண்டா?

இந்தி மொழியில் மெச்சத்தகுந்த கலைகளே கிடையாது. அதிலுள்ள கலையாவும் துளசிதாஸ் ராமாயணமும், கபீர்தாஸ் சரித்திரமும்தான். மனுதர்மமும் தெரியுமே, உங்களுக்கு? இந்தி மொழி தலைசிறந்த அறிஞர்களைப் பெற்றெடுக்கவில்லை என்று திரு.வி.க அவர்கள் குறிப்பிட்டார். இந்தி உற்பத்தி செய்த அறிவாளிகள் யார் என்றால் நோகாமல் பதவிக்கு வந்த நேருவையும் அவரது அய்யாவையுந்தான் குறிப்பிடவேண்டும். அவர்களது தியாகம் இன்று அந்தக் கூட்டம் குடும்பத்தோடு கொள்கை அடிப்பது (உங்களுக்குத் தெரிந்தது) தான். வேறு ஆள்களைக் குறிப்பிடமுடியாது.

தமிழ் மொழியோ எண்ணற்ற கலைகளையும், கலைஞர்களையும், அறிஞர்களையும், சித்தர்களையும், முக்தர்களையும் தோற்றுவித்திருக்கிறது. இந்தியில் கலையில்லை. காவியமில்லை, நீதிநூல் இல்லை, நீதிமான்களையும் தோற்றுவிக்கவில்லை. அம்மொழி மூலம் அறியக்கிடக்கும் விஞ்ஞானத் தத்துவங்களும் இல்லை. ஆகவே, 100க்கு 97 பேர் விரும்பாத அம்மொழி ஏன் இங்கு புகுத்தப்பட வேண்டும்? காரணம் தெரியுமா? இங்குள்ள வைத்தியநாதய்யர், வரதாச்சாரியாரின் கோஷ்டியார் இத்திராவிட நாட்டின் கலைகளையும், கலாச்சாரத்தையும் அடியோடு அழித்து இந்நாட்டை, வடநாட்டுக்கு வால்நாடாக்கப் பார்க்கிறார்கள், அதுதான் மர்மமே ஒழிய, இந்தி தேசிய மொழி, ஆகவே எல்லோரும் படிக்கவேண்டும் என்று கூறுவதெல்லாம் முழுப் பித்தலாட்ட வார்த்தைகள், இந்தி தேசிய மொழியாயின் எல்லோரும் கட்டாயமாக இந்தியைப் படித்துத்தான் ஆகவேண்டும் வெளிப்படையாகக் கண்டிப்பாகக் கூறிவிடட்டுமே.

இந்தி, சமஸ்கிருதம் படியுங்கள் என்கிறார்களே அது ஏன்? இந்தி தேசிய மொழியா? சமஸ்கிருதம் தேசிய மொழியா? நீங்கள் சற்று அருள்கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள். உண்மை அறியுங்கள்.

### தேசியம் என்பது ஒரு பித்தலாட்டம்

தேசியம் என்பதெல்லாம் பித்தலாட்டங்கள், வடமொழியை நுழைத்து அதன் மூலம் வர்ணாஸ்ரமத்தை நுழைத்து பெருமைமிக்க திராவிடர்களை சூத்திரர்களாக்கி, என்றென்றும் அடிமைகளாக ஆக்கி வைத்துக்கொள்ள வைத்தியநாதய்யர், வரதாச்சாரிக் கூட்டம் செய்யும் பச்சைப் பித்தலாட்டம்தான் இது. நமது தாய்மார்களைச் சூத்திரச்சிகளாக, நமது ஆடவர்களைச் சூத்திரர்களாக, நமது பழங்குடி மக்களைப் பஞ்சமர்களாக சண்டாளர்களாக, நமது கிருஸ்துவத் தோழர்களையும், முஸ்லீம் தோழர்களையும் மிலேச்சர்கள் ஆக வைத்திருக்க செய்யப்படும் சூழ்ச்சிதான் இது.

இந்த சூழ்ச்சிகளுக்கு நமது அமைச்சர்கள் விபீஷணர்களாக ஆகிவிட்டார்களே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. இந்தி நுழைவால் உண்மைத் தமிழ் மக்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படாது. கடுகளவு பயன்கூட ஏற்படாது. அதற்கு மாறாக எவ்வளவோ கேடுகள் வந்து சூழும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் போற்றிக் காப்பாற்றி வந்து இடைக்காலத்தில் கைவிட்டு தற்போது வெகு கஷ்டப்பட்டு பெற்று வளர்ந்துவரும் தமிழ்ப் பண்பு அடியோடு கெட்டுப்போகும், கன்னியாதானம் என்பதை வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் என்று மாற்ற எவ்வளவு சிரமப்பட வேண்டி இருந்தது. மாங்கல்யதாரணம் என்பதை ஒழிக்க எவ்வளவு இம்சைப்பட வேண்டியிருந்தது? மற்றும் தேவையில்லாத சடங்குகள், புராண இதிகாச குப்பைகளின் மீதும், வெறும் கற்கடவுள், செம்புக்கடவுள் இவற்றின் மீதும் இருந்து மூடநம்பிக்கையையும், மூடப்பக்தியும் மாற்ற எவ்வளவு காலம் ஆகியது?

### முற்போக்கு மீண்டும் அழிவதா?

இவ்வளவு முற்போக்கும் மறுபடியும் அழிந்து போக வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுவீர்களா? சூத்திரன் என்ற வார்த்தையைக் கைவிட்டு திராவிடன் என்று பெருமிதத்தோடு கூறிக்கொள்ளும் நீங்கள் மறுபடி சூத்திரர்களாக மாற விருப்பம்

கொள்வீர்களா? இந்த முற்போக்கைக் கண்டு அஞ்சும் ஆரியக் கூட்டம், பார்ப்பனக் கூட்டம் வடநாட்டாரின் கூலிகளாகி அவர்களுக்கு வால் பிடித்து நம்மவர் சிலரை விபீஷணர்களாக்கிக் கொண்டு தேசிய மொழி என்ற பேரால் நம்மீது வடமொழியைச் சுமத்துகிறது என்றால், நம்மை, நம் நாட்டை வடநாட்டாருக்குக் காட்டிக் கொடுக்கிறதென்றால் நான் அதற்கு இடம் கொடுக்கலாமா?

தோழர்களே! தாய்மார்களே! இந்தியோடு, வடநாட்டாரையும் சேர்த்து ஒழிக்க வேண்டியதுதான், அதற்கான அவசியம் ஏற்பட்டுவிட்டது திராவிடர் - ஆரியர் போராட்டம், அதுவும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இடையறாது இருந்துவரும் இப்போராட்டம் இன்று ஒரு முடிவான கட்டத்திற்கு வந்துவிட்டது. இதை முடித்து வைப்பது நமக்குப் பெருமையும்கூட. நமது பின் சந்ததியார் போற்றிப் புகழக்கூடிய ஒரு அரிய சந்தர்ப்பத்தில் நாம் இன்று இருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் நாம் எதிர்காலத்தில் பின் சந்ததியாரால் எள்ளி நகையாடப் படுவோம் என்பதோடு அவர்களின் - துன்பத்திற்கும் அடிமைத்தனத்துக்கும் நாமே காரண பூதர்களாகவும் ஆகிவிடுவோம்.

போராட்டத்தைத் துவக்குவோம். மானமுள்ள மக்களாகப் போராடுவோம். மானத்தோடு போராடி மடிந்தாலும் தவறில்லை. பின் சந்ததியார் மேலும் வீரத்தோடு போராடி நாம் விட்டுச் செல்லும் பணியைப் பூர்த்திக்குக் கொண்டுவருவார்கள். திராவிடர்கள் மானத்திற்கும், வீரத்திற்கும் பேர் போனவர்கள். ஆகவே இவற்றைக் கைவிடாதீர். குண்டுபட்டு இறந்தீர்கள் என்றாலும் குண்டு மார்பில் பாய்ந்திருக்கட்டும். முதுகில் பாயும்படி நடந்து கொள்ளாதீர்கள். என்றாயினும் ஒருநாள் சாகப்போகிறவர்கள்தான் நாம். ஆகவே நல்ல காரியத்திற்காக நம் உயிரை நல்ல முறையில் அர்ப்பணித்துச் சாவோம்.

மந்திரிகள் நம்மவராயிற்றே என்ற நினைப்பை மறந்து விடுங்கள். நம்மவர்கள் மந்திரி பதவியை நேரிடுமே என்ற பயத்தையும் விட்டொழியுங்கள். ஒரு ஓமாந்தூராரின் இடமோ, ஒரு அவனாசியாரின் இடமோ காலியாகுமானால் அந்த இடத்தைப் பார்ப்பனர்களைக் கொண்டு அடைக்க முடியும் என்று நினைக்காதீர்கள். தமிழ்நாடு

இன்றுள்ள நிலையில் அது சுலபத்தில் சாத்தியமானதல்ல. ஆகவே, இந்தியை ஒழித்துக் கட்டுவதில் நாம் யாவரும் ஒன்றுபட வேண்டும். இதில் நம் இளைஞர்களுக்கு பெற்றோர்களுக்கும் பேத உணர்ச்சி ஏற்படக்கூடாது. இந்தி படித்தால் தம் மக்களுக்குக் கேடு என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து அதை ஒழிக்க முன்வரவேண்டும். நம்மிடையே உள்ள பேத உணர்ச்சிகளை விட்டொழிக்க வேண்டும். சின்னஞ்சிறு குற்றங்களை மறந்து நேரடியாகப் போராட்டத்தில் வந்து ஒவ்வொருவரும் கலந்துகொள்ள வேண்டும்.

இப்பொழுது நடக்கப்போவதுதான் உண்மையான ஆரிய - திராவிடப் போராட்டம். நம் மானத்தைப் பணயம் வைத்து நடத்தும் போராட்டம். இதில் ஏமாந்து போனால் பிறகு திராவிடர்களாக இந்நாட்டில் வாழமுடியாது. கண்டிப்பாக சூத்திரனாகத்தான் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். சர்க்காருக்கு நல்ல வீம்பு வந்திருக்கிறது. ஆகவே, எளிதில் நமக்கு விட்டுக் கொடுக்கமாட்டார்கள். ஆகவேதான் திரும்பத் திரும்பப் போராட்டத்தினிடையே அனுபவிக்க வேண்டியிருக்கக் கூடிய கஷ்ட நஷ்டங்களைப்பற்றிக் கூறவேண்டிய இருக்கிறது.

**அடக்குமுறை தீவிரம்**

நம்மை அடிப்பார்கள். நம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வார்கள். நமது தாய்மார்களை மானப்பங்கப்படுத்துவார்கள். வடநாட்டுப் பட்டாளத்தைக் கொண்டுவந்து நமது பெண்கள் மீது ஏவி விடுவார்கள். வீடு புகுந்து கொள்ளையடிக்கச் செய்வார்கள். அப்படிப்பட்ட நிலை கட்டாயம் வரும். அந்த நிலையை எப்படியும் ஆட்சியாளர்கள் வரவழித்துக் கொள்வார்கள். நமது நாட்டுச் சுதந்திரமும் தனிமையும் இந்தப் போராட்டத்தின் வெற்றியைப் பொறுத்தான் இருக்கிறது.

பிரிவினைக்கு இடம் கொடமால், இருக்கத்தான், நமது பிரிவினை உணர்ச்சியை அழிக்கத்தான், அவசர அவசரமாக இந்தியைக் கொண்டுவந்து புகுத்துகிறார்கள். இது அதிர்ஷ்டவசமாக எல்லோரும் ஒன்றுசேரக்கூடிய வாய்ப்பாக இருக்கிறது. மற்றக் காரியங்களில் நாமெல்லாம் சுலபத்தில் ஒன்று சேர முடியாது.

**இதுமொழிப் போராட்டம் மட்டுமல்ல. கலைப் போராட்டம், கலாச்சாரப் போராட்டம், மானபிமானப் போராட்டம் என்றுகூட சொல்லுவேன். இது**

**உரிமை வேட்கைப் போராட்டமாகும். இப்போராட்டத்தின் போது எந்த ஒரு திராவிடனாலும், எந்த ஒரு உண்மைத் தமிழ் மகனாலும் தூங்கிக் கொண்டிருக்க முடியாது.**

இதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். சில நாள்களுக்கு மாணவர்களுக்கு படிப்பில்லாவிட்டாலும் பரவாயில்லை என்று, தம் பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் இருக்கவேண்டியதுதான். மாணவர்கள் மட்டுமென்ன? அவர்களுக்கும் மனிதத் தன்மை வேண்டாமா? தன்மானம் வேண்டாமா? ஏழை மக்களிடமிருந்து வரிப்பணம் வாங்கி அதை இந்திச் சனியனுக்கா அழவேண்டும்? இந்த அவினாசியாருக்கு எந்த அளவுக்கு மூளையிருக்கிறதென்று பாருங்கள்!

ஒரு குழந்தையை 6 வயதில் அல்லது 7 வயதில் பள்ளியில் சேர்க்கிறோம். 12 வயதில், 5ஆம் வகுப்பு முடிகிறது. 19 வயதில் 6ஆம் பாரம் முடிகிறது. அப்புறம் கல்லூரிப் படிப்பு 4 வருடம். ஆக 23 அல்லது 24 வயதில்தான் பி.ஏ., பட்டம் பெற முடிகிறது. இதற்குள்ளாக எவ்வளவு பணம் வீணாக்கப்படுவது? இப்படிப்பால் பெறக்கூடிய பயந்தான் என்ன? இவ்வளவு கால செலவையும் பொருள் செலவையும் குறைக்க மந்திரியார் ஏதாவது திட்டம் தீட்டினாரா? அதிகப்படியான ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்தல், ஏழை எளியவர்கள் படிப்பதற்கான இலவசப் பள்ளிகள் ஏற்படுத்தல், கிராமம் தோறும் பாடசாலை இருக்கும்படி செய்தல் ஆகியவற்றிலும், தொழிற்கல்வியைப் பெருக்கல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துவதைவிட்டு, ஒன்றுக்கு உருப்படாத இந்த இந்தி மொழியை ஏன் கட்டி அழத் துணிந்துவிட்டார்? காரணம் இதுதான், பிரிவினை உணர்ச்சி தலைதூக்குமுன் அதை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள தன்மான உணர்ச்சி வேகமடையுமுன் அவர்களை அடிமைகளாக்க வேண்டும் என்று வடநாட்டாரின் திட்டத்திற்கு அடிபணிந்துவிட்டதுதான்.

ஆகவே, நாமாக வம்புக்குப் போகவில்லை. வம்பை வரவைத்துக் கொள்பவர் அரசியலார் தான். மறுபடியும் கூறுகிறேன்; இது அரசியல் போராட்டமல்ல, இனப்போராட்டம், கலைப்போராட்டம், மனிதத்தன்மை பாதுகாப்புப் போராட்டமென்று. தென்னாட்டவரின்

மனிதத் தன்மையை அறிந்து இதையும் ஆரிய வர்க்கத்தோடு சேர்த்துக்கொள்ள செய்யப்படும் சூழ்ச்சியின் முதல்படிதான் கட்டாய இந்தி நுழைப்பு.

ஆகவே, நாம் இதை எதிர்த்துத்தான் ஆகவேண்டும். ஒருவேளை ஆந்திரர்கள் ஆரியவர்க்கத்தில் சேர்ந்துவிடுவார்களோ என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது. எனவே எவ்வகையாயினும் இதை எதிர்த்துப் போராடியே தீருவோம். இப்போராட்டம் தென்னாட்டுச் சரித்திரத்தில், திராவிட நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய மகோன்னதப் போராட்டமாக அமையும். இப்போராட்டத்தில் வெற்றியின்றேல், தமிழ்நாடு போம். தமிழ்க்கொடி போம். தமிழன் சிறப்பெல்லாம் தகர்ந்து போம். நியாயம் நமது பக்கத்தில்தான் இருக்கிறது. மக்கள் ஆதரவும் நமது பக்கத்தில்தான் இருக்கிறது.

எங்களுக்கும் வயதாகிவிட்டது. நாங்களும் வெற்றி காண ஆசைப்படுகிறோம். ஆகவே, தன்மானத் திராவிடர்காள்!

தமிழர்காள்! வெற்றிகாணப் போராட்டத்தில் ஈடுபட முன்வாருங்கள் யார் எந்தக் கட்சியில் இருந்தாலும், தன்மானமாயிருந்தால் தமிழ் காக்க முன்வாருங்கள். சாவேன் அல்லது வெற்றியோடு மீள்வேன் என்ற உறுதியோடு முன்வாருங்கள். போராட்டத்தில் வெற்றிக்கு ஆக ஒழிந்துபடவும் தயாராக முடிவு செய்துகொண்டு முன்வாருங்கள். அப்போது தான் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

**- தந்தை பெரியார்**

**நூல் : 'இந்திப்போர் முரசு'**

❐

# எந்த நாட்டின் பொது மொழி



இந்தி மொழியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமாம். ஏனென்றால், அது இந்நாட்டின் பொது மொழியாம். இந்தி பொது மொழியென்றால் எந்த நாட்டின் பொதுமொழி? நாவலந்தீவு என்று ஒரு நாடு இருப்பது உண்மைதான். ஆனால் அதில் இரண்டு தனி நாடுகள் உண்டு. அவை தான் ஒன்று ஆரிய நாடு. ஒன்று திராவிட நாடு என்பனவாகும். இந்தி ஆரிய நாட்டின் பொது மொழியா? திராவிட நாட்டில் பொது மொழியா?

**- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,**
**நூல்: 'இந்திப் போர் முரசு'**

❒

# யாரை நீ கேட்க வேண்டும்?



இந்தியைப் படித்தால் நன்மை ஏற்படும் என்கிறாயே? அது என்ன உன்னுடைய உத்தேசமா? யாரைக் கேட்டாய் நீ? இந்தியால் நன்மை ஏற்படுமா? தீமை ஏற்படுமா என்று உனக்குத் தெரியுமா? இனி கேட்பதென்ன? மறைமலையடிகளாரும், திரு.வி.க. அவர்களும், “இந்தியாவில் தமிழ் கெடும், தமிழர்கள் கெட்டுப் போய் விடுவார்கள்” என்று கூறிவிட்ட பிறகு இக்கூட்டம் இதை ஒப்புக்கொண்ட பிறகு வேறு யாரை நீ கேட்க வேண்டும்? இவர்களைவிட தமிழ் அறிந்தவர்கள். தமிழில் தேர்ச்சி பெற்றவர்கள் வேறு யார்தான் இந்நாட்டில் இருக்கிறார்கள்.

**- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்,**

**நூல்: இந்திப் போர் முரசு**

❐

# பகுதி - 2

# கட்டாய இந்தி பார்ப்பனர்களின் தந்திரம்

# 1. ஆரிய கலாச்சாரத்தைப் புகுத்தவே சமஸ்கிருதம்! சமஸ்கிருதத்தைப் புகுத்தவே கட்டாய இந்தி!!

ஆரியர்கள் நம்மை முதலில் எப்படி அடிமைகொண்டார்கள்? பலத்தில் யுத்தம் நடத்தி வெற்றிபெற்றதன் மூலம் அல்லவே! தந்திரமாக தமது புராண இதிகாசங்களைக் கலைகளாக்கி, அவற்றை நம் மக்களிடையே புகுத்தினார்கள். அவற்றின் தத்துவத்தை - அத் தத்துவக் கடவுள், அவற்றின் தர்மங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒப்புக் கொள்ளும்படிச் செய்தனர். அதில் அவர்கள் வெற்றிபெற்று, அதற்கேற்ப மனுநீதிச் சட்டம் வகுத்து, நம்மைக் கீழ்மக்கள் - ஈனப்பிறவி ஆக்கினர். அதாவது, மதத்தை முதலில் நம்மை ஒப்புக்கொள்ளச் செய்த பிறகு நம்மைக் கீழ்மக்கள் என்று கூறும் சடடம் செய்துகொண்டனர். இதை உணர்ந்து மதத்தைக் கண்டிக்க நாம் ஆரம்பித்ததும், வேறு வழியில் - அதாவது, தேசியத்தின் பேரால் இந்தியைப் புகுத்தி அதன்மூலம் ஆரியர் கருத்துக்களைப் புகுத்தி - அதன் வழி நம் அறிவைப் பாழாக்க நினைக்கின்றனர். நமது பிரச்சாரத்தின்மூலம் மக்கள் ஓர் அளவுக்கு ஆரியக் கலாச்சாரத்திலிருந்து விடுதலை பெறவும், அதை வெறுக்கவும் முற்பட்டிருக்கிறார்கள்.

ஆதலால், குழந்தைப் பருவத்திலேயே ஆரியக் கலாச்சாரத்தைப் புகுத்த வேண்டி இந்தியை ஆரம்பப் படிப்பிலேயே புகுத்த முயற்சிக்கிறார்கள். மதத்தினால் புகுத்த முடியாமல்போன பித்தலாட்டக் கருத்துக்களை மொழியின் மூலம் புகுத்தச் சூழ்ச்சி செய்யப்படுகிறது. இந்திக்கும் சமஸ்கிருதத்திற்கும் அதிக பேதமில்லை என்பதை இந்தி ஆதரவாளர்களே ஒப்புக்கொள்கிறார்கள். மதம் செல்வாக்குடன் இருந்த சமயத்தில் நாம் சமஸ்கிருதம் படிக்கக்கூடாதென்றும் கூறிவந்தார்கள். திருப்பதி, இராமேசுவரம் முதலிய இடங்களிலுள்ள சமஸ்கிருதக்

கல்லூரிகளில், அதுவும் சர்க்கார் மானியத்தைக் கொண்டு நடைபெற்று வரும் இக்கல்லூரிகளில்கூட சமீபகாலம் வரை நம் மக்களுக்கு சமஸ்கிருதம் படிக்க வசதியளிக்கவில்லை.

நம் மக்களைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதேயில்லை. சர்க்கார் மானியம் அளிப்பதை நிறுத்திவிடுவதாகப் பயமுறுத்திய பிறகுதான் நம் பிள்ளைகளையும் அக்கல்லூரிகளில் சேர்க்க முற்பட்டார்கள். எல்லோருக்கும் சம உரிமை இருக்க வேண்டும் என்பதற்காக நாம் போராடினோமே ஒழிய, சமஸ்கிருதம் படிப்பதால் அறிவு விசாலம் அடையும் என்பதற்காக போராடவில்லை. நாம் இன்று சமஸ்கிருதம் ஆரிய மொழி என்றும், அது நம் திராவிடக் கலாச்சாரத்தை அடியோடு பாழ்ப்படுத்தி நிற்கும்மொழி என்றும், அதைப் படிப்பதால் மூட நம்பிக்கைக் கருத்துக்கள்தாம் வளர்ச்சியடையுமே யொழிய - ஆபாச அறிவுதான் வளர்ச்சி யடையுமேயொழிய - பகுத்தறிவு வளராது என்றும் பிரச்சாரம் செய்வதன் பயனாக, சமஸ்கிருதத்தைக் கட்டாயப் படுத்தும் வாய்ப்பற்றவர்களாய்ப் போய்விட்டார்கள். மேலும், அது பேசும் பழக்கத்தில் - உரையாடும் பழக்கத்தில் இல்லாது போய் விட்டதால் அதைக் கற்கும்படி வற்புறுத்த இயலாமல் போய்விட்டது.


எனவே, சமஸ்கிருதத்தின் மூலம் புகுத்த முடியாமற்போன பித்தலாட்டக் கருத்துக்களை அதன் வழிமொழியான இந்தியின் மூலம் புகுத்த முற்பட்டிருக்கிறார்கள். அரசியல் ஆதிக்கத்தின் உதவியால் இந்தியைப் புகுத்துவதில் வெற்றி காணலாம் என்று நினைத்திருக்கிறார்கள்.

**(தந்தை பெரியார், சென்னையில் 10.1.1950இல் சொற்பொழிவு)**

**- 'விடுதலை', 16.1.1950**

❐

# 2. பார்ப்பனர் சர்வ ஜாக்கிரதையாக காரியம் செய்து வருகிறார்கள்



சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பான் வாழமுடியும்; சுரண்டமுடியும்; நம்மைக் கீழ்ஜாதி மக்களாக ஆக்கமுடியும்; அவன் பிராமணனாக இருக்க முடியும். அதன் நலிவு, பார்ப்பன ஆதிக்கத்தின் சரிவு என்பதை உணர்ந்துதான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையாக - விழிப்போடு காரியம் செய்துவருகிறார்கள்.

இல்லாவிட்டால், உலகம் பூராவும் சுற்றி வருகிற சசிவோத்தம சர்.சி.பி. இராமசாமி அய்யர், 'சமஸ்கிருதந்தான் இந்தியாவின் அரசாங்க மொழியாக இருக்கவேண்டும்' என்று பேசிவருவாரா? அதுமட்டுமா? தமிழைத் தாய்மொழி என்று கூறுகின்ற பார்ப்பனரைக் காணமுடிவதில்லையே! தப்பித் தவறி எங்காவது ஒன்று இரண்டு சுட்டிக்காட்டுவீர்களானால் அது வயிற்றுப்பிழைப்பைக் கருதி அப்படி உதட்டளவில் கூறிய பார்ப்பனனாக இருக்கும், அவ்வளவுதான்.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 15.2.1960**

❒

# 3. சமஸ்கிருத மொழி ஒரு செத்தமொழி

## (Dead Language)

(சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பனர் வாழ முடியும், சுரண்ட முடியும், நம்மை கீழ் ஜாதி மக்களாக ஆக்க முடியும். அவர்கள் பிரமணனாக இருக்க முடியும் என்ற உண்மையை ஆய்வு நோக்கில் வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் கட்டுரை.

மேலும் திராவிடர் இனத்திற்கும், தன்மானத்திற்கும் உரிமைக்கும் பேராபத்து உருவாகாமல் தடுத்த இந்தி எதிர்ப்புப் போர்.

தமிழ்ப் பண்டிதர்களின் சுயமரியாதையை மீட்டெடுத்த வரலாறு ஆகிய அரிய தகவல்களை அறிந்து கொள்ள உதவும் தந்தை பெரியார் அவர்களின் கட்டுரை.)

### தமிழ்

இன்று இந்நாட்டில் நடைபெறும் ஆட்சியானது, ‘ஜனநாயகக் குடியரசு’ என்ற போலிப் பெயரைக் கொண்டதாயினும், உண்மையாக **இது பார்ப்பன நாயகம்** என்பதையும், பார்ப்பனர்களது நலத்தைப் பாதுகாக்கின்ற தன்மையில் அவர்களால் நடத்தப்பெற்று வருவதாகும் என்பதையும், நான் பல தடவைகள் எடுத்துக்காட்டி வந்திருக்கிறேன்; இன்றும் அதைத்தான் செய்துகொண்டு வருகிறேன். இந் நாட்டில் உள்ள மற்ற அரசியல் கட்சிகள் என்கின்ற யாவும், ‘இந்த அரசாங்கத்தில் நமக்கு ஏதாவது பங்கு கிடைக்கிறதா? நாமும் பொறுக்கித் தின்று வாழ்வதற்கு வகை கிடைக்காதா?’ என்கின்ற தன்மையில்தான் - அதனை ஒழிக்கவே போட்டி போடுவதைப் போல் நடித்து மக்களிடம் ஓட்டு வாங்கிக் கூட்டுக் கொள்ளைப் பங்கு பெறத் துடித்துக்கொண்டும் இருக்கின்றன.

அரசாங்கத்தினரும் இவர்களுக்கும் பங்கு கிடைக்கவே பல ஏற்பாடுகள் செய்து வைத்து ஆசைகாட்டுகிறார்கள். ஆகவே, அவர்களால் (இதில் பங்கு பெறுபவர்களால்) இதைப் 'பார்ப்பன நாயகம்' என்பதை ஒருநாளும் ஒப்புக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளமுடியாது. நெஞ்சார உணர்ந்ததை வெளியே சொன்னால் 'வயிறு கழுவுவது', 'காலட்சேபம் நடத்துவது' - கொள்ளைப் பணம் சேர்ப்பது - பதவி பெறுவது பாதிக்கப்பட்டுவிடுமே என்று கருதி அஞ்சி, பயந்து ஒடுங்கி, பார்ப்பான் பாடுகிற - 'ஜனநாயக சங்கீதக் கச்சேரி'க்கு இவர்கள் பக்கமேளம் வாசிப்பவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில், இதை ஜனநாயகம் என்று இவர்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் இவர்கள் தேர்தலுக்கு நிற்க முடியாது; பதவிக்குப் போட்டி போடமுடியாது.

இது பகுத்தறிவைப் பயன்படுத்துகிற அறிவாளிகளுக்கு விளங்காமற் போகாது. இதை எவன் புரிந்துகொள்கின்றானோ அவனால்தான் திராவிடர் கழகத்தின் மகத்தான தொண்டின் சக்தி, மகத்துவம், பெருமை என்னவென்று உணரமுடியும்.

இன்று நடைபெறும் ஆட்சி 'பச்சைப் பார்ப்பன ஆட்சி' என்றும், சூத்திரனை - பிராமணன் மேல்ஜாதி - கீழ்ஜாதிக்காரன் என்பவன் அப்படியே நீடித்து நிலைத்து என்றென்றும் 'சிரஞ்சீவி'யாக இருக்கவேண்டும் என்று பாடுபட்டுவரும் ஆட்சி என்றும் காட்டுவதற்கு இதுவரை பலவித ஆதாரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன என்றாலும், இன்றும் ஒரு எடுத்துக்காட்டு காட்டுகிறேன்.

இந்த நாட்டில் பல காலமாக 'சமஸ்கிருதம்' என்கின்ற ஒரு வடமொழியை (ஆரிய மொழியை) ஆரியர் இந் நாட்டில் புகுத்தி, அதற்குத் 'தேவ பாஷை' எனப் பெயரிட்டுக் கடவுள்கள் - தேவர்கள், சமயம், சாத்திரம் ஆகியவைகளுக்கு அதில் சொன்னால்தான் புரியும் - பயன்படும் என்று காட்டி, நமது பரம்பரை இழிவிற்கு நிரந்தரப் பாதுகாப்பு ஏற்படுத்தி வருகிறார்கள்.

இந்நாடு நம்முடைய நாடு; இந்நாட்டில் நாம் தமிழர்கள் 100க்கு 97 பேர்கள் வாழ்கிறோம். நமது நாட்டு மொழி தமிழ் மொழி. இந்த நிலையில் நமது மொழிக்கும், நம் கலாச்சாரத்திற்கும், நம் பழக்க வழக்கங்களுக்கும் சம்பந்தமில்லாத - நம் நாட்டு மக்கள் எண்ணிக்கையில் நூற்றுக்கு

3 பேராக உள்ள - இந் நாட்டிற்குப் பிழைக்க வந்து குடியேறிய ஆரியப் பார்ப்பனர்களுடைய தாய்மொழியாக உள்ளதும், எழுத்தே இல்லாததுமான சமஸ்கிருதம் என்னும் மொழிக்கு இன்று இருந்துவரும் செல்வாக்கு, தமிழுக்கு உண்டா? இவ்வாரியர் புகுதலுக்குப் பின் இருந்திருக்கிறதா? இன்றைய இளைஞர்கள், வாலிபர்கள் பலருக்கு ஒரு முப்பது, நாற்பது வருடங்களுக்கு முந்திய நிலைமை எப்படி? தமிழுக்கு அப்பொழுது இருந்த மரியாதை, அந்தஸ்து என்ன? பார்ப்பன 'மேலோர்' மொழியாக - சமஸ்கிருதத்திற்கு இருந்த அந்தஸ்து என்ன? என்பது பற்றிய பல விஷயங்கள் தெரியுமா? தெரியாது என்றே நினைக்கின்றேன். சுமார் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு வேளை தெரியக்கூடும்.

முன்பெல்லாம் ஒரு காலேஜில் ஒரு சமஸ்கிருத புரொஃபசர் வாங்கும் சம்பளத்துக்கும், தமிழ்ப் பண்டிதர் (புரொஃபசர்) வாங்கும் சம்பளத்துக்கும் மலை அளவு வித்தியாசம் இருக்கச் செய்தது. அரசாங்கத்தில் சமஸ்கிருதம் படித்தவனுக்கு அவ்வளவு சலுகை! சமஸ்கிருத புரோஃபசருக்கு 350 ரூபாய் சம்பளம்! தமிழ்ப் பண்டிதருக்கு (புரொஃபசருக்கு) 75 ரூபாய்தான் சம்பளம். சமற்கிருத ஆசிரியருக்குப் பெயர் - 'புரொஃபசர்'; தமிழ் ஆசிரியருக்குப் பெயர் - ஆசிரியர்.

காலஞ்சென்ற பேராசிரியர் திரு.கா.நமச்சிவாய முதலியார் அவர்கள் பிரசிடென்சி காலேஜில் புரொஃபசராக இருந்தபோது வாங்கின சம்பளம் ரூபாய் 81 என்பதாகத்தான் ஞாபகம். அதே நேரத்தில் அங்கு சமஸ்கிருத புரோஃபசராக இருந்த திரு. குப்புசாமி சாஸ்திரி (என்று ஞாபகம்) என்பவர் வாங்கின சம்பளம் ரூ.300க்குமேல்! ஜஸ்டிஸ் கட்சி அரசாங்கத்தில் முதல் மந்திரியாக இருந்த திரு. பனகல்ராஜா அவர்களே இதைக்கண்டு மனம் கொதித்து என்னிடத்தில் நேரில் சொல்லி, 'நீங்கள் இதைக்கண்டித்து ஒரு தலையங்கம் எழுதுங்கள்' என்றும் சொன்னார். அவர் சமஸ்கிருதம் படித்தவர்; புலமைவாய்ந்தவர். என்ற போதிலும்கூட அந்தமாதிரி - அந்தஸ்திலும், சம்பளத்திலும் வேறுபடுத்திய கொடுமையைக் கண்டித்தார். பிறகு அரசாங்க உத்தரவுபோட்டு அதன்மூலம் இவ்வேற்றுமையை ஒழித்தார். அன்று நாங்கள் போட்ட கூப்பாடும், ஜஸ்டிஸ் மந்திரி சபையின் உத்தரவும் இல்லாதிருந்தால் இன்றும் தமிழ்ப்பண்டிதர்கள் இதே நிலைமையில்தான் இருக்கக்கூடும்.

பிறகு, திரு. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 1937இல் இந்தியைக் கொண்டுவந்ததன் உள்நோக்கமே சமஸ்கிருதத்துக்குச் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்து வருவதைத் தடுத்து அதை உயர்த்தவும், அந்த சமஸ்கிருத எதிர்ப்பு உணர்ச்சியை அழிக்கவுமேயாகும். இதை அவர் வெளிப்படையாகவே பல கூட்டங்களில் சொற்பொழிவுகளின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். இதை நாம் இப்பொழுது விட்டால் நமது இனத்திற்கும், தன்மானத்திற்கும், உரிமைக்கும் பேராபத்து என்று கருதித்தான், ஆச்சாரியாரின் கட்டாய இந்தித் திணிப்பைப் பலமாக எதிர்த்துப் போராட்டம் துவக்கி சுமார் 2000 பேர்களைச் சிறைக்கு அனுப்பியதோடு, நானும் மூன்று ஆண்டுகள் கடின காவல் தண்டனை பெற்றேன்.

இன்று தமிழ்நாட்டில் 'சமஸ்கிருதம்' என்ற ஒரு மொழி உண்மையிலேயே தேவைதானா? எதற்காவது பயன்படுகிறதா? அதற்கும் நமக்கும் கடுகத்தனையாவது, எதிலாவது, ஒற்றுமை - பொருத்தம் எவ்வகையிலாவது இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழர்களின் வாழ்வில், சமயத்தில், சமுதாயத்தில், அரசியலில், விஞ்ஞானத்தில் மற்றும், ஏதாவது ஒரு காரியத்திற்கு இந்த சமஸ்கிருதம் பயன்படுகிறதா?

மற்றும், தமிழ் மக்கள் தமிழில் எவ்வளவுதான் மேதாவிகளாய் இருந்தாலும், அவர்களால் சமஸ்கிருதத்தைச் சரியானபடி உச்சரிக்க முடிகிறதா? தமிழர் யாராய் இருந்தாலும் சமஸ்கிருதம் உச்சரிப்பது என்றால் அது சிறிதாவது கஷ்டமானதும் சரிவர உச்சரிக்க முடியாததுமானதாகவே இருக்கிறது. தமிழ்நாட்டின் சீதோஷ்ண நிலைக்குப் பொருந்தாது - உச்சரிப்பதானால் சரியானபடி உச்சரிக்க முடிவதில்லை; மனிதனின் சக்தியை அதிகம் பயன்படுத்தி ஆகவேண்டும். குளிர்நாட்டு மொழி, சமஸ்கிருதம், ஆகவே, அது நமக்குப் பேச்சு வழக்குக்கு உதவாததாகும்.

**ஒரு மொழியின் தேவை - முக்கியத்துவமெல்லாம் அது பயன்படுகின்ற தன்மையைப் பொறுத்ததே ஆகும். அது எவ்வளவு பெரிய 'இலக்கியக் காவியங்களையும்', 'தெய்விகத் தன்மையையும்' தன்னிடத்தே கொண்டது என்று சொல்லிக் கொள்ளப்படுவதானாலும் - அது**

**மக்களது அன்றாட வாழ்க்கையில், அவர்களது அறிவை வளப்படுத்தும் தன்மையில் எந்த வகையில் உபயோகப்படும்படி இருக்கிறது என்பதையே அளவுகோலாகக் கொண்டு அளக்கவேண்டும்.**

உதாரணமாக, இன்று இங்கிலீஷ் மொழி சிறந்த மொழி என்று பல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றதென்றால், அது 'புராதன மொழி' என்பதோ அல்லது 'தெய்வாம்சம் உள்ள மொழி' என்பதோ அதற்குக் காரணம் அல்ல. அதனுடைய உலக உபயோகமும், அது உலக மக்களது அறிவை, வாழ்வை வளப்படுத்த உதவிய, உதவுகின்ற தன்மையையும் பொறுத்ததேயாகும்.

1. ஒருவன் ஆங்கில மொழியைச் சுலபமாகக் கற்றுக்கொள்ள முடியும்.

2. ஆங்கில மொழியை அறிந்தவன் உலகத்தின் எந்தக் கோடிக்கும் சென்று அறிவைப் பெற்றுத் திரும்பிவர இயலும்.

3. ஆங்கில மொழியானது அறிவைத் தூண்டும் உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறதே தவிர, அது சுதந்திரமாகச் சிந்திக்கின்ற தன்மைக்கு விலங்கிட்டதாக ஒரு போதும் கிடையாது.

இம் மாதிரிக் காரணங்களால் அது சிறந்த மொழி என்று கருதப்படுகிறது. வெறும் அழகை மாத்திரம் வைத்துக்கொண்டு இப்படிச் சொல்லாமல், அதன் பயனைக் கணக்கிட்டுத்தான் அதனைப் பாராட்டித் தீரவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இதற்குரிய யோக்கியதாம்சங்களில் ஏதாவது ஒன்றாவது நம் நாட்டில் உள்ள மொழிகளுக்கு இருக்கிறதா? **அதிலும் குறிப்பாக – 'தேவ பாஷை'யான சமஸ்கிருதத்துக்கு உண்டா? என்ற கேள்விக்கு இன்றல்ல – பல ஆண்டுகளுக்கு முன்பே, 'இல்லை' என்ற பதில் கிடைத்துவிட்டது.** அது, 'பேச்சு வழக்கு இல்லாத' ஒரு பாஷை ஆகும். இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள சுமார் 40 கோடி மக்களில் எத்தனைப் பேர்களுக்கு சமஸ்கிருதம், 'தாய் பாஷை'? எத்தனைப் பேர்கள் பேசுகிறார்கள்?

பார்ப்பனர்கள் வகுத்த அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 14 மொழிகளில் சமஸ்கிருதமும் ஒன்று என்று சர்வ ஜாக்கிரதையாக எழுதி வைத்துக்கொண்டு இருக்கின்றனர். இதுவே பெரிய மோசடி

எண்ணத்தின் விளைவு என்பேன். ‘சமஸ்கிருதம் பேசுகின்றவர்கள் இந்தியாவிலேயே மொத்தம் 441 பேர் - அதாவது சுமார் 500க்கும் குறைந்தவர்கள்’ என்ற புள்ளி விவரத்தை திரு. பி.ஜி. கேர் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஆட்சி மொழிக் கமிஷனின் ‘ரிப்போர்ட்’ (Official Language Commission Report) தெரிவிக்கிறது.

இதுகூடப் புரட்டு என்றுதான் கூறவேண்டும். சமஸ்கிருதத்தை வழக்கில் பேசுகின்றவர்கள் இந்த நாட்டில் யாருமே இல்லை.

இந்திய சர்க்காரால் ஆண்டுதோறும் வெளியிடப்படும், ‘இந்தியா ஆண்டு வெளியீட்’டில் (India Year Book 1960) உள்ள புள்ளி விவரம் - பக்கம் 45இல் தரப்பட்டிருப்பதானதைக் கீழே பாருங்கள் :

| **மொழி** | **எண்ணிக்கை இலட்சத்தில்** | **மொத்தத்தில் சதவிகிதம்** |
|---|---|---|
| இந்தி<br>உருது<br>இந்துஸ்தானி<br>பஞ்சாபி | 1,499 | 46.3 |
| தெலுங்கு | 330 | 10.2 |
| மராத்தி | 270 | 8.3 |
| தமிழ் | 265 | 8.2 |
| வங்காளி | 251 | 7.8 |
| குஜராத்தி | 163 | 5.0 |
| கன்னடம் | 145 | 4.5 |
| மலையாளம் | 134 | 4.1 |
| ஒரியா | 132 | 4.1 |
| அஸ்ஸாமி | 50 | 1.5 |
| காஷ்மீரி | 0.05 | |
| சமஸ்கிருதம் | 0.01 | |
| | | 100 |

இந்தப் புள்ளிவிவரங்களின்படி மிகமிகக் குறைந்த மக்கள் - 'மைக்ராஸ்கோபிக் (Microscopic) (பூதக் கண்ணாடி வைத்துத் தேடவேண்டிய அளவு) மைனாரிட்டியினர்' மொழியாகத்தான் - (நாம் இந்தப் புள்ளிவிவரத்தை ஒப்புக் கொண்டே பேசுவதானாலும் கூட) அது இருக்கிறது.

அப்படி இருந்துங்கூட, மேலே பலநூறு இலட்சக் கணக்கான மக்களால் பேசப்படும் பல மொழிகளுக்குக் கிடைக்காத சலுகை இன்று இதற்குத் தரப்படுகிறதே, காரணம் என்ன?

சமஸ்கிருதமொழி ஒரு செத்தமொழி என்ற உண்மை (Dead Lanugage) பல்லோராலும் மறுக்காமல் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.அதை உயிர் ஊட்டுவதற்காகப் பார்ப்பனர்களைக் குடியாட்சித் தலைவர்களாகவும், மந்திரிகளாகவும், நீதிபதிகளாகவும் கொண்டுள்ள இந்த ஆட்சியினர், சமீப காலமாகச் செய்துவரும் 'பகீரதப்' பிரயத்தனங்களும் அதற்காக மற்ற மக்களிடத்தில் கசக்கிப் பிழிந்துவாங்கும் வரிப்பணத்தைக் கரியாக்குவதையும் பற்றி இந்த நாட்டில் உள்ள 'பொதுமக்கள் தலைவர்களோ', மொழிவல்ல டாக்டர்களோ யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவே இல்லை.

எடுத்துக்காட்டாக, அக்டோபர் 1956இல் 'சமஸ்கிருதக் கமிஷன்' என்ற ஒன்றை இந்திய சர்க்கார் நியமித்தார்கள். இந்தக் கமிஷனின் நோக்கங்கள் யாவை என்பதையும் அரசாங்கத்தினர் சொன்னார்கள். அதன் நோக்கம் பல்கலைக்கழகங்களிலும், வெளியிலும் சமஸ்கிருதத்தை - சமஸ்கிருதக் கல்வியைப் பரப்புவதும், அதற்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவதுமேயாகும். இந்தக் கமிஷன் தனது அறிக்கையை டிசம்பர் மாதம் 1957இல் சமர்ப்பித்தது. இதன் சிபாரிசுகளை அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொண்டு, அதைத் தனது திட்டமாகச் செயல்படுத்திக் கொண்டுவருகிறது. இந்த ஆட்சிக்குப் பெயர் ஜனநாயகமாம்!

நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒரு கமிஷன் என்றால் அதற்குப் பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் செலவு - வீண் விரயம் என்று அர்த்தம். இதனால் யாருக்காவது 'காதொடிந்த ஊசியளவு' பிரயோசனம் உண்டா? விரயம் செய்யப்பட்ட பணம் அத்தனையும் நம்மிடத்திலிருந்து வரியாகக் கோடிக் கணக்கில்-தில்லி சர்க்காரால்-

பகற் கொள்ளையரைப்போல் எடுத்துச் செல்லப்படுவதுதானே? பார்ப்பனரிடம் இருந்து போகும் வரி விகிதாசாரம் என்ன? நம்மிடம் இருந்துபோகும் வரியின் விகிதாசாரம் என்ன? ‘அண்டைவீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே’ என்கின்ற தன்மையில், இலட்சக்கணக்கில் இப்படி வாரி யிறைத்துப் பதறப் பதற நாசமாக்கிக் கொண்டிருப்பதை - நாம் இன்னமும் சகித்துக் கொண்டுதான் இருக்கிறோம். இவ்வாறுதான் இருக்கவேண்டுமா?

‘சமஸ்கிருதக் கமிஷன்’ சிபாரிசுப்படி மத்திய சர்க்காரிலேயே ‘மத்திய சமஸ்கிருத போர்டு’ (Central Sanskrit Board) என்ற ஒரு அமைப்பு 1957 ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு, முன்னாள் சுப்ரீம்கோர்ட் சீப் ஜஸ்டிஸ், திரு. பதஞ்சலி சாஸ்திரி தலைவர்; மற்றும் 8 பேர் உறுப்பினர்கள், மூன்று வருடங்களுக்கு இவர்கள் பதவியில் இருப்பார்கள். (‘மெயில்’ தேதி 1.7.1959)

இந்தப் போர்டினது பிரதான நோக்கம் எல்லாம் - சமஸ்கிருதத்தை இந்தியா முழுவதிலும் எப்படிப் பரப்புவது என்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து மத்திய சர்க்காருக்கு அவ்வப்போது ஆலோசனை கூற வேண்டியதுதானாம். சமஸ்கிருதக் கமிஷனின் சிபாரிசுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக இரண்டாவது அய்ந்தாண்டுத் திட்டத்தில் பல இலட்ச ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டதாம். (Bhavan’s Journal 14.06.1959).

இப்படிப் பல இலட்ச ரூபாயைக் கரியாக்குவதன்மூலம் யாருக்கு என்ன நன்மை என்பது ஒருபுறம் இருக்கட்டும்; அரசியல் சட்டத்தில் உள்ள மற்ற 13 மொழிகளுக்குக் காட்டாத சலுகை, சமஸ்கிருதத்திற்கு மட்டும் என்ன தேவை?

அப்படிச் சமஸ்கிருத இலக்கியத்திற்கும் மொழிக்கும் ஊக்கம் அளிப்பது என்றால், அதைத்தனிப்பட்டவர்களான பிர்லா, கே.எம். முன்ஷி போன்றவர்களால் அதற்கெனவே ஏற்படுத்தப்பட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டுவருகின்ற - பாரதிய வித்யாபவனம், பாரத இதிகாச சமிதி, சமஸ்கிருத விசுவபரிஷத் போன்றவைகள் செய்து கொள்ளலாம் அல்லவா? மத்திய சர்க்கார் மாத்திரம் இதற்கு ஏன் இவ்வளவு சலுகை காட்டவேண்டும்? இது மாத்திரம் அல்ல. மத்திய

சர்க்காரின் ஆதரவுள்ள, ‘சாகித்திய அகடமி’யின் ஆதரவில் சமஸ்கிருதத்தைப் பரப்புவதற்கென்றே ஒரு பத்திரிகையும் (Journal) துவக்கப் பெற்றுச் சிலமாதங்களாக நடந்துவருகின்றது.

இதற்கெல்லாம் அடிப்படையான காரணம் என்ன? இவ்வளவு ஆர்வம் செலுத்துவதன் உள்நோக்கம் என்ன? என்று ஆராய்ந்தால்தான் பார்ப்பான் தனது ஆதிக்கத்தையும் ஏகபோக உரிமையையும் பாதுகாப்பதில் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கிறான் என்பது விளங்கும்.

சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பான் வாழமுடியும்; சுரண்டமுடியும் நம்மைக் கீழ்ஜாதி மக்களாக ஆக்கமுடியும்; அவன் பிராமணனாக இருக்க முடியும். அதன் நலிவு, பார்ப்பன ஆதிக்கத்தின் சரிவு என்பதை உணர்ந்துதான் ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையாக - விழிப்போடு காரியம் செய்து வருகிறார்கள்.

இல்லாவிட்டால், உலகம் பூராவும் சுற்றி வருகிற ‘சசிவோத்தம’ சர்.சி.பி. இராமசாமி அய்யர், ‘சமஸ்கிருதந்தான் இந்தியாவின் அரசாங்க மொழியாக இருக்கவேண்டும்’ என்று பேசிவருவாரா? அதுமட்டுமா? தமிழைத் தாய்மொழி என்று கூறுகின்ற பார்ப்பனரைக் காணமுடிவதில்லையே! தப்பித் தவறி எங்காவது ஒன்று இரண்டு சுட்டிக்காட்டுவீர்களானால் அது வயிற்றுப்பிழைப்பைக் கருதி அப்படி உதட்டளவில் கூறிய பார்ப்பனனாக இருக்கும், அவ்வளவுதான்.

‘சமஸ்கிருத விஸ்வ பரிஷத்’தின் கூட்டம் புதுதில்லியில் பாபு இராஜேந்திர பிரசாத் தலைமையிலே, அதுவும் இராஷ்டிரபதி பவனத்தில் நடக்கிறது. அதில் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்; ‘அரசாங்கத்திடம் சொல்லி - சமஸ்கிருதப் படிப்புக்கு என ஒதுக்கி இருக்கும் தொகையைச் செலவழிக்காவிட்டாலும்கூட, அதை சமஸ்கிருதமல்லாதவற்றிற்குச் செலவிடக் கூடாது; அது சம்பந்தமாகச் சட்டங்கள் செய்யப்படுவதோ, உத்தரவு போடப்படுவதோ தடுக்கப்பட வேண்டும் என்று கூற ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அதில் உறுப்பினர்களாக, இந்திய பார்லிமெண்ட்டின் சபாநாயகர் திரு. அனந்த சயனம் அய்யங்கார், இன்றைய சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதி திரு. பி.பி. சின்ஹா போன்ற சிலர் நியமிக்கப்பட்டு உள்ளனர். (பவன்ஸ் ஜர்னல், 23.03.1959).

சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்படும் பணம் செலவாக வழியில்லை என்றால்கூட, வேறு காரியத்திற்குச் செலவிடப்படக்கூடாதாம்! எவ்வளவு பரந்த மனப்பான்மை! இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பார்ப்பனரின் காலைக் கழுவிய திரு. இராஜேந்திரபிரசாத் - குடியாட்சித் தலைவரின் தலைமையின் கீழாகும். இதைப் போய் - மதச் சார்பற்ற அரசாங்கம் என்றும், பார்ப்பன அரசாங்கம் அல்ல என்றும் சொல்லுவது, மனிதன் உடனே சாகக்கூடிய மாதிரியில் கடிக்கின்ற பாம்புக்கு 'நல்ல பாம்பு' என்று பெயர் வைத்திருப்பது போன்றதல்லவா?

'ரிட்டயரான' ஒவ்வொரு பார்ப்பன ஜட்ஜ், அதிகாரி, தலைவர் எல்லோருக்கும் எப்படி சமஸ்கிருதத்தைப் பரப்புவது என்பதில்தான் கவலை. அது பரவினால், ஆழ வேரூன்றினால்தான் பார்ப்பன ஜாதித் திமிருக்கு உரம் போட்டது போலவாகும் என்பதை நன்றாக உணர்ந்துதான் அவர்கள் இவ்வாறு தீவிரமாக இதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

நம்முடைய மக்களோ இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், 'நாம் எவனுக்கு வைப்பாட்டி மக்களாக இருந்தால் என்ன? வயிறு நிரம்ப வேண்டியதுதானே' என்று இருக்கிறார்கள்.

நம்முடைய புலவர்கள், அறிஞர்கள் எல்லோரும் இதைப்பற்றியே நினைக்க நேரமில்லாத மாதிரி காட்டிக்கொண்டு, பார்ப்பானின் காலைக் கழுவி 'கதி மோட்சம்' பெறுவதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**- 'விடுதலை', 15.2.1960**

❐

# பகுதி - 3

# ஆங்கிலம் ஏன் வேண்டும் ?

# 1. நான் ஒரு பகுத்தறிவு நிபந்தனையற்ற முற்போக்குவாதி

( தமிழர்களின் முன்னேற்றத்திற்கு ஆங்கிலம் அவசியம் என்ற விழிப்புணர்வை தொலைநோக்கோடு உணர்த்தியவர் தந்தை பெரியார் )

ஆங்கிலம், ஆங்கிலப் பண்பு இல்லாவிட்டால் அரசியல் விடுதலை ஏது? மந்திரிகள் ஏது? இன்றைய விஞ்ஞான வளர்ச்சி, ஞானம், அற்புத அதிசயங்கள், அனுபவங்கள் ஏது? இதை இன்று மந்திரிகள் உணர்ந்து ஆங்கிலத்தைத் திரும்பவும் சேர்த்துக் கொண்டார்கள். சென்னைக்கு வந்து திரும்பிச்சென்ற பண்டித நேரு அவர்களும் ஆங்கிலத்தின் அவசியத்தையும், அதனால் பல நன்மைகளை எதிர்காலத்தில் அடைய இருப்பதால் அதை வெறுக்கும் மனப்பான்மை கூடா தென்பதையும் பம்பாய் மந்திரிகளுக்கே உபதேசம் செய்திருக்கிறார். வடநாட்டுக் காங்கிரசுக்காரர்களுக்கு இந்தப் புத்தி. ஆனால் நம் நாட்டுக் காங்கிரசுக்காரர்களுக்கோ எனின் - அதற்கு நேர்மாறான பழைமை விரும்பிகளாயிருக்கின்றனர். இது ஒழுங்காகுமா என்று கேட்கிறேன். நாம் நம் நாட்டைவிட்டு வடக்கேபோனால் மலைப் பிரதேசம்தான் காணவேண்டும்; காட்டுமிராண்டித்தனம்தான் கற்கவேண்டும்.

ஆனதால், நாம் கற்றுக்கொள்ள ஏதாவது உண்டு என்றால், அது நமது மேற்கிலும், கிழக்கிலும்தான் உண்டு. ஆங்கில மோகத்தால் நான் அதை ஆதரிக்கவில்லை. அவ்விதமானால், ஆங்கிலத்தையே வேரறுக்கும் வீரர்களான பண்டிதர் போன்றோர் இன்றைய நிலையிலும் ஆங்கிலத்தின் மேன்மையை ஏன் எடுத்துக்கூற வேண்டும்? அதுமட்டுமல்ல, சென்னை அரசியலார்தான் ஆங்கிலத்திற்கு நான்கு பீரியட் (Period) என்று ஏன் ஒதுக்கவேண்டும்? இரண்டு

ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தை வெறுத்த அவிநாசியார் இன்று ஏன் அதை ஆலிங்கனம் செய்ய வேண்டும்? இது ஆங்கிலத்தின் மேன்மையை உணர்ந்ததாலல்லவா?

ஆங்கிலம் உலகமொழி என்பதை யாவரும் ஒப்புக்கொண்டாகி விட்டது. 1500மைல் கடற்கரையுள்ள நாட்டினராகிய நாம் - உலக மொழியைக் கற்று ஏற்கவும், தகுதியும் அவசியமும் உடையவர்கள் அல்லவா? எனவே, நான் ஆங்கில மொழியின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்திக் கூறுவதைப் பழைமை விரும்பிகளான காங்கிரசார் தவறாகக் கருதுவதில் அதிசயமில்லை. அதனால் நான் தமிழ்மொழியை இகழ்வதாகவும் கருதக்கூடாது. ஆங்கிலத்தில் விஞ்ஞான அறிவு அறவே கலந்துவிட்டது; புதிய உலகுக்கான வழிவகைகள் அதில்தான் மலிந்து கிடக்கின்றன.

இதை எவரும் மறுக்கமுடியாது. ஆங்கில ஏகாதிபத்திய முறையை நாம் வெறுக்கும் மனப்பான்மை கொண்டிருந்தோமேயன்றி, ஆங்கிலமொழியை வெறுப்பதென்பதல்ல. வடநாட்டு இந்தி மொழியைக்கூட நாம் வெறுப்பது - வடநாட்டவர்களின் ஆதிக்கம் மீதுள்ள வெறுப்பால் என்று எவரும் கருதக்கூடாது.

அம்மொழியிலிருந்து மக்களின் நல்வாழ்வுக்காகத் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு சிறு எடுத்துக்காட்டாகிலும் - தமிழில் இல்லாத எதையாகிலும் இந்தியில் காட்டமுடியுமா? கூறமுடியுமா? நான் ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், காங்கிரஸ் ஏடுகள் - ‘இத்தனைக் காலம் ஆங்கில மொழிக்கு அடிமையாக இருந்துவந்த வீரர்கள், இன்று இந்தியை எதிர்க்கிறார்கள் - வெட்கமற்றவர்கள்’ என்று எழுதி என்னைக் கேலி செய்தனர். அதற்காக இதைச் சொல்லுகிறேன். நாம் ஆங்கிலம் கற்காவிட்டால் உலக மக்களோடு கலந்துவாழ முடியுமா? ஏன்? அம்மொழியின் ஆற்றல் அவ்வளவு ஆங்கிலம் கற்றதனால் - பல நிபுணர்கள், அறிஞர்கள் புத்துலகச் சிற்பிகள் தோன்றினார்கள்.

நாம் சரித்திர வாயிலாக இன்றும் நேரடியாகக் காண்கிறோம். ஆனால், இந்தி மொழி கற்றவர்களில் எவர் அறிஞராய் - முற்போக்குடையோராய்த் திகழ்கின்றனர் என்று கேட்கிறேன். மதவெறி

பிடித்த பழைமை விரும்பிகளாகத்தான் இருக்கிறார்களேயன்றி வேறில்லை. இன்னும் கூறவேண்டுமானால், அம்மொழி காந்தியாரைக் கொன்ற கோட்சேக்களைத்தான் உற்பத்தி செய்திருக்கிறது. நான் ஒரு மொழியை வெறுப்பதோ, வரவேற்பதோ, அந்தந்த நாட்டுக்காரன் என்ற உணர்ச்சியாலல்ல. அம் மொழியைக் கற்றால் மக்கள் சமுதாயத்திற்கு என்ன பலன் ஏற்படும்; என்ன இலாபம் கிடைக்கும் என்பதையே முக்கியமாகக் கருதுபவன். நான் பகுத்தறிவுவாதி; நிபந்தனையற்ற முற்போக்குவாதி.

அந்த நிலையிலிருந்துதான் நான் ஆங்கிலத்தைப் பற்றி என் உள்ளக்கிடக்கையை ஒளிவு மறைவின்றிக் கூறினேன்; நீங்கள் ஏற்க வேண்டுமென்றல்ல; சிந்திக்க வேண்டும் என்பதற்காக நம் நாட்டைப் பொறுத்தவரை நம் தமிழ் மொழியையும், இனிப் புலவர் பெருமக்கள், ஆங்கிலப் புலவர்கள்போல், முற்போக்குப் படைத்த அறிவுக்கண் கொண்டு வளர்க்கவேண்டும். மதம், சமுதாயம், நாடு என்பவைகள் பற்றிய பழைமையை மறக்கவேண்டும். பழைமையில் சிக்கிக்கிடக்கும் ஒருசில பண்டிதர்களுக்கும் இதை நினைவூட்டுகிறேன். பழைமைக்காக நாம் வாழவில்லை. பழைமையைத் தேடவோ இறுக்கிப் பிடிக்கவோ ஏற்பட்டதல்ல, நம் அறிவு.

**- 'விடுதலை', 15.8.1948**

❒

# 2. இந்தி ஏன் வேண்டாம்? ஆங்கிலம் ஏன் வேண்டும்?

மாகாணங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்டு, மாகாண சுயாட்சி முறையும் ஏற்படுவது நிச்சயமாயிருக்கும்போது, 'இந்தியாவுக்குப் பொதுமொழி ஒன்று அவசியந்தான்' என்பதே விவாதத்திற்குரிய விஷயம். தென்னிந்தியாவுக்கு வியாபாரத்திற்கும், வேறு வேலைகளுக்கும் வருகின்ற வடநாட்டார் எவ்வாறு தென்னிந்திய மொழிகளைக் கற்றுக் கொள்கிறார்களோ அதேபோல், வட நாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய திராவிடர்களும், அங்கே வேலைக்குச் செல்லவேண்டியவர்களும் இந்தியைக் கற்றுக்கொண்டாலே போதும்.

இதைத் தவிர, உலகமொழியாகிய ஆங்கிலத்தை அறவே ஒழிப்பதென்பது முடியவே முடியாது. அப்படி ஒழித்தால், நாம் உலகிலேயே மிகப் பிற்போக்கான மனித சமுதாயமாகி விடுவோம் என்பது முக்காலும் உறுதி.

ஏனெனில், உலகில் சுமார் 26 கோடி மக்கள், அதாவது உலக மக்களில் எட்டில் ஒரு பங்குப்பேர் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர்; உலகிலுள்ள பத்திரிகைகளில் சரிபாதிக்கு மேற்பட்டவை ஆங்கிலத்தில் வெளிவருகின்றன; உலகிலுள்ள ரேடியோ நிலையங்களில் 5இல் 3 பங்குக்குமேல் ஆங்கிலத்தில் செய்திகள் ஒலிபரப்பப்படுகின்றன. இதைத்தவிர, ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிராத பல இலட்சக்கணக்கான மக்கள் அறிவு, ஆராய்ச்சி, இலக்கியம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் விரைவில் முன்னேறுவதற்காக ஆங்கிலத்தைப் பயின்று வருகின்றனர்.

எனவே, ஆங்கிலத்தை அறவே புறக்கணிக்க முடியாதென்பது நிச்சயம். உலக மொழியாகிய ஆங்கிலத்துடன் இந்தியப் பொதுமொழி என்று கூறப்படும் இந்தியையும் கற்றுக்கொண்டு, அவர்கள் தாய்மொழியையும் கற்கவேண்டுமென்றால், மொழிகளைத் தவிர்த்த, இதர கலை நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்து வாழ்க்கைக்குப் பயன்படுத்துவது முடியக்கூடிய காரியமா? யோசித்துப் பாருங்கள்

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 20.9.1946**

❒

# 3. இந்தியாவுக்கு போது மொழி ஆங்கிலம்

இந்தியாவுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமானாலும், அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொது மொழி வேண்டுமானாலும், ஆங்கில மொழியைத் தேர்ந்தெடுத்து, அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல், வேறு மொழியைப் பற்றி யோசிப்பது முட்டாள்தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும்.

ஆங்கிலம் உலக மொழி; உலக வர்த்தக விஞ்ஞான மொழி; இந்திய அரசாங்க மொழி; அதுமாத்திரமல்லமல் மூடப்பழக்க வழக்கமும், பார்ப்பனியமும் இல்லாமல் அவ்வளவும் அடிப்படையான கலைகளை வாசகமாகப் பெற்ற மொழியாகும்.

**- தந்தை பெரியார்,**

**'குடிஅரசு',** 20.1.1929

❐

# மொழியின் பண்புதான் முக்கியம் அளவு அல்ல

ஒரு மொழி தேசிய மொழியாக வேண்டுமானால் அது தேசத்திற்கு கலைஞர்களை, அறிவாளிகளைப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும் என்று முன்பு சொன்னேன். அப்படி இந்தி யாரையாகிலும் தோற்றுவித் திருக்கிறதா? ஆங்கிலத்தோடு அதை ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளில் எது சிறந்த மொழி? ஒரு தமிழ்நாட்டு சிறு குழந்தையைக் கேளுங்கள். அதுகூடச் சொல்லும் ஆங்கிலம்தான் சிறந்ததென்று ஏன்? அது ஒரு ஷெல்லியை, ஒரு டென்னிசனை, ஒரு கிட்ஸை, ஒரு ஷேக்ஸ்பியரை தோற்றுவித்திருக்கிறது. அப்படிப்பட்ட மொழிக்குத்தான் ஒரு தேசத்தின் தேசிய மொழியாக உரிமை உண்டே தவிர, பெரும்பான்மையோரால் பேசப்படும் மொழி என்பதற்காக ஒரு மொழியைத் தேசிய மொழியாக்கிவிட முடியாது. இந்த இந்தியை நம் நாட்டில் நுழைய விடுவோமானால் இந்த 20ஆவது நுற்றாண்டின் தமிழ் வளர்ச்சி, நாகரிக முற்போக்கு வளர்ச்சி பூராவும் அழிந்து போகும். ஆகவே, மொழிப் போராட்டத்தில் மெஜாரிடி, மைனாரிடி பார்க்கும் புன்மை மனப்பான்மையை ஓட்டுப் பெட்டி மனப்பான்மையை விட்டு பண்புப் பொருத்தம், குணப்பொருத்தம் பார்க்க வேண்டும் நமது கல்வி அமைச்சர்.

குவாலிடி - குணம் அல்லது பண்புதான் முக்கியதே தவிர, குவாண்டிடி - அளவு அல்ல முக்கியமாகக் கருதப்பட வேண்டியது.

அதுவும் கலையிலா அளவு கோல் பார்ப்பது, பண்புக்கு எதிர்ப்பாக? இந்தப்படி பார்த்தால் பண்பென்பது இந்தி மொழியில் மிக மிகக் குறைவு. அடியோடு இல்லையென்றே கூட கூறிவிடலாம்.

**- தமிழ்த் தென்றல் திரு.வி.க.**


**நூல்: இந்திப் போர் முரசு**

❒

# பகுதி - 4

# உலக மொழி வரிசையில் தமிழ் இருக்க வேண்டும்

# மதத்தை பிரித்துவிட வேண்டும்



முதலாவதாகத் தமிழ் முன்னேற்றமடைந்து உலக மொழி வரிசையில் அதுவும் ஒரு மொழியாக இருக்க வேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்துவிட வேண்டும். தமிழுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளி வைக்க வேண்டும்.

**- தந்தை பெரியார்**

**'குடிஅரசு', 26.1.1936**

❒

# 1. தமிழ்மொழியை முன்னேற்றும் வகையில் மாற்றம் செய்யுங்கள்

தமிழ், சிவனும் சுப்பிரமணியனும் பேசிய மொழி; சிவன் உண்டாக்கிய மொழி என்று பண்டிதர்கள் கூறுகிறார்கள். அதே சிவனும் சுப்பிரமணியனும் உபயோகித்த போர்க் கருவிகள் இன்று நம் மக்களுக்குப் பயன்படுமா? அவைகளை நாம் இன்று பயன்படுத்துவோமா? அல்லது அவர்களே இன்று போரிட நேர்ந்தால் அவைகளைப் பயன்படுத்துவார்களா? சிந்தித்துப் பாருங்கள்.


கடவுள் உண்டாக்கினார் என்பது நமக்குத் தோன்றிய இயற்கைத் தத்துவம் ஆகும். இயற்கையின் தத்துவம் நமது அறிவு வளர்ச்சிகளுக்கேற்ப மாறுதல்களுக்கும் செப்பனிடுவதற்கும் வசதியளிக்கக் கூடியதேயாகும். சிவன் கோலும், மழுவும், கத்தியும், வேலும், சூலமும் கொண்டுதான் சண்டை பிடித்திருக்கிறாராம். விஷ்ணு வந்த பிறகே வில் வந்திருக்கிறது. அதன் பிறகே துப்பாக்கியும் அதிலிருந்து பீரங்கியும், மிசன் பீரங்கியும் டாங்கிகளும் ஏற்பட்டு இன்று அணுக்குண்டு ராக்கெட் வரை போர்க் கருவிகள் முன்னேற்றமாகியுள்ளனவே. இன்று நாமோ நம் கடவுள்களோ போரிட நேர்ந்தால் வில்லும் வேலுமா உபயோகிப்போம். ஆகவே போர்க் கருவிகள் மாற்றமடைந்திருப்பது போல் நமது மொழியும் மாற்றம் அடைய வேண்டாமா? போர்க் கருவிகளின் மாற்றத்தை அனுமதித்த கடவுள்கள் மொழி மாற்றத்தை மட்டுமா அனுமதிக்க மாட்டார்கள். ஆகவே மாற்றுங்கள். தமிழ் மொழியை முன்னேற்றும் வகையில் கற்கச் சுலபப்படுத்தி மாற்றம் செய்யுங்கள். மதியுள்ள கடவுள்கள் எனில் மாற்றத்தை வெறுக்கமாட்டார்கள்.

**- தந்தை பெரியார்,**

**‘விடுதலை’, 6.1.1968**

❐

# 2. தமிழ் இலகுவாக்கப்பட வேண்டும்



எப்படியும் தமிழ்மொழி எழுத்துகள் குறைக்கப்பட்டாக வேண்டும்; அச்சுக்கோப்பதற்கும், டைப் அடிப்பதற்கும் ஆங்கிலத்தைப் போல் இலகுவாக்கப்பட வேண்டும் என்பதும், கற்கும் பிள்ளைகளுக்கும் 3 மாதத்தில் படிக்கத் துவக்கலாம் என்பதுதான் நமது ஆசை.

**- தந்தை பெரியார்,**

**நூல்: 'தமிழ்மொழி எழுத்துச் சீர்திருத்தம்'**

**1936 இல் பெரியார் பேசியது எழுதியது)**

❐

# 3. ஒரு நியூட்டன் தோன்ற முடியவில்லையே



நியூட்டன்



எடிசன்



மார்க்கோனி


தமிழில் ஆரியம் புகுந்ததால்தான் மக்களிடையே காட்டு மிராண்டித்தனம் புகுந்து விட்டது. இதில் பண்டிதர்கள் கவனம் செலுத்த வேண்டாமா? கவலை எடுத்துக் கொள்ள வேண்டாமா? வெளி நாட்டு மக்களெல்லாம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டிக் கடல் கடந்து வாணிகம் நடத்திய தமிழர்களின் மரபில் இன்று ஒரு நியூட்டன் தோன்றவில்லை; ஒரு எடிசன் தோன்றவில்லை; ஒரு மார்க்கோனி தோன்ற முடியவில்லையே என்பதை அறிந்து கொள்ள வேண்டாமா?

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 5.1.1968**

❒

# 4. தமிழ் நூல்களை பார்ப்பனர் பாழாக்கிவிட்டனர்




சிறந்த தமிழ் நூல்களையெல்லாம் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் போடச் செய்தும் நெருப்பில் பொசுக்கிப் பாழாக்கியும் விட்டனர் பார்ப்பனர். எஞ்சியிருப்பது குறள் ஒன்றே யாகும். நமது திருவள்ளுவர் வகுத்த இக்குறள் வழிச் சென்றால் நம் நாட்டுக்கு மட்டுமின்றி வட நாட்டுக்கும் உலகத்துக்குங்கூட நாம் நன்னெறி காட்டியவர்கள் என்ற பெருமையை மீண்டும் அடைய முடியும்.

**– தந்தை பெரியார்,**

**'விடுதலை', 23.3.1960**

❒

# 5. தமிழில் ஆரியம் கலப்பு




தமிழனுக்கு இலக்கிய மென்று சொல்லுவதற்குத் தனித் தமிழ் இலக்கியம் எதுவும் கிடையாது. தமிழில் ஆரியம் கலந்த இலக்கியங்களே இருக்கின்றன.

- தந்தை பெரியார்,

'விடுதலை', 5.4.1971

❒

# 6. இந்து மதம் - ஆத்திகம் - ஆரியம் கூடாது




இனிமேல்தான் நமக்கான இலக்கியம் தோன்ற வேண்டும். அதில் இந்து மதம், ஆத்திகம், ஆரியம் மூன்றும் இருக்கக் கூடாது. அறிவு, ஒழுக்கம், விஞ்ஞானம் இவைதான் இருக்க வேண்டும். அறிவு, ஒழுக்கம், விஞ்ஞானம், ஆராய்ச்சி என்றால் அவை நம் நாட்டில் நாத்திகம், மத வெறுப்பு என்றாக்கப்பட்டு விட்டது. அதனாலேயே நம் நாட்டில், பயன்படும் இலக்கியம் இல்லை என்பதோடு தோன்றவும் இல்லை.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 2.9.1956**

❐

# 7. இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்?



இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால் உலகில் எல்லாம் எல்லாத் துறைகளும் மனிதனின் உயர் வாழ்க்கைக்கு மட்டும் அல்ல, மனித சமுதாய வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 24.11.1961**

# 8. புலவர்கள்





புலவர்கள் என்றால் அறிவாளிகளாக புரட்சியாளராக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் சொல்லுவார்களே புராட்டஸ்டண்டு - கண்டனம் தெரிவிப்பவர் என்பவர்களாக இருக்க வேண்டும்.

- தந்தை பெரியார்,

'விடுதலை', 22.11.1964

❒

# 9. பாரதிதாசன் கவிதையைப் படி



கடுகளவு அறிவுள்ளவன் கூட பாரதிதாசன் கவிதையைப் படித்தால் முழுப் பகுத்தறிவுவாதியாகி விடுவான்.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 21.4.1970**

❒

# 10. மானம் - பகுத்தறிவு வளர்ச்சி - பண்பு



மொழியோ, நூலோ, இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 1.10.1967**

❐

# 11. திருக்குறள் மக்களின் நல்வாழ்வுக்கு ஆன நீதி நூலாகும்

உலகிற்கே பொதுவான அறிவு விளக்கத்தையும், அதற்கான அரசியல் முறைகளையும், மக்களின் வாழ்வு பற்றியும் எடுத்துக் கூறியுள்ள நமது திருக்குறளை நாம் மதிப்பதில்லை; நாம் படிப்பதுமில்லை.

இராமாயணத்தில் முட்டிக்கொள்ள முந்துகிறோமேயன்றி திராவிடரின் திருக்குறளைப் பற்றிச் சிறிதுகூடக் கவலை கொள்ளுவதில்லை. எனவே, இனி நமக்கு ஒரு நெறிநூல், வழிகாட்டி நூல் இருக்கிறதென்றால் அது திருக்குறளே யாகும். அதை நமது மக்கள் படிக்க வேண்டும்; மாணவர்களும், புலவர்களும் ஓய்வுநேரங்களில் திருக்குறள் பிரச்சாரம் செய்யவேண்டும். காங்கிரசுத் திராவிடர்களும் இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

இராமாயணத்தில், பாரதத்தில் நேர்மையோ, நீதியோ இருக்கின்றனவா? பாமர மக்கள்தான் இராமபஜனைக்குச் சென்று பாழாக்கிக் கொள்கின்றனர் என்றால் – மக்களின் வரிப் பணத்தில் 500 ரூபா சம்பளம் வாங்கும் பிரதம மந்திரி இராமபஜனையைச் சர்க்கார் மாளிகையில் திறந்துவைக்க ஏன் ஓடுகிறார்? திராவிட விபீஷணர்கள் இராமாயணத்தை யானைமீது வைத்து ஏன் அம்பாரி செய்கின்றனர்? கொஞ்சமேனும் மானம், ரோஷம் வேண்டாமா?

இராமாயண – ஆதாரத்தை அதிலிருப்பதைக்கொண்டே – வால்மீகி எழுதியதைக் கொண்டே நாங்கள் கூறினால், “முட்டாள்” என்று எங்களைக் கூறுகிறார் மந்திரியார்.

நான் கேட்கிறேன் : இராமாயணத்தில் ஒழுக்க ஈனம், புத்திரத் துரோகம், சகோதரத் துரோகம், மனைவிக்குத் துரோகம், பெண்ணடிமை

கொள்ளுதல்; மனிதத் தன்மைக்குத் துரோகம், திராவிடரை இழிவுபடுத்துதல் தவிர வேறு யாதாகிலும் அதில் இருக்கிறதென்று? அறிவற்றவர்கள் அல்லது அடிமைப் புத்தியில் ஊறிப்போனவர்கள், இனத் துரோகம் செய்பவர்கள் தவிர, வேறு யாராவது கூறமுடியுமா?

எனவே, அருமைத் திராவிடமக்களே! திருக்குறள் உலகில் உள்ள எல்லா "இசங்களுக்கும்" - அதாவது லெனினிசம், சோஷலிஸம் ஆகியவைகளைவிட உயர்ந்த தத்துவங்களைக் கொண்ட - மக்களின் நல்வாழ்வுக்கு ஆன நீதிநூலாகும். அதை இனியேனும் திராவிடர்கள் படித்து அதன்வழிச் சென்று பொதுப்பணி ஆற்றினால் நாம் எவருக்கும் அடிமைப் பட்டிருக்கமாட்டோம் என்பது மட்டுமல்ல; எங்கும் நம்மை ஏமாற்ற முடியாது.

நாங்கள் செய்துவரும் இப்பணிக்கு நீங்களும் ஒத்துழைக்க வேண்டும். காங்கிரசு மட்டுமல்ல - கம்யூனிஸ்ட் திராவிடர்களும் கவலை செலுத்தவேண்டும்.

**- தந்தை பெரியார்,**

**'விடுதலை', 14.11.1948**

❐

# 12. திருக்குறளைப் போற்றுங்கள்

(தமிழ் இலக்கியங்களில் பெரிதும் பரப்பப்பட வேண்டிய ஒரே நீதி நூல், அறநூல், அறிவு நூல் திருக்குறள்தான் எனத் தந்தை பெரியார் கருதியே, அதனை 1949இல் (15, 16.1.1949) இருநாள்கள் தனி மாநாடு நடத்தி, மிகப்பெரும் தமிழ் அறிஞர்களான நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., பன்மொழிப் புலவர்கள் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், கா.அப்பாத்துரையார், ஏ.சக்கரவர்த்தி நயினார், கந்தசாமி புலவர், திருக்குறள் வி.முனுசாமி போன்ற அறிஞர் பெருமக்களை அழைத்து இருநாட்கள் சென்னையில் குறள் மழை பொழிய செய்த பின்பே, திருக்குறள் புலவர்கள் வீட்டுப் புத்தக அலமாரிக்குள்ளே இருந்து பொதுமக்கள் மன்றத்தை அடைந்து, குறள் கருத்து பரவி, ஒளி வீசத் தொடங்கியது.

திருக்குறள் பரப்பும் தொண்டை அக்காலத்தில் திராவிடர் கழகம் செய்தது போல், எந்த ஒரு கட்சியும், அமைப்பும் செய்ததில்லை.)

பெரியார் களஞ்சியம் திருக்குறள் - வள்ளுவர் நூலிலிருந்து

**தந்தை பெரியாரின் கருத்து முத்துக்கள்:**

❒ திருக்குறளில் பொய் மெய்யாகவோ அல்லது மெய் பொய்யாகவோ கூறப்பட்டிருக்கவில்லை என்பதுதான் அதன் கருத்து.

**- பக்கம் 34**

❒ ஆரியரல்லாத இந்நாட்டு மக்கள் அனைவருக்கும். சிறப்பாக இந்நாட்டுப் பழங்குடிப் பெருமக்களான திராவிடர்கள் அனைவருக்கும் வள்ளுவர் அருளிய "திருக்குறள் ஒரு பெரிய

செல்வமேயாகும். நமது பெருமைக்கும், நெறிக்கும். நாகரிகத்திற்கும், வாழ்க்கை முறைக்கும் எடுத்துக்காட்டாக அதில் பல விவரங்களை நாம் காணலாம். திருக்குறளின் பேரால் திராவிட மக்களின் பெருமையை, திராவிடரல்லாத மக்களுக்கு உணரச்செய்ய முடிகிறது. நமது சரித்திரத்திற்கும் நாகரிகத்திற்கும் பல இலக்கியங்களிலிருந்தும் பல காவியங்களிலிருந்தும் ஆதாரங்கள் எடுத்துக்காட்ட முடியுமாயினும் அவை பெரும்பாலும் பண்டிதர்களுக்குத்தான் புரியும் அவர்களுக்குத் தான் பயன்படும். ஆனால், திருக்குறள் ஒன்றுதான் பாமரமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் எப்படிப்பட்ட அறிவாளியும் ஏற்கும் தன்மைக்குரிய தக்க ஆதாரமாய் அமைந்திருக்கிறது. **- பக்கம் 21**

❒ பார்ப்பான் என்று கூறினால் கூடச் சிலர் நம்மவர்களே குற்றம் கூறுகிறார்கள் “டே அவன் பிராமணன்டா அவனைப் பார்ப்பான் என்று கூறாதடா” அது தவறு என்று சொன்னால், நீங்கள் கேட்க வேண்டும் “அப்போது நீ யாருடா?” என்று. இந்த ஞானமெல்லாம் 3-அணாத் திருக்குறளில் இருக்கிறது வாங்கிப் படியுங்கள்! **- பக்கம் 39**

❒ ஆரியப் பித்தலாட்டத்திற்குச் சரியான மருந்து, சரியான மறுப்பு திருக்குறள்தான். **- பக்கம் 82**

❒ குறளுக்குள் கடவுள், மதம், ஜாதி, மோட்சம், முன்ஜென்மம் என்பவை போன்ற சொற்கள் இல்லவே இல்லை. . **- பக்கம் 112**

❒ ஆரியத்தை-மூடநம்பிக்கையை எதிர்த்துப் போராட வள்ளுவரின் குறள் நமக்குக் கேடயமாக இருக்கின்றது. **- பக்கம் 119**

❒ 1330 பாட்டுகளிலும் ஓர் இடத்திலாவது ‘இந்து’ என்ற சொல் காணப்படவேயில்லை. **- பக்கம் 1189**


❒ குறளை ஊன்றிப்படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய சகலமும் அதில் அடங்கியிருக்கிறது.

**- பக்கம் 49**

❒ குறளுக்கு இதுவரை கண்ட உரைகள் பல அவரவர்கள் கருத்துக்கு ஏற்ப கண்டவைகளாகவே காணப்படுகின்றன. ஆதலால்,

ஜாதி மத கடவுள் உணர்ச்சி கடந்து இயற்கை உணர்ச்சியோடு பகுத்தறிவைக் கொண்டு நடுநிலையில் நின்று உரை கண்டால், அவ்வுரை மூலம் திராவிடர் கழகம் விரும்பும் கருத்துக்களைக் காணலாம். ஆதலால் குறளைப் போற்றுங்கள் குறளைப் படியுங்கள்! குறள் உள்ளத்தைக் காணுங்கள்!

- பக்கம் 105




❐

# பகுதி - 5

# தமிழ்மொழி வளர்ச்சியும் தமிழர் மேன்மையும்

ஜாதியை ஒழிக்கவும், பெண்ணுரிமையை மீட்கவும்
தமிழ் - தமிழர் - தமிழ்நாடு உரிமையை மீட்கவும்
தந்தை பெரியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி
நிறைவேற்றப்பட்ட மாநாட்டுத் தீர்மானங்களில் சில...

# 1. தமிழர்கள் முன்னேற்றம் - சுயமரியாதை - விடுதலை



தமிழ்நாடு என்பதாக 10 ஜில்லாக்கள் கொண்ட ஒரு நாடு; தமிழ்மக்கள் அதாவது பார்ப்பனர் அல்லாதார் என்பதாக 2 கோடி மக்களைக் கொண்ட ஒரு சமூகம், தங்கள் முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் விடுதலைக்கும் என்பதாக ஏற்பட்ட ஒரு தமிழ் தினசரி பத்திரிகையை நடத்த முடியாமல் விட்டுவிடுவதென்றால் நமது சமூகத்தின் தாழ்ந்த நிலையைக் காட்ட இதைவிட வேறு ஆதாரம் வேண்டியதில்லையென்றே சொல்லுவோம்.

**- 'குடிஅரசு', 06.03.1927**

❒

# 2. பெரியார் நடத்திய மாநாட்டுத் தீர்மானங்கள் !

**சுதந்திரத் தமிழ்நாடு மாநாட்டுத் தீர்மானங்கள்:**

தமிழ்நாட்டை டில்லி ஆட்சி ஒரு காலனி நாடாகக் கருதி தமிழ்நாட்டின் பெருவாரியான செல்வத்தை தொடர்ந்து பறித்துக் கொண்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு வரி மூலம் டில்லி ஆட்சி ரூ.60 கோடி எடுத்து சென்று கொண்டிருக்கிறது. இதில் உதவி என்ற பெயரால் தமிழ்நாட்டுக்குத் திருப்பித் தருவது ரூ.6 கோடி தான்.

கடந்த பதினொரு ஆண்டுகளில் ரூபாய் நோட்டு அச்சடித்து தமிழ்நாட்டில் செலவாணிக்கு விட்டதன் வாயிலாக இதுவரை 1.35 கோடி ரூபாயை சுரண்டிச் சென்று இருக்கிறது.

மற்றும் அரசாங்க பாங்க் ஆயுள் இன்சூரன்ஸ், ரெயில்வே, தபால் இலாகா, அரசாங்கம் நடத்தும் வாணிகக் கார்ப்பரேஷன்கள் இவைகளின் மூலம் கிடைக்கும் லாபத்திலும் தமிழ்நாட்டுக்குப் பங்கு உண்டு; இந்தப் பங்கை டில்லி ஆட்சி ஏப்பம் விடுவதன் மூலம் சில கோடிகள் தமிழ்நாட்டின் பணத்தை டில்லி விழுங்கி வருகிறது.

இன்றிருக்கிற இந்திய தேசம் முழுவதுக்குமென வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் கடன் உதவித் தொகைகளிலும் தமிழ்நாட்டுக்குரிய பங்கு கிடைக்கவில்லை.

இத்தகைய துறைகளினாலும் வேறு பல சுரண்டல்களினாலும் கடந்த 11 ஆண்டுகளில் ஏறத்தாழ 800 கோடி ரூபாய்கள் அளவிற்கு தமிழ்நாட்டுப்பணத்தையும் உழைப்பையும் டில்லி பறித்திருப்பதனால் தமிழ் மக்களுடைய வாழ்க்கைத் தரம் குறைந்து வறுமை வாய்ப்பட்டு இன்னலுக்கு ஆளாகி இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் தொழிலாளி

மக்களும், நடுத்தர மக்களும் அன்றாட வாழ்விற்கும் வழியற்று திண்டாட்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

பண்டைக்காலத்தில் உலகமே கண்டு வியக்கும் பேரரசாக விளங்கிய தமிழ்த் திருநாடு இன்று அடிமைப்பட்டுக் கிடக்கிறது. தமிழ் மக்கள் சிறுபான்மைத் தன்மையினால் அடிமைகள் என்ற நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். அடிமை விலங்கைத் தகர்த்து விடுதலை பெறுவது என்பது இன்றியமையாததாகி விட்டது.

**தமிழ்நாட்டுக்குள் இன்று டில்லி இந்தி மொழியைத் திணித்து இருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழுக்குரிய இடங்களை எல்லாம் இந்தி ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. ரயில்வே, தபால் தந்தி, மணியார்டர், அஞ்சலட்டை, தபால் தலைகள், சின்னஞ்சிறு ஊர்களிலுள்ள தபால் முத்திரைகள், நாணயங்கள் ஆகிய அனைத்திலும் இந்தி புகுத்தப்பட்டிருக்கிறது; இந்திக்கு ஆட்சி பீடமும் தமிழுக்குத் தமிழ்நாட்டில் அடிமை நிலையும் இருப்பதை இனி பொறுக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இம்மாநாடு எடுத்துக்காட்ட விரும்புகிறது.**

தமிழ்நாடு 400 லட்சம் மக்களைக் கொண்டது. இந்நாடு உலகின் மற்ற நாடுகளைப் போன்று வலிவுபெற்று வல்லரசாக விளங்கிவிடவும் சுதந்திர நாடுகள் அங்கம் வகிக்கும் அய்க்கிய நாடுகள் சபையில் தமிழ்நாடும் தனக்குரிய இடத்தைப் பெற எல்லாத் தகுதியும் பெற்றிருந்தாலும்கூட அதை அடையத் தமிழ்நாடு சுதந்திர நாடாக இருந்தால்தான் முடியும்.

பொருளாதாரத் துறையில் மேம்பாட்டை அடையவும் உலகில் தமிழ்நாட்டுக்கு பண்டைய புகழும் பெருமையும் ஏற்படுத்தவும் தமிழ்மொழிக்கு சிறப்புச் செய்யவும் தமிழ் மக்கள் சுதந்திர மக்களாக வாழச் செய்யவும் தமிழ் மக்கள் வறுமை நீங்கி வாழ்க்கைத் தரத்தில் உயரவும் தமிழ்நாடு சுதந்திரமடைவது இன்றியமையாத தேவையாகி விட்டது. எனவே டில்லியின் பிடிப்பிலிருந்து முற்றிலும் விடுபட்ட முழு ஆதிபத்திய உரிமை படைத்த சுதந்திரத் தமிழ்நாடு பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இம்மாநாடு கருதுகிறது.

**06.07.1958 அன்று மன்னார்குடியில் நடைபெற்ற சுதந்திரத் தமிழ்நாடு மாநாட்டுத் தீர்மானங்கள்.**

★★★

**சிற்றுண்டிச் சாலைகளில் ஜாதி வித்தியாசம் ஒழிக்கப்பட வேண்டும்**

(அ) வகுப்பு பேதம் காண்பிக்கப்படுகிற எல்லா ஹோட்டல்களையும் காப்பிக்கிளப்புகளையும் இந்த மாநாடு கண்டிப்பதுடன், இவ்வித விஷமத் தனமான பேதங்களுள்ள ஹோட்டல்களுக்கும் காப்பி கிளப்புகளுக்கும் அவ்விதத்திலுள்ள அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கக்க்கூடாதென்றும் கேட்டுக் கொள்கிறது.

(ஆ) ரயில்வே அதிகாரிகள் தங்கள் வசத்திலுள்ள மேற்பார்வையிலும் உள்ள சாப்பாட்டுச் சாலைகளிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும், ஜாதி, மதம், வகுப்பு, நிறம் முதலியவற்றைப் பொறுத்து எவ்வகையிலும் வேற்றுமையாகப் பிரயாணிகளைப் பாராட்டாமலிருப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனே கைக்கொள்ளுமாறும், இவ்விழிவான வேற்றுமையை ஒழிக்க ரயில்வே ஆலோசனைக் கமிட்டியினரும் இந்திய சட்டசபை மெம்பர்களும் ஏற்பாடுகள் செய்யுமாறும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

**சித்த வைத்தியத்தை ஆதரிக்கவேண்டும்**

தஞ்சை ஜில்லா போர்டார் சித்த வைத்தியத்தை ஆதரிக்க வேண்டியது என்றும், பரம்பரை சித்த வைத்தியர்களைத் தாலுகா, ஜில்லா போர்களில் நியமிக்க வேண்டுமென்றும் ஸ்தல அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறது.

**பெண்களுக்குச் சமத்துவம் தேவை**

(அ) பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமமாகச் சொத்துரிமைகளும் வாரிசுபாத்தியதைகளும் கொடுக்கப்பட வேண்டுமென்றும்,

(ஆ) பெண்களும் ஆண்களைப் போலவே எந்தத் தொழிலையும் மேற்கொண்டு நடத்தி வருவதற்கு அவர்களுக்குச் சம உரிமையும் அவகாசமும் கொடுக்கப்பட வேண்டுமென்றும்.

(இ) பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், ஆரம்பக் கல்வி கற்றுக்கொடுக்கும் உபாத்தியாயர் வேலைக்குப் பெண்களையே நியமிக்கவெண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**- 1929 பிப்ரவரியில் நடைபெற்ற செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

★★★

## அனைவருக்கும் சம உரிமை தேவை

(இ) தீண்டாமை என்னும் கொடுமை மனித தர்மத்திற்கு விரோதமென்று இம்மாநாடு கருதுவதுடன், ஜனசமூகத்தில் எந்த வகுப்பாருக்கும் பொது உரிமைகளை மறுக்கும் பழக்க வழக்கங்களை உடனே ஒழிக்க வேண்டுமென்றும், பொது ரஸ்தாக்கள், குளங்கள், கிணறுகள், தண்ணீர்ப் பந்தல்கள், கோயில்கள், சத்திரங்கள் முதலிய இடங்களில் சகலருக்கும் சம உரிமை வழங்கவேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## பொட்டுக்கட்டும் வழக்கம் ஒழிய வேண்டும்

சிறுவயதுப் பெண் குழந்தைகளைத் தேவடியாள்களாகத் தயாரித்து பொதுவில் ஆடவும், பாடவும் விட்டுப் பொருள் சம்பாதிப்பதற்காகத் தயாரிக்கும் வழக்கத்தை இம்மாநாடு கண்டிப்பதோடு, இந்தியா சட்டசபையில் திரு. ஜெயகர் கொண்டு வந்திருக்கும் பொட்டுக்கட்டும் வழக்கம். மறுப்பு மசோதாவையும், சென்னைச் சட்டசபையிலிருக்கும் டாக்டர் முத்துலட்சுமி அவர்களின் மசோதாவையும் முழு மனமாய் ஆதரித்து அவை சீக்கிரம் சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்றும் வேண்டுகிறது.

**திரு. எம். ஆர். ஜெயகர் அவர்கள் தலைமையில் 10.05.1930ஆம் தேதி ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்**

★★★

### பெண்கள் முன்னேற வேண்டும்

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெண்களுக்குச் சொத்துரிமை, கலியாண உரிமை, கலியாண ரத்து, விதவை மணம் முதலியவைகளை அமலுக்குக் கொண்டு வரவேண்டியது அவசியமென்றால், அதற்கேற்ற சட்ட சம்பந்தமான காரியமும் செய்யப்பட வேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

### ஜாதிபாகுபாடு உள்ள ஓட்டலுக்கு லைசென்ஸ் தரக்கூடாது

ரயில்வே, முனிசிபாலிட்டி முதலிய எல்லைகளில் லைசென்ஸ் பெற்று ஜாதி வித்தியாசத்தைக் காண்பிக்கக் கூடியவாறு மக்களுக்குள் பார்ப்பனருக்கு என்றும், பார்ப்பனரல்லாதாருக்கு என்றும் தனித்தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கும் சாப்பாடு, காபி கிளப்புகளுக்கு இனிமேல் ரயில்வே போர்டாரும், முனிசிபாலிடியாரும் லைசென்ஸ் கொடுக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், இதற்கு வேண்டிய சட்டத்தை இயற்றச் சட்டசபை அங்கத்தினர்கள் ஊக்கமுடன் சட்டமாக்கி அமலுக்குக் கொண்டுவரக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**- தோழர் ஆர். கே. சண்முகம் தலைமையில் 1931 ஆகஸ்டில் நடைபெற்ற விருதுநகர் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள்**

★★★

### தமிழர்கள் ஒன்றுபட வேண்டும்

மற்ற நாடுகளைப்போல தமிழர்கள் ஒன்றுபட்டு ஒரு சமூகமாய் வாழ்வதற்கு இன்று பெருந்தடையாயிப்பது ஜாதி வேற்றுமையாதலால், ஜாதி வேற்றுமைகளை ஒழிப்பதற்கு இன்றியமையாத கலப்பு மணத்தை இம்மாநாடு ஆதரிக்கின்றது.

### தமிழ் மொழியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்

தமிழ் மாகாணத்தில் எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் மொழியை கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்வதுடன், பிறமொழிகள் தமிழ் மொழிக்கு விரோதமாகப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக வைக்கக்கூடாதெனத் தீர்மானிக்கிறது.

**வீதிகளில் பெயரைத் தமிழில் எழுத வேண்டும்**

சென்னை நகர் தமிழ் நாடாதலாலும் தமிழர்கள் முக்கால் பாகத்துக்கு மேல் வாழ்ந்து வருவதாலும் இதுவரை முனிசிபாலிட்டியார் வீதிகளின் பெயரை ஆங்கிலத்திலும் தமிழிலும் விளம்பரப் பலகைகளில் போட்டு வந்திருக்க, இப்போது புதிதாக தெருக்களுக்குப் பெயர் போடுவதில் ஆங்கிலத்தில் மட்டும் போடப்பட்டு வீதிகளின் பெயர் தமிழில் போடாமலிருப்பதால் ஆங்கிலமறியாத மிகுதியான தமிழ் மக்கள் தெருப்பெயர் தெரியாமல் தொல்லைப்படுவதை நீக்க தமிழிலும் வீதிகளின் பெயர் போடவேண்டுமென, சென்னை நகரசபையாரையும் மற்ற தமிழ்நாட்டு நகர சபைகளையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**ரயில் நிலையத்தில் தமிழில் எழுதவேண்டும்**

சென்னை ரயில் நிலையத்தில் பீச், போர்ட்டு, பார்க் என தமிழில் எழுதியுள்ளதை முறையே கடற்கரை, கோட்டை, (பூங்கா) தோட்டம் என தமிழில் எழுத வேண்டுமெனவும் அப்படியே ரயில் பயணச் சீட்டு டிக்கட்டு)களிலும் எழுதவேண்டுமெனவும் ரயில்வே கம்பெனி யாரையும். சென்னை அரசாங்கத்தாரையும் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது.

**- 13.11.1938 அன்று சென்னை, ஒற்றைவாடை நாடகக் கொட்டகையில் நடைபெற்ற தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்**

★★★

**ஆண் - பெண் சம உரிமை வழங்க வேண்டும்**

பெண்களுக்கு ஆண்களைப் போலவே எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டாலொழிய பெண்கள் விடுதலை ஏற்படாதென்று இந்த மாநாடு கருதுவதால், எல்லாத் துறைகளிலும் பெண்களுக்குச் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

**- 1931 ஆகஸ்டில் நடைபெற்ற விருதுநகர் 3ஆவது சுயமரியாதை வாலிபர் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானம்**

★★★

### விவசாயிக்குக் கடன் தொல்லை இருக்கக்கூடாது

விவசாயிகளுக்கு இன்று உள்ள கடன்களை ஏதாவது ஒரு வழியில் தீர்ப்பதுடன், இனிமேல் அவர்களுக்குக் கடன் தொல்லை ஏற்படாமல் இருக்கும் படியும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

**- 23.09.1934 சென்னை (S.I.L.F.) பார்ப்பனரல்லாதார் மாநாட்டுக்கு பெரியார் அவர்களால் அனுப்பப்பட்ட வேலைத் திட்டம்**

★★★

### 'திரு'. என்கிற தமிழ் வார்த்தையைச் சர்க்கார் உபயோகப்படுத்திட வேண்டும்

தமிழ்நாட்டு மக்களுக்கு மரியாதை வார்த்தைக்காக 'ஸ்ரீ' என்கிற ஆரிய வார்த்தையை வைத்துத் தமிழை அலட்சியப்படுத்தித் தமிழ் மக்கள் மனத்தையும் காங்கிரஸ் ஆட்சியார் புண்படுத்தியிருப்பதால், அதைமாற்றித்'திரு'என்கிறவார்த்தையைச்சர்க்கார்உபயோகப்படுத்த வேண்டுமென்று இம்மாநாடு சர்க்காரை வேண்டிக்கொள்கிறது.

**- 04.08.1940இல் திருவாரூரில் பெரியார் தலைமையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச் சங்க 15ஆவது மாகாண மாநாட்டில் நிறைவேறிய தீர்மானம்**

★★★

### விவசாயிகள் நலம்காக்க மருந்துவமனைகள் தேவை

உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காகவும், விவசாயிகளினுடைய சவுகரியத்துக்காகவும், இனிமேல் வைத்தியசாலைகள் அதிகமாகவும் ஏற்படுத்த வேண்டுமென்று மாநாடு மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

**- 29.05.1945 திருச்சி புத்தூர் மைதானத்தில் பெரியார் அவர்கள் தலைமையில் கூடிய 17-ஆவது திராவிடர் கழக மாகாண மாநாட்டில் நிறைவேறிய தீர்மானம்.**

★★★

**ரயில்வே கேட்ரிங் டிபார்ட்மெண்டில் அனைத்து ஜாதியினரும் இருக்கவேண்டும்**

இந்திய யூனியன் ரயில்வேக்களில் சகல சிற்றுண்டிச் சாலை, உணவு விடுதிகளிலும், ஒரு ஜாதியாரைக் கொண்டே நடத்துவதை இம்மாநாடு ஆட்சேபிப்பதுடன், மரக்கறி, மாமிச உணவு என்ற பாகுபாடு மட்டுமே கொண்டு எல்லோரும் ஏற்று நடத்தும் முறையில் செய்யவேண்டுமாயும், அதற்காக இருக்கும் ஆபீசில் (கேட்ரிங் டிபார்ட்மெண்ட்) எல்லா ஜாதியாரும் இருக்க வேண்டுமென்றும் இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக்கொள்கிறது.

**கல்லூரிகளில் தமிழ்வழிக்கல்வியே இருக்கவேண்டும்**

எல்லாக் கல்லூரிகளிலும் போதனா முறை தமிழிலேயே இருக்க வேண்டுமென்றும், தொழிற்கல்லூரிகளிலும் இம்முறை அனுஷ்டிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**- 8, 09.05.1948இல் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக 18ஆவது மாகாண மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்**

★★★

**சென்னையை ஆந்திரர்களுக்குத்தரக் கூடாது**

சென்னை நகரத்தை ஆந்திரர்கள் தங்கள் மாகாணத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற முயற்சியை இம்மாநாடு கண்டிப்பதுடன், அதுசம்பந்தமாக மத்திய அரசாங்கம் ஆந்திரர்களுக்கு ஏதாவது செவி சாய்க்குமானால் என்ன காரியம் செய்தாவது சென்னையை தமிழர்களுக்கு ஆக்கிக் கொள்வது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

**- தஞ்சை மாவட்ட திருவாரூர் மாநாடு - நிறைவேறிய தீர்மானங்கள் (02.10.1949)**

★★★

**திருக்குறள் அடிப்படையில் தனிச்சட்டம் தேவை**

இந்துலாவிற்குப் பதிலாக திருக்குறளையே அடிப்படையாகக் கொண்டு திராவிடர்கட்குத் தனியே ஒரு சட்டம் - முஸ்லிம்கட்குத் தனியே இருப்பது போல - ஏற்படுத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

திருக்குறளை எல்லா மக்களும் எளிதில் படித்துணருமாறு எளிய - இனிய நடையில் உரை எழுதி நூலாக்கி, இலவசமாக எல்லாப் பள்ளி பிள்ளைகளுக்கும், பொது மக்களுக்கும் வழங்கும் படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

★★★

**பெரியார் அவர்களின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்**

தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் பெரியார் அவர்கள் கூறும் சீர்திருத்தங்கள் தமிழில் டைப்ரைட்டர் உண்டாக்கவும், அச்சியேற்ற எளிதாகவும் இருப்பதால் அரசாங்கத்தார் இச் சீர்திருத்தத்தை எதிர்க்கட்சித் தலைவர் கூறியது என்று வீம்பாகக் கருதி இராமல், உடனடியாகப் பின்பற்றி அனைவரும் பின்பற்றுமாறு சட்டம் செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது இம்மாநாடு.

**தமிழை முதலாவதாக வை**

இரயில்வே நிலையங்களில் ஸ்டேஷன்களின் பெயர்களை முதலில் இந்தியிலும் மூன்றாவது ஆகத் தமிழிலும் எழுதித் தமிழகத்தாரை அவமதிக்கும் இவ்வரசாங்கத்தை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனே தமிழை முதலாக வைத்து மேற்படி போர்டுகளை மாற்றி எழுத வேண்டும் என்று அரசியலார்க்கு எச்சரிக்கிறது.

**- திருவத்திபுரம் திருக்குறள் மாநாடு - நிறைவேறிய தீர்மானங்கள் (18.01.1950)**

★★★

### தமிழ் மக்கள் வாழும் தாராவியைத் தூய்மைப்படுத்துக

சென்னை மாகாணத்தின் தமிழ் மக்கள் சுமார் 125ஆயிரம் பேர் வாழும் இடமாகிய தாராவியை பம்பாய் சர்க்கார் கவனியாமல், மிகவும் மோசமான நிலைமையில் அசுத்தத்தில் தமிழ் திராவிடர் வசித்து வரும் இவ்விடத்தை கவனித்து சுத்தப்படுத்திக் கொடுக்கும்படி இம்மாநாடு பம்பாய் சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**- பம்பாய் மாகாண திராவிடர் கழக மாநாடு நிறைவேறிய தீர்மானங்கள்**

**(11.02.1950, 12.02.1950)**

### பள்ளிக்கூடப் பாடத்தில் ஜாதிவேற்றுமை இருக்கக்கூடாது

ஜாதி மத வேற்றுமை உணர்ச்சிகளை உண்டாக்கும் போதனைகள் பள்ளிக் கூடங்களில் நடைபெறக் கூடாது; பொதுமக்கள் கூடும் பொது இடங்களிலும் அத்தகைய போதனைகள் நடக்க இடந் தரக் கூடாது; பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில் ஜாதி மத வேற்றுமைகளைப் போதிக்கும் கருத்துக்களும், கதைகளும் இருக்கக் கூடாது. எல்லா மக்களும் ஒன்று என்ற உணர்ச்சியும், பகுத்தறிவையும் வளர்க்கும் முறையில் உள்ள பாடப் புத்தகங்களையே பள்ளிக் கூடங்களில் போதிக்க வேண்டும்.

### அரசு அதிகாரிகளுக்கு ஜாதி அடையாளம் இருக்கக் கூடாது

அரசாங்கக் காரியாலயங்களில் வேலை பார்க்கும் அதிகாரிகள், சிப்பந்திகள் யாராயிருந்தாலும் அலுவல் நேரங்களில் ஜாதி, மத வேற்றுமைகளைக் காட்டும் வெளி அடையாளங்களுடன் தோற்றமளிக்கக் கூடாது. கல்வி நிலையங்களிலும் அலுவல் நேரங்களில் ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் ஜாதி, மத வேற்றுமைகளைக் காட்டும் - வெளி அடையாளங்களுடன் தோற்றமளிக்கக் கூடாது.

ஸ்தல ஸ்தாபனங்கள் காரியாலயங்களிலும் இந்த முறை பின்பற்றப்பட வேண்டும்.

இவ்வாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

### ஜாதி மறுப்புத் திருமணம் அவசியம்

ஜாதி வேற்றுமைகளை ஒழிப்பதற்கு ஜாதி, மத இனக் கலப்பு மணங்கள் அவசியம் ஆகும் - ஜாதி வேற்றுமையை ஒழிக்க வேண்டுமென்று உண்மையாகவே கருதுகின்ற வாலிபர்கள் கலப்பு மணந்தான் செய்து கொள்வது என்று சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஜாதியொழிப்பிலே ஊக்கமுடைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளை - பெண்களுக்கு கலப்பு மணம் செய்து வைக்க முயற்சிக்க வேண்டும்.

### ஜாதிமறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு முன்னுரிமை வேண்டும்

கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கே அரசாங்க உத்தியோகங்களில் முதல் சலுகை காட்ட வேண்டும்; கலப்பு மணத் தம்பதிகளின் பிள்ளைகளுக்கு ஆரம்ப உயர்தர கல்லூரி ஆகிய கலைக் கல்வி நிலையங்களிலும் சேர்வதற்கு முதலிடம் அளிக்க வேண்டும்; அவர்களுக்கே உபகாரச் சம்பளம் கொடுப்பதிலும் முதற் சலுகை காட்ட வேண்டும்.

**- சென்னை ஜாதி ஒழிப்பு மாநாட்டின் தீர்மானம் (17.02.1952)**

★★★

### கோவில்களில் தமிழுக்கும், தமிழர்க்கும் உரிமை வேண்டும்

“கோவில்களில் தமிழ்மொழியிலேயே அர்ச்சனை செய்ய வேண்டும். அதுவும் தமிழர்களை அர்ச்சனையாளராக ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த ஏற்பாட்டை ஒரு மாத காலத்திற்குள் செய்யாவிட்டால் கர்ப்பகிரகம் என்று சொல்லப்படுகிற இடத்திற்கு தமிழர்கள் பிரவேசிக்கக் கிளர்ச்சி தொடங்க வேண்டிவரும் என்று இந்துமத பரிபாலன இலாகாவுக்கு இம்மாபெரும் மாநாடு எச்சரிக்கை விடுகிறது.”

### பிராமணாள் காபி கிளப் விளம்பரப்பலகை அகற்றப்பட வேண்டும்

“ஜாதியற்ற சமுதாயம் காண விழையும் இந்நாளிலும் ஜாதிப் பெயரை முன்வைத்து “பிராமணாள் காபி கிளப்” என்று விளம்பரப்

பலகை தொங்கவிட்டிருக்கும் ஹோட்டல் முதலாளிகளை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. உடனடியாக அந்த விளம்பரப் பலகைகளை அகற்றிவிடும்படி ஹோட்டல் முதலாளிகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது ஒரு மாதத்திற்குள் மாற்றாவிட்டால் கிளர்ச்சி துவக்கப்படும் என்பதை அறிவிக்கிறது.

**பிராமணர்கள் என்று அழைக்கக்கூடாது**

தமிழர்கள் இனி பார்ப்பனர்களை "பிராமணர்கள்" என்று உச்சரிக்கக்கூடாது; 'பார்ப்பனன்' என்றே அழைக்க வேண்டும் என்று மானமுள்ள தமிழர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்வதுடன் கழகத் தோழர்கள் இதைக் கட்டளையாகவே பாவிக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறது.

**- மாயூரம் ஜாதி ஒழிப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: 25.11.1956**

★★★

**இமானுவேல்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜாதி உணர்ச்சி காரணமாக நடைபெற்ற கலவரத்தில் உயிர் இழந்த மக்களுக்கும், வீடு வாசல் சொத்து இழந்த மக்களுக்கும் குறிப்பாக இமானுவேல் அநியாயமாகக் கொல்லப்பட்டதற்கும் இம்மாநாடு வருந்துவதோடு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அரசாங்கத்தையும் அதற்கான பரிகாரஞ் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

**- 03.11.1957ஆம் தேதி நடைபெற்ற திராவிடர் கழக தஞ்சை சிறப்பு மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்**

★★★

**ஜாதியை ஒழிக்க அரசியல் சட்டத்தை எரித்த பெரியார் தொண்டர்கள்**

பெரியார் அவர்கள் ஆணைப்படி ஜாதி ஒழிப்பிற்கு அரசியல் சட்டத்தை எரித்து சிறைச் சென்று சிறைக் கொடுமைக்குப் பலியான தோழர்களான பட்டுக்கோட்டை ராமசாமி, மணல்மேடு

வெள்ளைச்சாமி, காரைக்கோட்டை ராமையன், கோவில் தேவராயன் பேட்டை நடேசன் ஆகியோர் மறைவுக்கு இம்மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

ஜாதி ஒழிப்புக்காக அரசியல் சட்டத்தை எரித்து சிறைப்பட்ட 4000 தோழர்களையும் தாய்மார்களையும் இம்மாநாடு பாராட்டுகிறது.

**தெருப்பெயர்களில் உள்ள ஜாதியை நீக்கவேண்டும்**

ஜாதியின் பெயரால் தெருப் பெயர்கள் அதாவது பறைத் தெரு, எடத்தெரு என்பது போன்று இருப்பவைகளை நீக்க தமிழ் மக்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுகிறது.

**- திருச்செங்கோடு ஜாதி ஒழிப்பு மாநாடு, 17.05.1958**

★★★

**குடியிருப்புப் பகுதிகளில் ஜாதி பேதம் கூடாது**

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு வசதி என்ற பெயரால், ஊரின் ஒதுங்கியப் பகுதிகளில் காலனிகள் கட்டிக்கொடுக்காமல், அவற்றை உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று கருதப்படுகின்றவர்கள் வாழுகின்ற வீதிகளிலேயே கட்டிக் கொடுத்து, ஜாதிக் கொடுமையை ஒழிக்குமாறு அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது!

**- 13.206.1964 அன்று திருவையாற்றில் நடைபெற்ற**

**ஜாதி ஒழிப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

★★★

**அனைத்து ஜாதி அர்ச்சகர்கள், தமிழில் வழிபாடு உரிமை வேண்டும்**

தமிழர் சமுதாயத்தின் சுயமரியாதையை முன்னிட்டு இன்று கோவிலில் இருக்கும் முறைகள் தமிழர்களது இன சுயமரியாதைக்கும், மொழி சுயமரியாதைக்கும், உணர்வுக்கும் - சமய சுயமரியாதை உணர்வுக்கும் மாறான தன்மையில் கேடு விளைவிப்பவையாய் இருப்பதால் இம்முறையை மாற்றி, தமிழர்கள் கர்ப்பக்கிரகம் என்பதற்குள்ளும் செல்லும் உரிமை பெறவும், தமிழர்கள் பூசாரியாக

இருக்க வேண்டிய உரிமையையும் தமிழில் வழிபாடு செய்யும் உரிமையையும் பெற வேண்டியதும், அதற்காக அவ்வுரிமைகளை அடையத் தேவையா கிளர்ச்சிகளைச் செய்ய வேண்டுமெனவும் இம்மாநாடு கருதுகிறது.

### சுயமரியாதையுள்ள தமிழர் ஆட்சி தேவை

தமிழர் ஆட்சி சுயமரியாதையை முன்னிட்டு தமிழ்நாடு பூர்ண சுதந்திரம் பெறவேண்டியது அவசியம் எனவும் அதுவரையில் தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பு - ஆதிக்கம் முழுவதும் தமிழர்களிடத்திலே இருக்க வேண்டும்; தமிழர்கள் என்பது இங்கு தமிழ்நாட்டிலுள்ள ஆரியர் அல்லாத பார்ப்பனரல்லாதார் ஆகும்.

அப்படி தமிழர்கள் இனவிகிதம் முற்றுப் பெறும் வரை அதிகமாக அனுபவிப்பவர்களாகிய மற்ற ஜாதி, மற்ற மதக்காரர்கள் ஆகியவர்களுக்குத் தரப்பட்டு வரும் பதவி, உத்தியோக கல்வி சலுகை, தெரிந்தெடுத்தல் சேர்க்கைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென இம்மாநாடு அரசாங்கத்தினரை கேட்டுக் கொள்கிறது.

**- சென்னை திராவிடர் கழக மாநில மாநாடு, 07.01.1962**

★★★

### பம்பையாற்றுத் தண்ணீர் வீணாக்காமல் தடுத்து நிறுத்த வேண்டும்

தமிழ்நாட்டின் பஞ்சப் பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தை செழிப்படையச் செய்ய மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே வீணாக ஓடிக் கொண்டிருக்கும் பம்பையாற்றுத் தண்ணீரை மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே திருப்பி விடும் முயற்சியைத் தமிழ்நாடு ஆட்சியினர் மிக விரைவாகச் செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

### தமிழ் அகதிகளுக்கு வசதி தேவை

இலங்கையிலிருந்து துரத்தப்படுகின்ற தமிழ் மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கும்படி தமிழ்நாடு ஆட்சியாளரையும் மத்திய ஆட்சியையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**- இராமநாதபுரம் மாவட்ட திராவிடர் கழக 3ஆவது மாநாடு, 22.07.1956**

### தமிழ்நாடு என பெயர் வைக்கவேண்டும்

மொழி வழி ராஜ்ய பிரிவினைக்குப் பின் அந்தந்த ராஜ்ய மக்களின் தாய்மொழியின் பெயரால் தங்களது ராஜ்யங்களுக்குப் பெயர் வைத்திருக்கும்போது, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழும் பகுதிக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்காமல் சென்னை ராஜ்யம் என்று பெயர் வைத்திருப்பதைக் கண்டு வருந்துவதுடன், சென்னை ராஜ்யம் என்றிருப்பதை மாற்றி 'தமிழ்நாடு' எனப் பெயர் வைக்கும்படி தமிழ்நாட்டு சர்க்காரை இம்மாபெரும் மாநாடு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறது.

(தந்தை பெரியார் அவர்களும் இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து விளக்கமாகப் பேசினார்கள்.)

### தமிழர்களுக்கு எதிரான பார்ப்பனர்களின் சூழ்ச்சித் திட்டம்

"கேரள நாட்டையும் தமிழ் நாட்டையும் ஒன்றாகச் சேர்த்து தட்சிணப் பிரதேசமாக்கி நாட்டு மக்களை என்றென்றும் தங்களுக்கு அடிமையாக வைத்துக் கொள்ள இந்த நாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சித் திட்டத்திற்கு ஆக்கம் தரும் நோக்கத்தில், ஒரு மலையாளியைத் தமிழ்நாட்டு கவர்னராக நியமித்திருப்பதாக இம்மாநாடு கருதி, இந்த நியமனம் செய்த டில்லி சர்க்காரை இம்மாநாடு கண்டிக்கிறது.

**- 24.11.1956இல் மாயூரத்தில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட திராவிடர் கழக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

★★★

### தமிழ் நாட்டிற்கு மலையாள கவர்னர் கூடாது

சென்னை மாநிலத்திற்கு கவர்னராக மலையாள பிரமுகராகிய ஏ.ஜெ.ஜான் நியமனத்தை எதிர்த்து மாநாடு கண்டனம் தெரிவிக்கிறது. தமிழ்நாடு கவர்னர் பதவிக்கு தமிழரை நியமிக்கும்படி மத்திய சர்க்காரை கேட்டுக் கொள்கிறது.

**சர்க்காருக்கு எச்சரிக்கை**

சென்னை மாநிலம் என்ற பிரிவால் அமைக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு ‘தமிழ்நாடு’ என்ற பெயரை அளிக்கும்படி சர்க்காருக்கு மாநாடு எச்சரிக்கிறது.

**கேரள, கன்னட அதிகாரிகளை அவர்கள் நாட்டிற்கே திருப்பி அனுப்புக**

சென்னை மாநிலத்திலுள்ள கேரள (மலையாள), கன்னட அதிகாரிகளை அவர்கள் நாட்டிற்கு மாற்றி அனுப்புவதோடு அவர்கள் உத்தியோகம் வகிக்கும் இடங்களில் தமிழ் அதிகாரிகளை நியமிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது. சென்னை மாநிலத்தில் தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வரும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

**- கோவையில் 02.12.1956 ஞாயிறு அன்று நடைபெற்ற கோவை மாவட்ட திராவிடர் கழக மாநாட்டில் கீழ்வரும் தீர்மானங்கள்.**

★★★

**காவேரி தண்ணீர் அரசு ஆவண செய்யவேண்டும்**

திருச்செங்கோடு மிகவும் தண்ணீர்க் கஷ்டம் நிறைந்து சொல்லமுடியாத நிலையில் இருக்கிறது. குடிதண்ணீருக்குக்கூட கஷ்டப்படும் திருச்செங்கோட்டிற்கு 7 மைல் தொலைவிலுள்ள காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டு வர முயற்சிக்கும் ஊராண்மைக் கழகத்தைப் பாராட்டுவதுடன் அரசாங்கமும் அதற்கு ஆவண செய்து துரிதமாக செய்ய வேண்டுமென்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**– திருச்செங்கோட்டில் 17.05.1958 அன்று நடந்த ஜாதி ஒழிப்பு மாநாட்டின் தீர்மானங்கள்**

★★★

**அண்டை மாநிலத்தவர்களுக்கு வேலைவாய்ப்புத் தருவதை நிறுத்துக**

தமிழகத்தில் இந்திய அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள, பொதுத்துறை நிறுவனங்கள், தொழிற்சாலைகள் இவற்றில் தமிழர்களை கேந்திர பதவிகளுக்கும், கீழ் மட்ட உத்தியோகங்களுக்கும் அமர்த்தி, தமிழர்களுக்கு

வேலைவாய்ப்பு தருவதற்குப் பதிலாக பார்ப்பனர்களையும், அண்டை மாநிலத்தைச் சேர்ந்தவர்களையும், வட நாட்டாரையும் அமர்த்தி வருவதை, இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், நெய்வேலி திருவெறும்பூர் கனரக பாய்லர் தொழிற்சாலைகள் போன்ற நிருவாகத்தில், பார்ப்பனரல்லாத தமிழ்நாட்டவரையே அமர்த்த வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறது. ஒவ்வொரு வேலை வாய்ப்புத் துறையிலும் பார்ப்பனருக்கே தருவதும் அயல் மாகாணத்தவரை அமர்த்துவதுமான தமிழ்நாடு பிரிவினைக்கு ஏற்ற நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ளுமாறு தமிழர்களைத் தூண்டுவதாகும் என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறது.

**- திருவெண்ணை நல்லூரில் நடைபெற்ற திருக்கோயிலூர் வட்டார திராவிடர் கழகமாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்**

❍❍❍

**பார்ப்பனர்களுக்கும், மலையாளிகளுக்கும் உத்தியோகம் சமூகநீதிக்கு விரோதம்**

தமிழகத்தின் முக்கிய கேந்திரங்களாகிய திருச்சி, நெய்வேலி முதலிய இடங்களில் உள்ள பாய்லர் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை, நெய்வேலி நிலக்கரித் தொழிற்சாலை ஆகிய நிறுவனங்களில், பார்ப்பனர்களுக்கும், மலையாளிகளுக்கும் பெரும் பகுதி உத்தியோகங்களை அரசாங்கம் வழங்கியிருப்பது சமூக நீதிக்கு விரோதமென்று, உறுதியாக இம்மாநாடு கருதுவதால் மேற்கண்ட நிறுவனங்களிலும், இவை போன்ற மற்ற நிறுவனங்களிலும் மற்ற அரசு அலுவல் துறைகளிலும், திராவிட தமிழ் மக்களுக்கு மக்கள் தொகை விகிதாசார அடிப்படையில் உத்தியோகங்களும், பதவிகளும் வழங்கும் வண்ணம் அரசியல் சட்டத்தைத் திருத்தி அமல் செய்ய வேண்டுமென்று இம்மாநாடு அரசாங்கத்தை வேண்டிக்கொள்கிறது.

**- 17.09.1966 அன்று அரியலூரில் நடைபெற்ற அரியலூர் டிவிசன் திராவிடர் கழக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

★★★

**சிவில் சப்ளை கமிஷ்னராக மலையாளிக்குப் பதிலாக தமிழரையே நியமிக்க வேண்டும்**

தற்போது தமிழக அரசாங்கத்தின் உணவு இலாகாவில் சிவில் சப்ளை கமிஷ்னராக மலையாளி ஒருவரை நியமித்துள்ளதன் காரணமாக, அவ்விலாகா, மலையாளிகள் மயமாக்கப்பட்டதோடு அவ்வதிகாரி சரிவர இயங்காமல், அரசினரின் சமதர்மத் திட்டத்திற்கே வெடி வைக்கும் அளவிற்கு நடந்து, உணவுத் துறையில் நாட்டில் கலகங்கள் ஏற்படும்படி நடந்து கொள்ளுவதால், உடனடியாக அவரை அப்பதவியிலிருந்து மாற்றுவதோடு, சமதர்மத் திட்டத்தில் நம்பிக்கை உள்ள ஒரு தமிழரையே அவ்விலாகாவிற்கு நியமிக்க வேண்டுமென இம்மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

**- அரியலூரில் 18.09.1966 அன்று நடைபெற்ற சமதர்ம மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

★★★

**தமிழர்களுக்கு சமவாய்ப்பு அளிக்கவேண்டும்**

நாட்டில் நிறுவப்பட்டு வரும் பொதுத்துறை நிறுவனங்களில் - உதாரணமாக நெய்வேலி நிலக்கரித் தொழிற்சாலை, திருச்சி பாய்லர் தொழிற்சாலை, பெரம்பூர் கோச்ஃபாக்டரி, திருச்சி துப்பாக்கித் தொழிற்சாலை, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆகியவற்றின் கேந்திர பதவிகள் முதல் சாதாரண பதவிகள் வரை பார்ப்பனர்களுக்கும், மாலையாளிகளுக்கும், வடநாட்டவர்களுக்கும் அபரிமிதமான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன் அந்நிறுவனங்களில் திராவிடத் தமிழ் மக்களுக்கு சமவாய்ப்பும் சந்தர்ப்பமும் அளிக்க வேண்டும் என்று இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கின்றது.

**தமிழர்கள் கல்வி, வேலைவாய்ப்புப் பெற வகுப்புவாரி உரிமை அவசியம்**

தமிழர்கள் பெரும்பான்மையினராக இருப்பதோடு, எவ்வித பதவிக்கும், எவ்வித கல்விக்கும் தகுதியான தன்மை

பெற்றிருந்தும் கூட ஜாதி இழிவு காரணமாய், கல்வி, உத்தியோகத் துறைகளில் - நியாயமாகப் பெறவேண்டிய பங்கு விகிதாசாரம் தரப்படாமல், சூழ்ச்சிகளாலும், தந்திரங்களாலும் வாய்ப்புகள் மறுக்கப்பட்டு வருவதும், நாம் அவ்வப்போது அதற்காக கூப்பாடுகள் போட்டு ஓரளவு பங்கு பெறுவதும், பார்ப்பனர் அதையும் ஒழிக்கத் தொடர்ந்து பற்பல முயற்சிகளை மேற்கொள்ளுவதுமான ஒரு இக்கட்டான நிலை இருப்பதனால், தமிழர்களுக்குள்ள இந்த நீண்ட காலக் குறைபாட்டிற்கு நிரந்தரப் பரிகாரம் தேடுவதற்கு வகுப்புவாரி உரிமை பெறுவதுதான் ஒரே வழி எனத் தெளிவாக இக்கமிட்டி கருதுவதால், அத்திட்டத்தைப் பெறுவதற்குத் தேவையான சகலவித பிரச்சார முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவசியப்பட்டால் கிளர்ச்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் இக்கமிட்டி முடிவு செய்கிறது.

**- 1967 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவிற்குப்பின் திருச்சியில் 09.04.1967 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

★★★

# 3. தமிழை விட மேலான ஒரு மொழி இந்நாட்டிலில்லை

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த ஒரு பெரிய இயக்கத்தை நான் நடத்தினேன். அதாவது, 'தமிழ்மொழி தாய்மொழியாக உள்ள இந்நாட்டில், இந்தியைப் புகுத்தக்கூடாது' என்று கிளர்ச்சி செய்தேன்.

அது என் தாய்மொழிப் பற்றுதலுக்காக என்று அல்ல; அது என் நாட்டு மொழி என்பதற்காக அல்ல; சிவபெருமானால் பேசப்பட்டது என்பதற்காக அல்ல; அகத்திய முனிவரால் திருத்தப்பட்டதென்பதற்காக அல்ல; மந்திர சக்தி நிறைந்தது; எலும்புக்கூட்டைப் பெண்ணாக்கிக் கொடுக்கும் என்பதற்காக அல்ல; பின் எதற்காக? தமிழ் இந்நாட்டு சீதோஷ்ண நிலைக்கேற்ப அமைந்துள்ளது. இந்திய நாட்டுப் பிற எம்மொழியையும்விடத் தமிழ் நாகரிகம் பெற்று விளங்குகிறது. தூய தமிழ் பேசுதல் – மற்ற வேற்றுமொழிச் சொற்களை நீக்கிப் பேசுவதால் நம்மிடையேயுள்ள இழிவுகள் நீங்குவதோடு, மேலும் மேலும் நன்மையடைவோம் என்பதோடு, நம் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப நம் மொழி அமைந்திருக்கிறது.வேறுமொழியைப்புகுத்திக்கொள்வதன்மூலம் நம் அமைப்புக் கெடுவதோடு, அம் மொழியமைப்பிலுள்ள நம் நலனுக்குப் புறம்பான கருத்துக்கள், கேடு பயக்கும் கருத்துக்கள் நம்மிடைப் புகுந்து நம்மை இழிவடையச் செய்கின்றன என்பதால்தான்.

வடமொழியில் நம்மை மேலும் மேலும் அடிமையாக்கும் தன்மை அமைந்திருப்பதால்தான் அதையும் கூடாதென்கிறேன். நமது மேன்மைக்கு, நமது தகுதிக்கு, நமது முற்போக்குக்கு ஏற்றமொழி – தமிழைவிட மேலான ஒரு மொழி இந் நாட்டிலில்லை

என்பதற்காகவே தமிழை விரும்புகிறேனே தவிர, அது அற்புத அதிசயங்களை விளைவிக்கக் கூடியது என்பதற்காக அல்ல.இம்மொழியில் - அதிசயங்கள் விளைவித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால், அந்தக் கருத்து நமக்குத் தேவையில்லை.ஏன்?ஆயிரம்முதலையைவைத்துக்கொண்டுதான் பாடிப் பாருங்களேன்; அவைகளில் எதுவாவது, தான் தின்ற ஒரு மீனையாவது கக்குகிறதா என்று; தாழ்ப்பாளிட்ட சிற்றறையின் முன்னின்றுதான், இலக்கணப்படியே மனம் உருகிப் பாடுங்களேன் - சிறிதாவது தாழ்ப்பாள் அசைகிறதா என்று; அற்புத சக்திகள் நிறைந்த மொழி என்று பிடிவாதம் செய்வது அறியாமைதான்; அது தமிழ்ப்பண்புகூட அல்ல. தமிழில் - அதிசயம், மந்திரம், சக்தி முதலிய சொற்களே இல்லை.

இதேபோல், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமைதான். ஏன்? நம் தாய் நம்மைப் பெற்றெடுத்ததும் நம்மைத்தெலுங்கன்வீட்டிலோ,துலுக்கன்வீட்டிலோவிட்டிருந்தால் நாம் தெலுங்கோ அல்லது உருது மொழியோ பேசுவோமா? அல்லது, நம் தாய் தமிழ் பேசியதன் காரணமாக நம்மைப் பீறிட்டுக்கொண்டு நம் நாவிலிருந்து தமிழ் தானாக வெளிவருமா? இன்னும் கவனிப்போம். நம் தாய் குழந்தையாக இருந்தபோது பேசியதென்ன? ‘பாய்ச்சி குடிக்கி’, ‘சோச்சி தின்னு’, ‘மூத்தா பேய்’, ‘ஆய்க்கு போ’ என்றுதானே பேசியிருப்பாள்! இப்போது நாம் பாச்சி, சோச்சி, மூத்தா ஆயி - என்றா பேசுகிறோம்? இந்தக் காலத்தில் நம் தாய்கள் பேசுகிற மொழியே அதிசயமாயிருக்கும். ஆதலால், தாய்மொழி என்று பிடிவாதம் செய்வதும் அறியாமை என்று தோன்றவில்லையா?

ஆதலால், ஒரு மொழியின் தொடர்பு நமக்கு நல்லதா கெட்டதா என்று சிந்திக்கும்போது நமது இடத்திற்கும், சீதோஷ்ணத்திற்கும் பொருந்தியிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். பிறகு அம்மொழியிலுள்ள கருத்துக்கள் நம் தன்மானத்தையும், மேன்மையையும், நலத்தையும், தகுதியையும் காக்கக்கூடியதா? அதிகப்படுத்தக் கூடியதா? அவற்றைக் கெடுக்கக்கூடியதா? என்றும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உதாரணமாக, தமிழ்மொழியின் வடமொழித் தொடர்பால் நமக்கேற்பட்டுள்ள, ஏற்படப்போகும் கெடுதிகளைப் பார்ப்போம். நம்மிடையேயுள்ள ஜாதிப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுவோம். ஜாதி என்ற வடமொழிச் சொல்லைத் தமிழிலிருந்து எடுத்துவிட்டால் அதற்குச் சரியான தமிழ்ச்சொல் ஒன்று கூறுங்களேன்! பண்டிதர்கள்தான் கூறட்டுமே. வார்த்தை இல்லையே ஆதலால், நம் மக்களிடையே ஆதியில் ஜாதிப் பிரிவினை இல்லை என்பதும், இது வடநாட்டுத் தொடர்பால்தான் ஏற்பட்டது என்பதும் தெரிகிறதா இல்லையா? அந்த வார்த்தையே இல்லாவிட்டால் ஜாதிபேத உணர்ச்சி அற்றுப்போகுமா, இல்லையா? கூறுங்களேன். இதேபோல் திவசம், திதி, கலியாணம், வைகுந்தம், சொர்க்கம், மோட்சம், நரகம், சாலோக, சாரூப, சாமீப, சாயுச்சிய என்ற இவ்வார்த்தைகள் - வடமொழியா? தமிழா? இவ்வார்த்தைகளின் தொடர்பால் நம் புத்தி தெளிந்ததா? இருந்த புத்தியும் போனதா? சிந்தித்துப் பாருங்கள்.

தாரா முகூர்த்தம், கன்னிகாதானம் என்ற பேர்கள் வந்தபிறகுதானே நம் பெண்கள் கணவனின் கைப்பொம்மைகள் ஆனார்கள்! அதன் பிறகுதானே, சிறிது சச்சரவு நேர்ந்து தன் வீட்டுக்கு வந்த தன் மகளைப் பார்த்து, 'ஆமாம்மா! உன்னைக் கன்னிகாதானம் செய்தாயிற்றே! உன்னை உன் புருஷனுக்குக் கொடுத்துவிட்டோம்; தானம் செய்து விட்டோமே! இனி, உனக்கு இடம் அவன் இருப்பிடம் தானம்மா' என்று கூறும் தகப்பன்மார்கள் தோன்றினார்கள்! கன்னிகாதானம் என்பதற்குத் தமிழ் வார்த்தை ஒன்று கண்டுபிடியுங்களேன். திருவள்ளுவர் 'வாழ்க்கைத் துணை' என்றுதானே கூறுகிறார். அதாவது, புருஷனும் மனைவியும் சிநேகிதர்கள், நண்பர்கள் என்றுதானே. அதற்குப் பொருள். எவ்வளவு கருத்து வேறுபாடு பாருங்கள். 'மோட்சம்' என்பதற்குத் தமிழ் வார்த்தை ஏது? மோட்சத்தை நாடி எத்தனைத் தமிழர் காலத்தையும், கருத்தையும், பொருளையும் வீணாக்குகிறார்கள், கவனியுங்கள். மதம் என்பதற்குத் தமிழில் மொழியேது? மதம் என்ற வார்த்தையால் ஏற்பட்டதுதானே மதவெறி? நெறி, கோள் என்றால் - வெறி ஏது?

'பதிவிரதாத்தன்மை' என்பதற்காவதுதமிழில்வார்த்தையுண்டா? 'பதிவிரதம்' என்ற வார்த்தை இருந்தால் - 'சதி விரதம்' அல்லது 'மனைவி விரதம்' என்கின்ற வார்த்தையும் இருக்கவேண்டுமே! இதுவும் வடமொழித் தொடர்பால் ஏற்றவினைதான். 'ஆத்மா' என்ற வார்த்தைக்குத் தமிழில் மொழியேது? ஆத்மாவால் எவ்வளவு மூட நம்பிக்கைக் களஞ்சியங்கள் நம் புலவர்கள், அறிஞர்களிடையேயும் புகுந்துவிட்டன? தமிழ்நாட்டு மக்களின் வழக்கங்கள் யாவும் பெரிதும் ஆண், பெண் இருபாலார்க்கும் சம உரிமை என்ற அடிப்படையின் மீதும், பகுத்தறிவு என்ற அடிப்படையின்மீதும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

நம் நாட்டு சீதோஷ்ண நிலையைப் பொறுத்தும் கருத்துக்களின் செழுமையைப் பொறுத்தும் நமக்குத் தமிழ்தான் உயர்ந்த மொழியாகும்.

**- தந்தை பெரியார்,**

**நூல்: எழுத்துச் சீர்திருத்தம்**

❒

# 4. தமிழை 'நீசபாஷை' என்று சொல்லும் மகாபாவிகளும் பார்ப்பனர்களில் இன்றும் உண்டு

திராவிட நாட்டில் இருக்கும் பார்ப்பனர்கள் அத்தனைப்பேரும் பித்தலாட்டக்காரர்கள், வஞ்சனைக்காரர்கள்; தமிழுக்கு, தாய்நாட்டு மொழிக்குத் துரோகிகள் என்பதற்கு அவர்கள் 'சுதந்திரம்' வருமுன்பே இந்தியை ஆதரித்ததும், வரவேற்றதும், இந்த நாட்டில் பள்ளிகள் வைத்துப் பரப்பியதும் – அரசியலின் மூலம் இந்திக்கு ஆக்கமும் ஆதரிப்பும் செய்ததான காரியங்களின் மூலமே விளங்கவில்லையா?

ஆச்சாரியார் தன்னைத் தமிழர் 'லிஸ்டில்' சேர்த்துக்கொள்கிறார். அவர் கோஷ்டி பத்திரிகாசிரியர்கள் தங்களைத் தமிழர் கோஷ்டியில் சேர்த்துக் கொள்கிறார்கள். ஒருகாலத்தில், இப்போது அய்க்கோர்ட் ஜட்ஜுகளில் பச்சைப் பார்ப்பனராக இருக்கும் ஜஸ்டிஸ் ஏ.எஸ். பஞ்சாபகேச அய்யர் அவர்கள் என்னைப் பார்த்து, 'நாயக்கரே! நான் ஆரியனா? திராவிடனா? என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். நீர் என்னையும் ஆரியனில் சேர்த்துக் கொள்ளுகிறீரே!' என்று கேட்டார். காலஞ்சென்ற ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களும் அப்படியே கேட்டார். கல்கி கிருஷ்ணமூர்த்தி முதலிய பார்ப்பன ஆசிரியர்களும் 'தமிழ் பேசுபவர்கள் எல்லோரும் தமிழர்கள்' என்று கிளர்ச்சி துவக்கி, தமிழர் மாநாடு கூட்டினார்கள். இந்தக் கூட்டத்தார்தானே இன்று இந்தியைத் தேசிய (தேச) மொழியாக்கவும், இந்திய அரசியல் (ஆட்சி) மொழி ஆக்கவும் பாடுபடுகின்றனர்; சூழ்ச்சிகள் பல புரிகின்றனர்; எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்க 'அண்டர் கிரவுண்ட்' வேலை செய்கின்றனர்.

கம்யூனிஸ்டு கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும், சோஷியலிஸ்ட் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும், தமிழ் இலக்கியக் கட்சியில் பார்ப்பனர் இருந்தாலும் இன்னும் எந்தக் கட்சியில் - எந்தக் கூட்டத்தில் - எந்த வேடத்தில் பார்ப்பனர் இருந்தாலும் எல்லோரும், இந்தியைத் தேசமொழியாக, ஆட்சி மொழியாக இருக்க வரவேற்பார்களே ஒழிய - வரவேற்கிறவர்களாக இருக்கிறார்களே ஒழிய எதிர்ப்பவர்களைக் காண்பது அரிது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானாலும், பார்ப்பானுக்குச் சென்னை இராஜ்யம் - திராவிட தேசம் சொந்த நாடல்ல, தாய் நாடல்ல என்பதோடு - தமிழ் மொழி சொந்த மொழியல்ல, தாய்மொழியும் அல்ல. அது மாத்திரமல்ல; தமிழை 'நீச பாஷை' என்று சொல்லும் 'மகா பாவி'களும் பார்ப்பனர்களில் இன்றும் உண்டு; அதற்கேற்ற ஆதாரங்களும் உண்டு என்று சொல்லவும் கூசமாட்டேன்.

ஆகவே, இந்தி எதிர்ப்பு ஒரு தேசிய(தேச)ப் போராட்டம்; ஒரு தேச மொழி(தமிழர்)ப் போராட்டம் என்பதைச் சுத்த (கலப்படமற்ற) தமிழ் (திராவிட) மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து தமது கடமையைச் செய்வார்களாக!

**('விடுதலை', தலையங்கம், 24.7.1952)**

❐

# 5. நமக்கு பழந்தமிழ் கிடைத்துவிடும்

தமிழும் ஒருகாலத்தில் உயர்ந்த மொழியாகத்தான் இருந்தது. இன்று அது வடமொழிக் கலப்பால், இடது கைபோல் பிற்படுத்தப்பட்டு விட்டது. இந்நோய்க்கு முக்கிய காரணம் தமிழ்மொழி மதச்சார்புடையோரிடம் சிக்கிக் கொண்டதுதான். தமிழ் சைவ மொழியாக ஆக்கப்பட்டதால்தான் சைவத்திற்காக வேண்டி வடமொழியும், வடமொழிக் கலைகளும் அதிகமாகத் தமிழ்நாட்டில் புகத் தொடங்கின. தமிழ் மன்னர்கள் ஆரிய மதத்தை ஏற்றுக்கொண்டதால், அம்மதக்கருத்துகளை விளக்கத் தமிழில் சொற்கள் இல்லாதுபோகவே அதிகமாக வடமொழிச் சொற்களைக் கையாள ஆரம்பித்தனர். தமிழிலிருந்து சைவத்தையும், ஆரியத்தையும் போக்கிவிட்டால், நம்மையறியாமலே நமக்குப் பழந்தமிழ் கிடைத்துவிடும்.

– தந்தை பெரியார்,

நூல்: தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

❒

# 6. தமிழ் மொழி வளர்ச்சிக்காக செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள்

தமிழ்மொழி வளர்ச்சிக்காக அதில் செய்யப்பட வேண்டிய சில சீர்த்திருத்தங்களைக் குறித்து எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மொழி திருத்தம்**

தமிழ்மிகுதியும்நம்முற்போக்குக்குஏற்றபடிசெம்மைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும். "இன்றைய தமிழ் மிகவும் பழைய மொழி, வெகுகாலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது, மற்ற மொழிகளைப்போல திருத்தப்படாதது" என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறையாகுமே தவிர, பெருமையாகாது என்பேன். ஏன்? பழமை எல்லாம் அநேகமாக மாற்றமாகி இருக்கிறது; திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும், திருத்துவதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ, ஆகிவிடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும், திருத்தவும் வேண்டும். பிடிவாதமாய்ப் பாட்டிக்காலத்திய, பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக்கொண்டிருந்தால், கழிபட்டுப் போவோம்; பின்தங்கிப் போவோம். மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். போர்க் கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ளவேண்டும். நம் பண்டிதர்கள் இந்த இடத்திலும் நம் மொழிக்கு மிக்க அநீதி விளைவித்துவிட்டார்கள். தமிழ் சிவனும், சுப்ரமண்யனும் பேசிய மொழி, உண்டாக்கிய மொழி என்று பண்டிதர்கள் கூறுகிறார்கள். அதே சிவனும் சுப்ரமண்யனும் உபயோகித்த போர்க்கருவிகள்

இன்று நம் மக்களுக்குப் பயன்படுமா? அவைகளை நாம் இன்று பயன்படுத்துவோமா? அல்லது அவர்களே இன்று போரிட நேர்ந்தால் அவைகளைப் பயன்படுத்துவார்களா? சிந்தித்துப் பாருங்கள். கடவுள் உண்டாக்கினார் என்பது நமக்குத் தோன்றிய இயற்கைத் தத்துவம் ஆகும். இயற்கையின் தத்துவம் நமதுஅறிவு வளர்ச்சிகளுக்கேற்ப மாறுதல்களுக்கும், செப்பனிடுவதற்கும் வசதியளிக்கக்கூடியதேயாகும். சிவன் கோலும், மழுவும், கத்தியும், வேலும், ஆலமும் கொண்டுதான் சண்டைபிடித்து இருக்கிறாராம். விஷ்ணு வந்த பிறகே வில் வந்திருக்கிறது. அதன் பிறகே துப்பாக்கியும், அதிலிருந்து பீரங்கியும், மிஷின் பீரங்கியும் ஏற்பட்டு இன்று அணுகுண்டு வரை போர்க்கருவிகள் முன்னேற்றமாகியிருக்கின்றன. இன்று நாமோ, நம் கடவுள்களோ போரிட நேர்ந்தால், வில்லும் வேலுமா உபயோகிப்போம்? ஆகவே, போர்க்கருவிகள் மாற்றமடைந்திருப்பதுபோல் நமது மொழியும் மாற்றம் அடையவேண்டாமா? போர்க்கருவிகளில் மாற்றத்தை அனுமதித்த கடவுள்கள் மொழிமாற்றத்தை மட்டுமா அனுமதிக்கமாட்டார்கள்? ஆகவே, மாற்றுங்கள்; மதியுள்ள கடவுள்களும் மாற்றத்தை வெறுக்கமாட்டார்கள்.

**எழுத்து மாற்றம்**

ஆகவே, பிறர் சுலபமாகத் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக் கோர்க்கவும், டைப் அடிக்கவும், தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்று நினைக்கிறேன்.

தமிழில் எழுத்துக்கள் அதிகம். மொத்த எழுத்துக்கள் 216 வேண்டியிருக்கிறது என்றால், இதில் 135 எழுத்து உருவங்கள் தனித்தனி ஞாபகத்தில் வைக்க வேண்டி இருக்கிறது.

தமிழ் எழுத்துக்கள், ஆங்கிலம் முதலிய சில அந்நிய வடமொழி எழுத்துக்களை, எழுத்துக் கூட்டுவதற்கு ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கிய நேர் முறையைக் கொண்டதானாலும் எழுத்துக்களைக் கற்கவேண்டியது கஷ்டமாகிறது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அவைகளில் உயிர் எழுத்துக்கள் 5 அல்லது 6 மெய்

எழுத்துக்கள் 20 என்னலாம். எல்லாம் தனி எழுத்துக்களே. உயிர்மெய் எழுத்துக்கள் அதாவது, உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் கிடையாது. வெகு சுலபமாக எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால், இலக்கண முறை, உச்சரிப்பு முறை ஒரு பொது வரையறைக்குக் கட்டுப்பட்டதல்ல. தமிழ் அப்படியல்ல. எழுத்துக் கூட்டுதலும் உச்சரிப்பும் அதன் இலக்கணமும் பெரிதும் இயற்கையையே அடிப்படையாகக் கொண்டதாகும். அப்படிப்பட்ட மொழியை நாம் ஏன் நவீன முயற்சிக்கு ஏற்றவண்ணம் செப்பனிடக்கூடாது?

சாதாரணமாகத் தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்துவிடலாம். இந்த இரண்டும் தேவையில்லாத எழுத்துக்கள். மேலும், இவை கூட்டெழுத்துக்களே ஒழிய, தனி எழுத்துக்கள் அல்ல. இவை இல்லாமல் எந்தத் தமிழ்ச் சொல்லையும் எழுதலாம், உச்சரிக்கலாம். இவைகளை எடுத்துவிட்டால் சொற்களின் உச்சரிப்பிலோ, பொருளிலோ, இலக்கணத்திலோ எவ்விதக் குறையும் குற்றமும் ஏற்பட்டுவிடும் என்று தோன்றவில்லை, சுமார் 40 வருடங்களுக்கு முன்னால் இருந்தே நான் இதைக் கவனித்து வந்திருக்கிறேன், இந்தப்படி எழுத்து கோர்த்து அச்சடிக்கப்பட்டுள்ள ஒரு குறள் புத்தகத்தையும் நான் 40 வருடத்திற்கு முன்பே பார்த்திருக்கிறேன். இப்படிச் செய்வதில் மொத்தத்தில் 38 எழுத்துக்கள் (அதாவது, உயிரெழுத்து ஐ ஔ ஆகிய 2ம் அவை ஏறும் மெய் எழுத்துக்களில் 2ஓ18=36ம் ஆக 36+2=38) ஞாபகத்திற்கும் பழக்கத்திற்கும் தேவை இல்லாத எழுத்துக்கள் ஆகிவிடும். (ஐ-அய்; ஔ-அவ் என எழுதலாம்) இவை தவிர, உயிர் மெய் எழுத்துக்களில் தனிமாற்றம் பெற்றிருக்கிற ணு, ற, னு ஆகிய மூன்று எழுத்துக்களுக்கும் தனி உருவம் தேவை இல்லாமல் ணா, றா, னா போல் ஆக்கிவிடலாம்.

மற்றும், மெய் எழுத்துக்களில் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகிய நான்கு குறில் நெடில் எழுத்துக்கள்கொண்ட 4ஓ18=72 தனி உருவ எழுத்துக்களை நீக்கிவிட்டு தனி சிறப்புக் குறிப்பை அதாவது, ககரத்திற்கு ஆகார நெடில் உருவம் காட்ட ஒரு 'ா' (கால்) போட்டு விடுவதுபோல், ககரத்துக்கு எகரம், ஏகாரம் காட்ட ஒத்துச்

சுழிக்கொம்பு, இரட்டைச் சுழிக் கொம்பு , 'ெ, ே' போடுவதுபோல் மற்ற இகர ஈகாரத்துக்கும் உகர ஊகாரத்துக்கும் சில குறிப்புகளை உண்டாக்கி, உயிர் 10, மெய் 18, குறில் நெடில் குறிகள் 9, ஆயுதம் 1 ஆகிய 38 தமிழ் எழுத்துக்களாகச் சுருக்கிவிடலாம்.

இதைப்பற்றி மற்றொரு சொற்பெருக்கில் தெளிவாக்க இருக்கிறேன். இந்த மாறுதல்கள் செய்வதால் நாம் மொழிக்கோ, பொருளுக்கோ, இலக்கணத்துக்கோ எவ்விதகுறைபாடோ, கேடோ செய்தவர்களாக ஆக மாட்டோம். துருக்கியில் கமால் பாட்ஷா அவர்கள் எழுத்துக்களின் அடிப்படையையே மாற்றிவிட்டார். அதாவது, இருந்த எழுத்துக்களையே ஒழித்துவிட்டு வேறு மொழி (ஆங்கில) எழுத்துக்களை எடுத்துக் கொண்டார். அதனால் கற்க மிக வசதியும் இலகுவும் ஏற்பட்டுவிட்டது. அய்ரோப்பாவில் நான் சுற்றுப்பிரயாணம் செய்த ரஷ்யா முதல், போர்த்துகல் வரை சுமார் 10, 15 நாடுகளிலும் எத்தனையோ மொழிகள் இருந்தும், அந்த மொழிகளுக்குப் பெரிதும் ஒரே மாதிரி 26 முதல் 32 எழுத்துக்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. சில புதிய தனி ஒலி கொண்ட மொழிகள் இருக்குமானால் அவற்றிற்கு ஏற்ப 2-அல்லது 3, புதிய உருவ எழுத்துக்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் சமீபகாலத்தில் எழுத்துக் கூட்டும் முறைகள், இவைகளில் மாற்றம் செய்வதால், இலக்கணத்தில், உச்சரிப்பில், பொருளில் மாற்றம் ஏற்படுவதாயிருந்தாலும்கூட துணிவாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லும் மாற்றங்களுக்கு அப்படிப்பட்ட குற்றங் குறைகள் இல்லையென்றே கருதுகிறேன்.

நமது தமிழ்ப் பண்டிதர்கள் இம்மாற்றங்களுக்கு ஒப்புக்கொள்ள வேண்டுமே, அதுவன்றோ பெரிய கஷ்டம். மேல் நாடுகளில் பண்டிதர்கள் என்றால் புத்துலகச்சிற்பிகளாயிருப்பார்கள். நம் நாட்டிலோ பண்டிதர்கள் பழமைக்கு இழுத்துக்கொண்டுபோகும் பாட்டி கதை வீரர்களாக இருக்கிறார்கள், பண்டு என்ற சொல்லிலிருந்து அதாவது பண்டையர்கள் என்பதுதான் பண்டிதர் என்ற சொல்லாகத் திரிந்தது என்று மூலம் கண்டுபிடிக்கத்தக்கவர்களாக இருக்கிறார்கள். எழுத்து, மொழி சீர்திருத்தத்தில் எனக்குத் தெரிய எந்தப் பண்டிதரும்

பாடுபட்டிருப்பதாகக் காண முடியவில்லை. காலஞ்சென்ற மாணிக்க நாயக்கர் அவர்கள் அக்காலத்தில் சிறிது பாடுபட்டார். ஆனால், அவர் சமயத்தை (ஓங்காரத்தை) தலையாக வைத்துக்கொண்டு பாடுபட்டார். ஆதலால், அக்காலத்தில் அவரிடம் எனக்குப் பற்றிருந்தும் எனக்கு ஓங்காரத்தில் இருந்த வெறுப்பு அவரது முயற்சியையும் அறிவுத் திறனையும் அனுபவிக்க முடியாமற்படி செய்துவிட்டது. அவர் இப்போது இருந்தால் எவ்வளவோ செய்திருப்பார்.

அடுத்தபடியாக, மெய்யெழுத்துக்களில் 'ந, ங, ஞ' ஆகிய மூன்று எழுத்துக்களையும் எடுத்துவிடலாம். 'ன் + த = ந' 'ன் + க = நு' 'ன் + ச = ஞ' என்று ஆக்கிவிடலாம். எனவே, மெய் எழுத்தில் ந, ங, ஞ ஆகிய மூன்றையும் குறைக்கலாம். இவை தனித்தனியாகத் தேவையில்லை என்றே தோன்றுகிறது. உயிரெழுத்துகளில் அய்யும், அவ்வும் எப்படி கூட்டெழுத்துக்களோ அப்படியே உயிர் மெய்யிலுள்ள கூட்டெழுத்துக்கள்தான். இந்த ந, ங, ஞ என்ற மூன்றும், பந்து என்ற வார்த்தையையும், பங்கு என்ற வார்த்தையையும் 'பஞ்சு' என்ற வார்த்தையையும் எடுத்துக்கொள்வோம். ந, வையும், ங வையும், ஞ வையும் எடுத்துவிட்டால், 'பன்து' 'பன்கு' 'பன்சு' என்று எழுதவேண்டியிருக்கும். இந்தச் சொற்களின் உச்சரிப்பை முதலில் சொல்லிக்கொடுத்துவிடலாம். அல்லது சாதாரணமாக உச்சரிப்பு பழக்கத்திலேயே இருந்து வரும். பொதுவாகவே 'த'வுக்கு முன் வந்தால் இப்படி உச்சரிக்கவேண்டும். 'க'வுக்கு முன் வந்தால் இப்படி உச்சரிக்கவேண்டும் என்று சொல்லிக் கொடுத்துவிட்டால் பிறகு உச்சரிப்பதில் கஷ்டமிருக்காது. ஆங்கிலத்தில் இம்மாதிரி பல உச்சரிப்புகள் இருக்கின்றன. உதாரணமாக, ஞரவ (பி.யு.டி) புட் என்றும், க்ஷரவ (பி.யு.டி) பட் என்றும்தான் உச்சரிப்பார்கள். இந்த வார்த்தைகள் முதலில் அறிமுகமாகாதிருந்தால், ஒரே மாதிரிதான் உச்சரிக்க வேண்டியிருக்கும். ஒரு எழுத்துக்குப் பல சப்தங்கள் இருப்பதும் தமிழுக்குப்புதிதல்ல. 'த' என்னும் எழுத்து, தடி என்ற சொல்லில் ஒருவிதமாகவும் பதம் என்ற சொல்லில் வேறுவிதமாகவும் ஒலிக்கவில்லையா?

அதேபோல் 'ன' என்ற எழுத்துக்கே 'ந' சப்தமும், 'ங' சப்தமும், 'ஞ' சப்தமும் இருந்தால் ஒன்றும் கெட்டுவிடாது. இந்தச்

சீர்திருத்தங்களைச் செய்தால் தமிழ் தனி உருவ எழுத்துக்கள் வெகு சொற்பமாகிவிடும். உயிர் எழுத்துக்கள் - 10. நெட்டெழுத்துக்கள் எல்லாவற்றிற்கும், 'ா' (காலே) போட்டுவிடுவதால் அய்ந்து உருவ எழுத்துக்கள்தான் இருக்கும். அதாவது, (ஆங்கில வவ்வல்கள் போல்) அ,இ.உ,எ,ஒ நெட்டெழுத்துக்கள், அா, இா, உா, எா, ஒா என்றே எழுதலாம். மெய்யெழுத்துக்கள் 18-ல் '3' எழுத்துக்கள் (ந், ங், ஞ்) எடுக்கப்பட்டால் 15 எழுத்துக்களையும், மேலே புள்ளி வைக்காமல் பக்கத்தில் ஒரே ஒரு கோடு இழுப்பதன் மூலம் காட்டலாம். அதாவது, க\, ச\, ட\, த\, ன\ என்றபடி எழுதினால், க், ச் என்று அர்த்தப்படுத்திப் படிக்கலாம். ஆக, சிறப்புக் குறிகளில்

| | | |
|---|---|---|
| **இந்தக் கோடு** | | **1** |
| ஆ | ா | 1 |
| இ | | 1 |
| ஈ | | 1 |
| உ | ு | 1 |
| ஊ | ூ | 1 |
| எ | ெ | 1 |
| ஏ | ே | 1 |
| | குறிகள் | 8 |

ஆக 8 - சிறப்புக் குறிகளில், இகர, இகாரத்திற்கும், உகர உகாரத்திற்கும், 4 - குறிகள் புதிதாகத் தோற்றுவிக்கப்படவேண்டும். ஓகாரத்திற்கும் எகர, ஏகார ஆகாரக் குறிப்புகளே பயன்பட்டு விடுவதால் அவற்றிற்காகத் தனிக்குறிப்பு வேண்டியதில்லை. அல்லது ெ, ே என்ற இந்தக் கொம்புகளை வேறுவகையில் மாற்றிப் போட்டுக் கொள்ளலாம். கடைசியாக ஆய்தம் 1 இருக்கலாம்.

**எழுத்துச் சீர்திருத்தம்**

| | | |
|---|---|---|
| இப்போது, உயிர் | | 5 |
| | மெய் | 15 |

| | |
|---|---|
| சிறப்புக்குறி | 8 |
| ஆய்தம் | 1 |
| | 29 |


29, உருவ எழுத்துக்களிலேயேகூட தமிழ் எழுத்துக்களுக்கு எண்ணிக்கையையும் (தமிழ் மொழியை) அடக்கி விடலாம், அல்லது சிலர் கருதுவதுபோல், 12-உயிரெழுத்துக்களில் ஐ, ஔ, தவிர, மற்ற பத்தில், 'அ'வை அப்படியேயும், 'ஆ'வுக்குப் பதிலாக 'ா'வையும், 'எ', 'ஏ' வுக்குப் பதிலாக 'ெ', 'ே' என்ற குறிப்புகளையும் வைத்துக் கொண்டு, இ, ஈ, உ, ஊ, ஒ, ஓ என்ற ஆறு எழுத்துக்களுக்கு, ஆறுபுதுஎழுத்துக்களை உற்பத்தி செய்துகொண்டு இவற்றையே உயிர் மெய்யாக்க மெய்யோடு சேர்த்துப் படிப்பதனால், அப்போது

| | |
|---|---|
| உயிர் | 10 |
| மெய் | 15 |
| ஆய்தம் | 1 |
| மெய்க்குறிப்பு | 1 |

ஆக, 27 எழுத்துக்களாகும். இந்த 27 எழுத்துக்களைக் கொண்டே நமது சகல சொற்களையும் அதிசுலபமாக எழுதிவிடலாம். பிறமொழிச் சொற்களை நம் மொழியால் எழுதுவதற்குத் தேவைப்பட்டால் ஒன்றிரண்டு வேறு எழுத்துக்களையும் உண்டாக்கிக் கொள்ளலாம். அறிஞர்களும், பண்டிதர்களும் தீர்க்கமாய் சிந்தித்து ஒருமுடிவுக்குவர வேண்டும். எப்படியும் தமிழ்மொழி எழுத்துக்கள் குறைக்கப்பட்டாக வேண்டும். அச்சுக்கோர்ப்பதற்கும், டைப் அடிப்பதற்கும் ஆங்கிலத்தைப்போல் இலகுவாக்கப்படவேண்டும் என்பதும், கற்கும் பிள்ளைகளுக்கும் 3 மாதத்தில் படிக்கத் துவக்கலாம் என்பதுதான் நமது ஆசை. இப்போது இதோடு முடிக்கின்றேன்.

❒

# 7. எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது



தமிழ் எழுத்துக்களில் ஒரு சில மாற்றம் செய்தேன். அநேகப் பண்டிதர்கள் எனக்கு நன்றி செலுத்தி என்னைப் பாராட்டினார்களேயல்லாமல், ஒருவராவது அம்முயற்சிக்கு ஆதரவு அளித்தவர்கள் அல்ல. இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்ய நான் தகுதியற்றவன் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் தகுதியுள்ளவர்கள் எவரும் வெளிவராவிட்டால் நான் என் செய்வது? என்னைக் குறை கூறவோ, திருத்தவோ முயற்சிப்பதன் மூலமாகவாவது இதற்கு ஒரு வழி பிறக்காதா என்றுதான் துணிந்தேன், இதுவரை யாரும் அதை இலட்சியம் செய்யவில்லை. ஆனாலும், நான் அம்முறையிலேயே இரண்டு, மூன்று பத்திரிகைகள் நடத்துகிறேன்; அம் முறையிலேயே 10, 20 புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறேன். இன்னமும் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது.

- 'குடிஅரசு', 26.1.1936

❒

# 8. பெரியார் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தமிழ்நாடு அரசு ஆணை

பொது (செய்தி, மக்கள் - தொடர்பு)த் துறை

செய்தி வெளியீடு எண்-449 நாள் 19-10-1978

பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு ஏற்று, அதனை நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை நிலை எண் 1875 19-10-1978)

தமிழ் மொழி எழுத்துத் தொகுதி எளிதில் கையாள முடியாதபடி அதிகமாக உள்ளதால், அச்சிடுதல், தட்டச்சு செய்தல் போன்றவற்றில் அதிக நேரம், விரயம் செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழ் எழுத்துத் தொகுதிகளில் சீர்திருத்தம் தேவை என பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்கள், தமது வாழ்நாளில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கையாண்டு வந்ததுடன் அதனை அனைத்துத்துறைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்று, மிகவும் வலியுறுத்தி வந்தார். அதனை நடைமுறைப்படுத்தத்தக்க ஆணை வெளியிட வேண்டி பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவினர் அரசைக் கேட்டுக் கொண்டனர்.

பெரியார் நூற்றாண்டு விழாவினை 18-9-78 அன்று ஈரோட்டில் தொடக்கி வைத்து, பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை தமிழக அரசு செயற்படுத்துமென தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரும் பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி, பரிந்துரை செய்துள்ளார்.

❐

# 9. பெரியார் ஒரு தொலைநோக்காளர்

தந்தை பெரியர் அவர்கள் இருபதாம் நூற்றாண்டு தந்த இணையற்ற சமூக விஞ்ஞானியாவார். எதையும் தனது சிந்தனையால் விருப்பு - வெறுப்பின்றி சமுதாய, மக்கள் பயனுறும் கண்ணோட்டத்திலேயே சிந்தித்து கருத்துக்களைக் கூறும் துணிச்சல் அவரது இயல்பு.

நமது மக்களில் மிகப்பெரும்பாலோர் ஏன் கல்வி அறிவற்றவர்களாக இருக்கிறார்கள்? அவர்கள் அனைவரும் எளிதில் எழுத, படிக்க, சிந்திக்க எப்போதுதான் பரவலாக வருவார்கள்? - இப்படி கவலையோடு கேள்வி கேட்டார் - விடையும் கண்டார்!

'நோய்நாடி நோய் முதல்நாடி' பரிகாரம் காணும் தன்மையே அவரது அணுகுமுறை.

தமிழ்நாட்டில் உள்ள நம் தமிழ் மக்களில் பெரும்பாலோருக்கு ஏன் எழுதப் படிக்க வாய்ப்பில்லை என்பதுபற்றி சிந்தித்த தந்தை பெரியார் அவர்கள், அதற்குரிய மூலகாரணங்களை மக்கள் முன் வைத்தார்!

1. குலதர்மம் என்ற வர்ணதர்ம முறைப்படி, மிகப் பெரும்பாலோரான சூத்திர, பஞ்சம மக்கள் படிக்க தடை இருந்தது. வேதம், இதிகாசங்கள், உயர்ஜாதியினருக்கு-பார்ப்பனருக்கு மட்டுமே படிக்க உரிமை தந்தன.

2. அத்தடைகளையும் தாண்டி படிக்க முனைந்தாலும், ஏராளமான எண்ணிக்கையில் உள்ள தமிழ் எழுத்துக்களை அம்மக்கள் கற்பது கடினமாகவே உள்ளது.

இவ்விரண்டு தடைகளையும் உடைத்தெறிய சூளுரை மேற்கொண்டார் அய்யா அவர்கள்.

அவரது சிந்தனை முத்துக்கள் இதோ, படியுங்கள்.

"தமிழ்ப் பாஷை எழுத்துக்கள் வெகுகாலமாகவே எவ்வித மாறுதலும் இல்லாமல் இருந்து வருகின்றன.

உலகில் உள்ள பாஷைகள் பெரிதும் சப்தம், குறி, வடிவம் எழுத்துக்கள் குறைப்பு, அவசியமான எழுத்துக்கள் சேர்ப்பு ஆகிய காரியங்களால் மாறுதல் அடைந்துகொண்டே வருகின்றன.

காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப சப்தங்களும் பாஷைகளும்,

உச்சரிப்புகளும், வடிவங்களும் மாறுவது இயல்பேயாகும்.

வார்த்தைகள் கருத்தை வெளியிடுவதற்கு ஏற்பட்டவைகள் என்பது போலவே, எழுத்துக்களும் சப்தத்தை உணர்த்த ஏற்பட்டவைகளேயாகும்.

ஆனால், நம் பண்டிதர்களுக்குத் தாராளமாய் அறிவைச் செலுத்த இடமில்லாமல், மதம், பழக்கவழக்கம் ஆகியவைகள் குறுக்கிட்டு விட்டதால், எழுத்துக்களுக்கும், அதன் கோடுகளுக்கும், வடிவங்களுக்கும் தத்துவார்த்தம் கற்பிக்க வேண்டிய நிலை நம் நாட்டில் ஏற்பட்டுவிட்டது."

மாறுதல் தேவை என்பதை உணர்ந்த தந்தை பெரியார் அவர்கள், தமிழ் எழுத்துக்கள் தற்போதுள்ளதுபோல 247-க்கு பதில் வெறும் 54 ஆகக் குறைக்கலாம் என்று சிந்தித்து செயலாற்றிக் காட்டினார்!

1935 முதலே தமது ஏடுகளான "பகுத்தறிவு", "விடுதலை", "குடிஅரசு", "உண்மை" ஆகியவற்றில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தினார் - தான் கூறிய தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினை. நமது நாட்டில் பழைமை மோகமும், பிடிவாதமும் பல பண்டிதப் புலவர்களின் ரத்தத்துடன் கலந்தவைகளாகி விட்டன.

'பழையன கழிதல், புதியன புகுதல்' பற்றி படிப்பார்கள்; பதவுரை, பொழிப்புரை கூறுவார்கள். ஆனால், தாங்கள்

மாறுவதற்கு தயங்குவார்கள். மாறத் துணிந்தவர்களையும் கேலி, கிண்டல் பேசுவர்.

இதுபற்றி கவலைப்படாது, ‘குடி செய்வார்க்கில்லை பருவம்’ என்ற போக்கோடு எழுத்துச் சீர்திருத்தத்தினை தனது ‘விடுதலை’ நாளேட்டில் தொடர்ந்து செயல்படுத்தி, தமிழ் எழுத்துப் புரட்சியை, மவுனப் புரட்சியாக நிகழ்த்தினார்.

1978-இல் தந்தை பெரியார் அவர்களது நூற்றாண்டு விழாவை ஓர் ஆண்டு முழுவதும் கொண்டாடிய அ.இ.அ.தி.மு.க. அரசும், அதன் இணையற்ற முதலமைச்சருமான வள்ளல் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களும் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தினை, அய்யாவுக்கு மரியாதை - ‘காணிக்கை’ செலுத்தும் முகத்தான், ஆணையாக்கி, துணிந்து செயல்படுத்தினார் (அந்த அரசு ஆணை வேறு பக்கத்தில்).

வழக்கம்போல சில “தமிழ்ப் புலவர்கள்” சலசலப்புக் காட்டினர்.

அவர்கள் வாதம் அடிப்படையற்றவை என்பதைக் காட்டிட, பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் (மதுரை-காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்) மற்றும் பேராசிரியர்கள் டாக்டர் அ.ச. ஞானசம்பந்தம், டாக்டர் சுப்புரெட்டியார் போன்ற தமிழ் மொழி வல்லுநர்களை அழைத்து சென்னையில் கருத்தரங்கம் (24-12-1978) நடத்தினோம். அவ்வுரைகளையும், டாக்டர் மு. வரதராசனாரின் கருத்துக்களையும் இணைத்து - இந்நூல் வெளிவந்தது.

அதன் புத்தாயிரப் பதிப்பே இப்போது உங்கள் கையில் திகழும் இந்த அறிவுக் கருவூலம்; புதுமைப் பெட்டகம்!

தந்தை பெரியார் கல்லூரி காணா கிழவர்; என்றாலும் அவரது பகுத்தறிவுவீச்சாலும் தொண்டறத்தின் வீச்சாலும் பல பல்கலைக்கழகங்கள் அவரது சிந்தனைகளை ஆய்வு செய்கின்றன!

தந்தை பெரியாருக்கு அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் சேர்த்த பெருமை, வரலாற்றில் என்றும் நிலைத்துவிட்டது- இவ்வெழுத்துச் சீர்திருத்தத்தின் மூலம்!

தட்டச்சு, கணினி மற்றும் கணினி அச்சுக் கோர்ப்பு வளர்ந்தோங்கிலும் இக்காலத்தில் தமிழ் எழுத்து மாற்றம் இல்லாமல் இருந்தால், உலகத்தின் வேகத்திற்கு நாம் ஈடுகொடுக்க முடியுமா? முடியாதே!

தமிழ்நாட்டு அ.இ.அ.தி.மு.க. அரசு ஆணை பிறப்பித்து, மாற்றம் செய்ததன் எதிரொலி நடவடிக்கையாக, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாட்டுத் தமிழ்மக்களும் இதே தமிழ் எழுத்தினை அங்கே பின்பற்ற அந்தந்த நாட்டு அரசுகள் ஆணை பிறப்பித்துச் செயலாற்றி வருகின்றன!

தந்தை பெரியாரின் 'மண்டைச் சுரப்பை உலகு தொழும்' என்று பாடிய புரட்சிக் கவிஞரின் பொன் வரிகளுக்குச் சான்று பகருகின்றன!

அறிவியல் அடிப்படையில் தமிழ் எழுத்து, இலக்கியங்கள் எல்லாம் அமைந்தால்தான் என்றும் வாழும் தமிழ் எனப்படும் எமது மொழி, எங்கும் வாழும் தமிழாக ஆகும் - புதிய புரட்சி ஏற்படும்!

எட்டு கோடி தமிழர்கள் புதுமைகளைத் துய்க்க வேண்டும் என்றால், காலத்தால் ஏற்படும் மாற்றங்களை ஏற்றாக வேண்டும்!

எழுத்தாணி, ஓலைச் சுவடியை நம்முடைய பழைமைச் சொத்து என்பதால், அச்சுக்கலை கூடாது என்று புறக்கணிப்பது பெரும் பேதமை அல்லவா?

பெரியார் ஒரு தொலைநோக்காளர் என்பது இப்போது புரிகிறதா?

**- கி.வீரமணி,**

**நூல்: எழுத்துச் சீர்திருத்தம் (பதிப்புரை)**

❒

# 10. கல்வி இலாகாவில் தமிழர்களுக்கு எதிராக பார்ப்பனர்கள்

யோக்கியமாகவும், நியாயமாகவும் பேசுவோமானால் கல்வி இலாகாவில் பார்ப்பனர்கள் என்பவர்கள் கண்டிப்பாய், அதிகாரியாகவோ உபாத்தியாயர்களாகவோ இருக்கக் கூடாதென்றே சொல்லுவோம்.

பார்ப்பனர்கள் மூலம் மக்களுக்குக் கல்வி போதிக்க எண்ணுவதை விட கல்விச் சாலைகளை அடைத்துவிடுவது, மேலென்று கூடச் சொல்லத் துணிவோம். ஏனெனில், முதலாவதாக இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பார்ப்பனனும் தன்னை உயர்ந்த ஜாதி என்றும், அதாவது வருணாச்சிரமப்படி தாம் ‘பிராமண’ரென்றும், மற்றவர் ‘சூத்திர’ரென்றும் எண்ணிக் கொண்டிருப்பவர்கள் எந்தக் கொள்கைப்படி தன்னை “பிராமண”ரென்றும், மற்றவனை “சூத்திர”ரென்றும் எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ, அதே கொள்கையின்படி ‘பிராமணன்’ ‘சூத்திரனை’ப் படிக்க வைக்கக் கூடாதென்றும், ‘சூத்திரன்’ படித்தால் வருணதர்மம் கெட்டுப் போகுமென்றும் பிராமணனுக்கு ஆபத்தாய் முடியுமென்றும் ‘சூத்திரனைப் படிக்க வைத்தப் “பிராமணர்” ‘நரகத்தை அடைவார் என்றும் கருத்தப்பட ஆதாரங்கள் இருக்கின்றன.

இந்தக் கொள்கையை மனப்பூர்வமாக நம்பின பார்ப்பனர்கள் உபாத்தியாயராயிருந்தால் பார்ப்பனரல்லாத பிள்ளைகளை அவர்கள் படிக்க விடுவார்களா? படித்தாலும் பாசாக சம்மதிப்பார்களா? என்பதை வாசகர்களே யோசித்து முடிவு கட்டிக் கொள்ள விரும்புகின்றோம்.

கல்வியில் இருக்கும் சூதுகள் அநேகமாக நம்மவர்களுக்குத் தெரியாதென்றே சொல்லலாம். உதாரணமாக பார்ப்பனரல்லாத பிள்ளைகள் பி.ஏ.பாஸ். செய்வதென்றால் பிள்ளைகளுக்கு 22, 23,

24 வருடங்களாகி விடுகின்றன. ஆனால் பார்ப்பனப் பிள்ளைகள் 18, 19, 20 வயதிற்குள் பி.ஏ.பாசு செய்து விடுகின்றன. இதற்குக் காரணம் என்ன? என்பது நம்மவர்களுக்கு தெரியுமா? யாரையாவது காரணம் கேட்டால், “அது பிராமணப்பிள்ளை. அதற்குப் படிப்பு சீக்கிரம் வருகின்றது. நம்ம பிள்ளை ரொம்பவும் மந்தம். அதனால் சீக்கிரம் வருவதில்லை” என்று ஒரு வார்த்தையால் பதில் சொல்லி விடுவார்கள்.

ஆனால், நம்பிள்ளைகளும் ஒரு வருடமாவது தவறாமல் ஒவ்வொரு வகுப்பிலும் பாசு ஆகிக்கொண்டே போனாலும் எப்படியும் பி.ஏ.பரீட்சைக்கு போக 22 வயதாய் விடுகின்றது. ஒன்று அல்லது இரண்டு வருடம் தவறினால் இருபத்து நான்கு வயதாய் விடுகின்றது. மூன்று வருஷம் தவறினால் இருப்பதைந்தாய் விடுகின்றது. பிறகு சர்க்கார் உத்தியோகத்திற்கு லாயக்கில்லாதவர்களாகி விடுகின்றார்கள். ஆனால் பார்ப்பனர் பிள்ளைகளோ ஒன்று இரண்டு வருஷம் தவறினாலும் கூட 20, 21-இல் பி.ஏ. படித்து முடித்து விடுகின்றார்கள். இதன் ரகசியம் என்னவென்றால் நம் பிள்ளைகளை 7-ஆவது வயதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி அரிவரி வகுப்பில் சேர்க்கின்றோம். 7-ஆவது வயதில் அரிவரியில் சேர்ந்தால், அவன் தவறாமல் பாசு செய்தால்கூட 22-இல்தான் பி.ஏ. பரீட்சைக்குப் போக முடியும் ஏனென்றால் அரிவரி வகுப்புக்கும் பி.ஏ.பாசு செய்யும் வகுப்புக்கும் இடையில் 15 வருஷம் வேண்டியிருக்கின்றது. அதாவது அரிவரியில் இருந்து 4-வது வகுப்புக்கு அய்ந்து வருடமும்,

4-ஆவதிலிருந்து எஸ்.எஸ்.எல்.சி. அல்லது 6-ஆவது பாரத்திற்கும் 6 வருஷம், அதிலிருந்து பி.ஏ.க்கு 4 வருஷம் ஆகவே தவறாமல் பாசு செய்தாலும் 15 வருஷ சாவகாசம் வேண்டியிருக்கின்றன. ஆனால் பார்ப்பனர்களோ தங்கள் குழந்தைகளை 5-ஆவது வயது முதலே வீட்டில் கொஞ்சம் சொல்லிக் கொடுத்து ஆறாவது வயதிலோ அல்லது ஏழாவது வயதிலோ பள்ளிக் கூடத்திற்குக் கொண்டுபோய் முதல் பாரத்தில் சேர்த்து விடுகின்றார்கள். தலைமை உபாத்தியாயர்கள் பார்ப்பனர்களானதால் கணக்கில் சாதாரண 2 கேள்வியும் இங்கிலீஷில் இரண்டு வார்த்தைக்கு அர்த்தத்தையும் கேட்டுவிட்டு “முதல் பாரத்திற்கு லாயக்கு” என்று சொல்லி விடுகின்றார்கள். இதில் அவர்களுக்கு அய்ந்து வருடப் படிப்பும்

காலமும் காலச்செலவும் மீதியாகி விடுகின்றன. 14 வயதுக்குக் கீழ்பட்ட பிள்ளைகளை எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு எடுப்பதில்லை என்கின்ற நிபந்தனையினால் பார்ப்பனர்கள் தங்கள் பிள்ளைகளை முதல் பாரத்தில் சேர்க்கின்றார்கள்.

அந்த நிபந்தனையும் இல்லாதிருக்குமானால் மூன்றாவது பாரத்தில்கூட சேர்த்து விடுவார்கள். தவிர 18, 19-இல் அவர்கள் பி.ஏ.பாசு செய்து விடுவதால் 25-ஆவது வயது வரைக்கும் 5 அல்லது 6 வருட காலம் உத்தியோகம் தேட அவர்களுக்குச் சாவகாசம் இருக்கின்றது. ஆகவே அவர்கள் பி.ஏ. படித்து விட்டால் எப்படியும் யாரையாவது பிடித்து என்ன செய்தாவது உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ள போதிய சௌகரியம் இருக்கின்றது.

நம்முடைய பிள்ளைகளோ சிறு வயதில் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினால் தலைமை உபாத்தியாயராயிருப்பவர், “இவன் ரொம்பவும்சின்னப்பையன்.இன்னும்ஒன்றுஇரண்டுவருடம்பொறுத்து அப்புறம் கூட்டிக் கொண்டு வாருங்கள்.” என்று சொல்லுவதும், “குழந்தைகள் நன்றாய் ஆடிப்பாடி விளையாடட்டுமே, நன்றாய் எட்டு வருடம் ஆன பின்பு பள்ளியில் வைத்தால் போதாதா? ஏன் இப்படிக் குழந்தைகளை வதைக்கின்றீர்கள்” என்று “பரிதாபப்பட்டு” திருப்பி அனுப்பி விடுகின்றார்கள். தவிர, நாம் நிர்ப்பந்தப்படுத்தி சேர்த்தாலும் அவன் தகுதியைவிட ஒரு வகுப்பு கீழாகவே சேர்க்கிறார்கள். அன்றியும் பள்ளிக்கூட பரீட்சைகளில் கூடுமானவரை ஒவ்வொரு வருடமும் அமுத்தி வைக்கவே பார்க்கின்றார்கள்.

பிறகு பல வழிகளிலும் அதாவது ‘உனக்குப் படிப்பு வராது’ ‘வேறு வேலை பார்த்துக் கொள்’, ‘வீணாய்ப் பணம் செலவழிக்காதே’ ‘பெஞ்சுக்கு வாடகை கொடுக்காதே’ என்று பேசி பிள்ளையின் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கெடுப்பதிலேயே கவலை கொள்ளுகின்றார்கள். பையன்களைச் சர்க்கார் பரீட்சைக்கு அனுப்புவதிலும் உபாத்தியாயர்களுக்கே அந்த உரிமை இருப்பதால் சட்டத்தின் மூலம் எவ்வளவோ தகராறு செய்து பார்த்தும் மீறினால் வேறு வழியில் தகராறும் சொல்லி நிறுத்திவிடவே பார்க்கின்றார்கள். இவ்வளவும் தாண்டிப் பரீட்சைக்குப் போய் எழுதினாலும் பரீட்சை பரிசோதகர் மார்க்கு கொடுப்பவர், முடிவு சொல்வதில்

முக்கியமானவர் ஆகியவர்கள் எல்லோரும் பார்ப்பனர்களே. கடைசியாகப் பாசானாலும் சர்க்கார் உத்தியோகத்திற்குப் போவதற்கு வேண்டிய வயது தாண்டிவிடுகின்றது. ஒரு சமயம் மீதி இருந்தாலும் ஒரு வருடம் அல்லது ஆறு மாதமே இருக்குமாதலால். அவசரத்தில் எங்காவது போய் குழியில் விழுவது போல் சிறிய உத்தியோகந்தான் சம்பாதிக்க முடிகின்றன. பரீட்சையில் தவறிப் போனாலோ அதோ கதிதான். வெளிப்படையாக இவ்வளவு கஷ்டம் நமக்கு இருப்பதுடன் மறைமுகமாய் செய்யக் கூடிய கொடுமைகள் எவ்வளவோ இருக்கின்றன. எனவே இந்த நிலையில் நமது கல்வி சாதனம் இருந்து வருகின்றது. ஆதலால், சட்டசபையில் இந்த விஷயங்களை விளக்கி இதற்காக ஒரு கமிட்டி ஏற்பாடு செய்து இக்கஷ்டங்கள் உண்டா, இல்லையா, என்று விசாரித்துப் பார்த்து உண்மை என்று பட்டால் இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று ஜனப்பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் சட்டசபை அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

பார்ப்பனரல்லாத மாணவர்களும் நமக்கு எழுதிக் கொண்டிருப்பதைவிட இதற்காக ஒரு மாணவ மாகாநாடு செய்து தங்கள் குறைகளை அதில் விளக்கிக்காட்டிப் பரிகாரத்திற்குச் சில தீர்மானங்கள் செய்து அதை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று யோசனை சொல்லுகின்றோம். மற்றபடி பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட முறையில் இருந்துவரும் கொடுமைகளை மற்றொரு சமயம் விளக்குவோம்.

**- 'குடிஅரசு' - தலையங்கம் 07-07-1929**

❐

# 11. “உனக்குப் படிப்பு எங்கேடா வரப்போகிறது; எங்காகிலும் மூட்டை தூக்கு, போடா”

நமது நாட்டில் படித்தவர்கள் எண்ணிக்கையோ 100க்கு 8 ஆகத்தான் இருக்கிறது. பழைய காலத்து அரசர்களோ ஆரிய ஆதிக்கத்திற்கே அடிமையாய் இருந்ததால் ஆரியர்கள் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாது என்கிற ஆரியக் கொள்கையை அப்படியே காப்பாற்றிக் கொடுத்தவர்கள். அதனால் கல்வி பயிலுவதற்கு ஆரியர்களைத் தவிர மற்றவர்களுக்கு சிரத்தையே யில்லை. கடவுள்களே அரசாண்ட காலம் என்னும் ராமன் கிருஷ்ணன் காலத்திலும், அதன்பிறகு அரசாண்ட சேர, சோழ, பாண்டியர்கள் காலத்திலும் அதன் பிறகு பிரிந்து கிடந்த 56 தேச ஆட்சி இருந்த காலம் வரை பார்ப்பனர் தவிர மற்றவர்களுக்குக் கல்வியில்லை.

வேதத்தை உச்சரித்தால் நாக்கையறுக்க வேண்டும், கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றவேண்டும், மனதில் இருத்தினால் நெஞ்சை பிளக்கவேண்டும் என்பன போன்ற கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டன. இதை மேயோ அம்மையார் எழுதியதற்கு, அந்த அம்மையார் மீது நம் பார்ப்பனர்கள் பாய்ந்தார்கள். நமது தேசீய வீரர்கள் இதற்கு சமாதானம் சொல்ல வந்த தேசீய தியாகிகள் “படிக்கக் கூடாதென்கின்ற விதியானது வேதப்படிப்புக்கே தவிர வேறல்ல” வென்றார்கள். இதற்கு மறுபடியும் மறுப்பு சொன்னபோது “வேதத்தை படிக்காமல் அதன் புரட்டுகளையும், யோக்கியதைகளையும் எப்படி சொல்வது? அதிலும் அப்போது வேதத்தை தவிர புஸ்தகம் தான் ஏது?” என்றெல்லாம் கேட்டபோது ஒன்றும் பதில் இல்லை. வெள்ளைக்காரர்கள் ஆட்சி வந்த பிறகுதான் படிக்கக் கூடாதென்ற சமூகங்கள் படிக்க முன் வந்தது; இப்படி படிக்க முன் வந்ததன் பயனாக தாழ்த்தப்பட்டவர்களாக இதுவரை இருந்தவர்களும் பிற்போக்காகவும், கொடுமைப்பட்டவர்களாகவும், இருந்து வருகிறவர்களும் படிக்க முன்

வந்து உத்தியோகத்துக்கு போட்டிபோட ஆரம்பித்துவிட்டார்கள். இதைப்பார்த்த காங்கிரஸ்காரர்கள் இதன் தலையில் கைவைக்க யுக்தி செய்து தந்திரமாக வார்தா கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து திணிக்கப் பார்க்கிறார்கள். கல்லாமையைக் கொல்லவோ, அல்லது தற்குறிகளேயில்லாமல் செய்யவோ, இவர்கள் ஒரு திட்டத்தையும் கொண்டு வருவதாக காணோம். இப்போதுள்ள மந்திரிகளும் காலேஜ்களை ஒழிக்க வேண்டும், உயர்தர பாடசாலைகளை மூட வேண்டும், 60 பிள்ளைகளுக்கு குறைந்த பள்ளிக்கூடங்களை எடுத்துவிடவேண்டும். கட்டாய இலவசப்படிப்பு வேண்டியதில்லை, கல்வி மான்யம் குறைக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லி வருகிறார்கள். ஆகவே இப்போதுள்ள காங்கிரஸ் சர்க்கார் எந்த விதத்தில் நம்மை முன்னேற்றுவதற்கு உதவி செய்திருக்கிறது?

இந்த லட்சணத்தில் ஹிந்தி திட்டம் எதற்காக? சுத்த தமிழ் - நல்ல அழகிய தமிழ் - பிறவி தமிழ் - தினமும் பேசும் பாஷை நமக்கு சௌகரியமாக இருக்கும்போது அதிலும் படித்த மக்கள் 100க்கு 8-பேரே தான் இருக்கின்ற நிலையில் ஹிந்தியும் வந்தால் என்னவாகும்? ல, ள எழுத்துக்களுக்கு வித்தியாசமே நம்ம ஆட்களுக்கு இன்னமும் சரியாக தெரியவில்லை.

பள்ளிக்கு படிக்க வரும் நம் பிள்ளைகளைப் பார்த்து "உனக்கு படிப்பு வராது வீட்டுக்கு போய் வண்டியோட்டுகிறவன் மகனாயிருந்தால் வண்டியோட்டு, உழுகிறவன் மகனாயிருந்தால் உழு" என்றெல்லாம் சொல்லி விரட்டி விட்டு, இப்போது மாத்திரம் இந்த ஹிந்திக் கல்வியை கொண்டு வந்து அதையும் சேர்த்து அதையும் கட்டாயமாகப் படிக்கும்படி சொன்னால் எப்படி நம் பிள்ளைகளால் படிக்க முடியும்? ஏழையைக் கெடுக்க ஒரு யானையைக் கொடு என்று சொல்லுவார்கள். அதுபோல் படிப்பில் மிக ஏழையாய் இருக்கும் நம் மக்களுக்கு யானை போன்ற ஹிந்தி உயர்வாயிருந்தாலும் அது இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வருமா? அவர்கள் வாயில் நுழையுமா? ஒரு எழுத்துக்கு 4 சப்தமிருக்கிறது. உச்சரிப்பு கடினம். எழுத்துக்கள் அதிகம். 12 வயதிலிருந்து 14 வயதுக்குள் நம் பிள்ளைகள் இரண்டு அந்நிய பாஷையைப் படிக்க முடியுமா? அதில் போதுமான

மார்க் வாங்க முடியுமா? இந்த ஹிந்தி படித்து நன்றாய் தேர்ச்சி பெறுகிற அந்தக் காலத்திற்குள்ளே ஒருவன் பி.ஏ. ஒரு பட்டதாரியாக வந்து விடலாம்.

இந்த இந்தி திட்டத்தைக் கொண்டு வருகிற சந்தர்ப்பத்திலே காரணம் சொல்லும்போது, 'ஆங்கிலமானது அடிமைப் படிப்பு அதனால்தான் அதை ஒழித்து ஹிந்தியை புனருத்தாரணம் செய்கிறதாக' சொல்கிறார்கள். நமது காங்கிரஸ்காரர்கள் தோழர் காந்தியார் முதற்கொண்டு மூர்த்தியார் வரை இப்போது ஆங்கிலம் அடிமைப் படிப்பு அடிமைப் படிப்பு என்று ஓலமிடுகிறார்கள். ஆனால் நாம் அந்தமாதிரி கருதி இருக்க முடியுமா? ஓட்டல்காரன் ஆங்கிலத்தில் பேசுகிறான், குச்சுக்காரத் தெருவில்கூட ஆங்கிலமே வழங்கப்படுகிறது. நாம் பார்ப்பனர்களுக்கும் நாம் உத்தியோகத்தில் போட்டி போட நினைக்காத வரை ஆங்கிலம் நல்ல பாஷையாய் இருந்து வந்தது. நாம் எப்போது போட்டிபோட ஆரம்பித்தோமோ அன்றே அவர்கள் ஆங்கிலம் அடிமை பாஷை, நீச பாஷை என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

தோழர் காந்தியாருக்கு இங்லீஷ் தெரியாமல் இருந்தால் மகாத்மா பட்டமேது? அவர் சொல்லிக் கொண்டிருக்கிற துளசிதாஸ் இராமாயணம் படித்ததால் வந்த கவுரவமா? (சிரிப்பு) தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்குத்தான் இவ்வளவு கவுரவமேது? இவ்வளவு சூழ்ச்சிக் குணம் ஏது? இதெல்லாம் இங்கிலீஷ் தெரியாமலிருந்து வந்ததா? இது மற்றவர்கள் தலையில் கையை வைப்பதற்குச் செய்யப்படும் சூழ்ச்சிப் பிரச்சாரமா, அல்லவா என்று யோசித்துப் பாருங்கள். முஸ்லீம்களும், தமிழர்களும் பங்கு கேட்கிறவரை இங்கிலீஷ்க்கு ஒரு அனர்த்தத்தையும் காணோம். இங்கிலீஷைப் பற்றி காங்கிரஸ் தலைவர்கள் எவ்வளவு புகழ்ந்திருக்கிறார்கள். செத்த தலைவர்களை விட்டு விட்டாலும், தோழர் மாளவியா இந்த ஆங்கிலக் கல்விக்காக பிரிட்டிஷ்காரர்களுக்கு நன்றி செலுத்தியிருக்கிறார். காங்கிரஸ் பிரபல தலைவரான தோழர் தாதாபாய், சுரேந்திரநாத் பானர்ஜி, தோழர் சர்.சி. சங்கரன் நாயர் முதலியவர்கள் பல தடவைகளில் 'எல்லாத் துறைகளிலும் நாம் முன்னேறியதற்கு காரணம் காருண்யமுள்ள இந்த வெள்ளைக்காரர்களின் கல்வியினால்தான்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலேயே உங்கள் தஞ்சாவூர் ஜில்லாவில்தான் எந்த ஜில்லாவிலுமில்லாத அளவு பார்ப்பனர்கள் உயர்ந்த படிப்பு படித்து உங்கள் தலையை நன்றாய் அழுத்திவிட்டார்கள். இதற்குக் காரணம் இந்த ஜில்லாவிலிருக்கிற 2 காலேஜுகள் தான். சர்.சி.பி. ராமசாமி அய்யர், மணி அய்யர், முத்துசாமி அய்யர், கிருஷ்ணசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரி, வெங்கட்ட ராம சாஸ்திரி முதலிய உங்கள் ஜில்லாக்காரர்கள் ஆங்கிலம் படித்த போது அது தேசீய பாஷையாய் இருந்தது.

ஆனால், அதே படிப்பை நாம் படிக்கும்போது அது அடிமைப்படிப்பாம்; நீச பாஷையாம். பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் படிக்கக் கூடாமலிருந்ததனாலும், அவர்களுக்கே மைசூர், திருவாங்கூர் போன்ற இடங்களிலும் பணத்தை கொடுத்து கல்வியும் கொடுத்ததாலும், தப்பித் தவறி நம்ம ஆட்கள் படிக்கப் போனால் அவர்களை பார்ப்பனர்கள் "உனக்கு படிப்பு எங்கேயடா வரப்போகிறது. எங்காகிலும் மூட்டைத் தூக்கு போடா" என்பன போன்ற வார்த்தைகளால் தாழ்த்தி வந்ததாலும் நம்முடைய பெரிய செல்வ சீமான்களும் நம் சமூகத்தைப் பற்றிய கவலையேயில்லாமல் பார்ப்பனர்களுக்கே தங்கள் செல்வங்களை தானம் செய்ததாலும் பார்ப்பனர்கள் சமூகம் 100க்கு 100 பேர் படிக்க முடிந்திருக்கிறது. புரோகிதர் மகன் அய்.சி.எஸ். படிக்க முடிந்திருக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் சமூகம் அய்.சி.எஸ். வர்க்கத்தில் 100க்கு 58 பேர் எப்படி இருக்க முடிந்தது? பார்ப்பனர்கள் என்ன அவ்வளவு பணக்காரர்? பார்ப்பனரல்லாதார் என்ன அவ்வளவு அன்னக்காவடிகளா?

ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் தாங்கள் பதவியில் இருந்த போது எல்லா சமூகமும் படிக்கும்படியான வசதி செய்தார்கள். தோழர் நாடிமுத்து இந்தியை எதிர்க்கிறார். ராமலிங்கம் செட்டியார் ஆட்சேபிக்கிறார், தோழர் உ.வே. சாமிநாதய்யரும் ஆட்சேபிக்கிறார். இதையெல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு ராஜகோபாலாச்சாரியார் இந்த ஹிந்தி விஷயத்தில் இவ்வளவு பிடிவாதம் காட்டுவானேன்? இந்த காலத்தில் புராண நம்பிக்கை, வேத நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை முதலியன குறைந்துவிட்டன. ஆகையால் அதைப் புனருத்தாரணம் செய்ய ஹந்தி உதவும் என்று கனம் ராஜகோபாலாச்சாரியார் கருதியே

தான் இப்படி செய்கிறார். அல்லது ஹிந்தி பொது பாஷையென்றால் பொது பாஷை இல்லாத தேசம் எது கெட்டு விட்டது? இந்த ஹிந்திப் பிரச்சாரத்திற்கு வட நாட்டிலேயிருந்து ஆட்களை இறக்குமதி செய்கிறார்கள். தோழர் காந்தியாருக்கு தமிழ் நாட்டிலே என்ன தெரியும்? என்ன செய்தார்? நமக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?

**- 'குடிஅரசு', 23.1.1938, 6.2.21938**

❐

# 12. மதுவிலக்கு என்னும் சாக்கில் தமிழர்களின் கல்விக்கு எதிரான சதி

காங்கிரஸ் மந்திரிகள் மது விலக்கில் முனைந்துவிட்டார்கள் என்றும் சேலம் ஜில்லாவை விட்டு அறவே “கள்ளரக்கன்” விரட்டப் பட்டு விட்டான் என்றும் பாமர மக்கள் நம்பும்படி மாயப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இதைப் பாமர மக்களும் சில அறிவாளிகள் என்பவர்களும் நம்பி வருகிறார்கள்.

கள் ஒரு நாளும் இந்தியாவை விட்டு அதிலும் தென்னாட்டை விட்டு ஒழியப் போவதில்லையென்பதை கல்லின்மேல் எழுதி வைத்துக் கொள்ளும்படி வாசகர்களுக்குத் “தீர்க்க தரிசனம்” கூறுவோம்.

ஆனால் கள் ஒழிக்கும் சாக்கை வைத்துக்கொண்டு பார்ப்பன ராஜ்யமானது பார்ப்பனரல்லாத மக்களின் கல்வியில் மண்ணைப் போட்டு அவர்களைப் பழையபடி காட்டுமிராண்டிகளாகவும் பார்ப்பாரின் வைப்பாட்டி மக்களாகவும் ஆக்கப் போகிறது என்பதை இப்போதே பார்ப்பனரல்லாத மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

நம்மைப் பொறுத்தவரையில் கள், சாராயம் முதலிய எவ்வகை மதுவையும் கையில் தொட்டதுகூடக் கிடையாது. மலம் சாப்பிடுவதை விட மதுவருந்துவதை கேவலமாய்க் கருதி வருகிறோம். ராமரசம், பூரணாதி, மன்மத சிந்தாமணி முதலிய போதை தரும் லேகியம்கூட கையில் தொட்டது கிடையாது. நம் ஜாதியும் நம் கடவுளும் மதுவை அனுமதித்து மதுவைப் படைத்து அருந்தி வந்திருந்தாலும் கூட என்ன காரணமோ மது நம்மால் வேறு எதையும்விட அதிகமாக வெறுக்கப்பட்டுவிட்டது.

மதுபானக்கெடுதி ஒழிவது நல்லது என்பதில் சிறிதும் அபிப்பிராய பேதமில்லை. மதுபானத்தில் ஏற்படும் கேட்டை நன்றாய் உணர்ந்துதான் இருக்கிறோம்.

ஆனால், மதுவிலக்கு என்னும் சாக்கில் பார்ப்பன ஆட்சி செய்யும் படு மோசத்தை நம்மால் சகிக்க முடியவில்லை.

ஏனெனில் மதுவின் பேரால் அரசாங்கத்துக்கு 5, 6 கோடி ரூபாய் வருமானம் ஏற்படுத்தப்பட்டாய் விட்டது. அவ்வருமானமே கல்விக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது மதுவால் கிடைத்து வந்த வருமானம் நின்றவுடன் கல்வி கற்பிப்பதை குறைக்க மந்திரிகள் துணிந்துவிட்டதோடு, மக்கள் நலனுக்கு அவசியமான பல காரியங்களையும் நிறுத்திவிட வேண்டிய அவசியத்துக்கு வந்து விட்டார்கள்.

உதாரணமாக தோழர் கனம் ஆச்சாரியாரும் கனம் ராமன் மேனனும் மலையாள சுற்றுப் பிரயாணத்துக்கு போயிருந்தபோது மலையாள ஜனங்கள் தங்கள் ஜில்லாவுக்கும் மது விலக்கு ஏற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கு அளித்த பதிலில் மந்திரிகள் அறியாமல் அவர்களது விஷத்தை கக்கிவிட்டார்கள்.

அதாவது உங்கள் ஜில்லாவுக்கு மதுவிலக்கு ஏற்படுத்தினால் சர்க்காருக்கு 40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படும். இந்த நஷ்டத்தை ஈடு செய்ய பாலக்காடு விக்டோரியா காலேஜ் மூடப்பட வேண்டியதோடு ரோட்டுகள் செப்பனிடுவதும் பாலங்கட்டுவதும் நிறுத்தப் படவேண்டிவரும் என்று தைரியமாய் பேசி இருக்கிறார்கள்.

(இது 20-ஆம் தேதி மதராஸ் மெயில் பத்திரிகை 5-ஆவது பக்கம் 7-ஆவது கலத்தில் மொத்த எழுத்தில் போடப்பட்டிருக்கிறது)

ஆகவே இப்போது சேலத்தில் நடந்த மதுவிலக்கினால் சர்க்காருக்கு ஏற்பட்ட 25 லட்ச ரூபாய் நஷ்டத்திற்கு தகுந்த மாதிரி பல பள்ளிக்கூடங்கள் மூடப்படப்போவதும், பல போக்குவரத்து சாதனங்கள் சௌகரியப்படுவது நிறுத்தப்படப் போகிறது என்பதும் உறுதியாய் விளக்கப்படுகிறது.

இன்று கல்வியில் பார்ப்பனர்கள் 100க்கு 100 பேரும் படித்திருக்கிறார்கள். இன்னமும் 10, 20 வருஷத்துக்கு

உத்தியோகத்துக்கு ஆள் கிடைக்கும்படி அவ்வளவு பேர் படித்து விட்டு காத்துக் கொண்டுமிருக்கிறார்கள். பார்ப்பனரல்லாத மக்களில் முக்கியமாக தாழ்த்தப்பட்ட மக்களில் 100க்கு 2 பேர் 3 பேர்கூட படிக்காமல் இருக்கிறார்கள். அவர்களில் 100க்கு 1, 2 பேர்கூட பட்டதாரிகள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே பள்ளிக்கூடங்களும் காலேஜ்களும் மூடப்பட்டால் மற்ற சமூகத்தில் படித்தவர்கள் என்பவர்களே இல்லாமல் போய்விடுவார்கள். பார்ப்பனர்கள் திருவாங்கூருக்கோ, மைசூருக்கோ, காசிக்கோ, காஷ்மீருக்கோ போய் அங்கு சத்திரத்தில் சாப்பிட்டு விட்டு சம்பளமில்லாமல் படித்து விட்டு கொஞ்சம் பணமும் சம்பாதித்துக்கொண்டு பட்டத்துடன் இங்கு வந்துவிடுவார்கள். பிறகு படித்தவர்கள் என்றால் பார்ப்பனர்கள் - பார்ப்பனர்கள் என்றால் படித்தவர்கள் என்று அகராதியிலேயே வியாக்கியானம் வந்துவிடப் போகிறது என்பது உறுதி.

இப்பொழுதே தோழர் கனம் ராஜகோபாலாச்சாரியார் சர்க்கார் உத்தியோகம் பெறுகிறவர்களுக்கு காசி, கல்கத்தா, பம்பாய், கராச்சி, பஞ்சாப் சென்று வந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்று யோக்கியதாம்சம் வகுத்துவிட்டார். இனி பள்ளிக்கூடங்கள் காலேஜுகள் மூடப்பட்டுவிட்டால் நம் கதி என்ன ஆவது என்பதை சுணையும் புத்தியும் உள்ள பார்ப்பனரல்லாதார் யோசித்து பார்க்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

**- ‘குடிஅரசு’, 24.10.1937**

❐

# 13. சங்கீதத் துறையிலும் தமிழர்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும்

*இன்றைய தினம் தமிழ்நாட்டில் சங்கீத விஷயத்தில் வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், பிடில், மிருதங்கம், கஞ்சிரா, ஜலதரங்கம், கடம், கொன்னக்கோல், நாகசுரம் முதலிய அநேகம் துறைகளில் நிகரில்லாதவர்களும், மிக்க விற்பத்தி பெற்றவர்களுமாகச் சுமார் 400, 500 பேர்கள் வரையில் பார்ப்பனரல்லாதார்களில் இருந்தும் அவர்களைப் பற்றிய பெயர்கள்கூட அநேகருக்குத் தெரிய முடியாமல் அடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையையும்; அய்யா தந்தை பெரியார் அவர்கள் தமிழர் நிலையை எந்த அளவிற்கு கருணையுள்ளத்தோடு அணுகியுள்ளார் என்பதையும் உணர்த்தும் 'குடிஅரசு' தலையங்கம் - தொகுப்பாசிரியர்.*

ஈரோட்டில் மே மாதம் 24, 25 முதலிய தேதிகளில் நடக்கும் இரண்டாவது சுயமரியாதை மகாநாட்டின் ஆதரவில் வேறு பல மகா நாடுகளும் நடைபெறும் என்பது நேயர்கள் அறிந்ததாகும். அவற்றுள் சங்கீத மகாநாடு என்பதும் ஒன்றாகும்.

சங்கீத மகாநாடு கூட்டம் விஷயத்தில் நமக்குள்ள ஆர்வமானது, சங்கீதம் என்னும் ஒரு கலையானது மிக்க மேன்மையானதென்றோ அல்லது இன்றைய நிலையில் மனித சமூகத்துக்கு அது மிக்க இன்றியமையாததென்றோ கருதியல்ல.

உலகத்தில் மக்களுக்குள்ள அநேக விதமான உணர்ச்சி தோற்றங்களில் இதுவும் ஒன்றே தவிர இதற்கு எவ்விதத்திலும் ஒரு தனி முக்கியத்துவம் கிடையாதென்பதே நமதபிப்பிராயம். உதாரணமாக, சங்கீதம் என்பது தேசத்திற்குத் தகுந்த படியும் அங்குள்ள சீதோஷ்ண நிலைக்கு தகுந்த படியும் அவரவர்களது

அறிவு வளர்ச்சிக்குத் தகுந்த படியும் இருப்பதே தவிர, ஒரே சங்கீத முறையானது உலகத்திற்கெல்லாம் பொருத்தமானதென்று சொல்ல முடியாது. ஒரு நாட்டு சங்கீத உணர்ச்சிக்காரனுக்கு இன்பமாயிருப்பது மற்றொரு நாட்டு வித்வானுக்கு புரியாததாகவே இருக்கும். மேல் நாட்டு சங்கீத இன்பம் கீழ் நாட்டான் அனுபவிக்க முடியாது. அதுபோலவே, கீழ் நாட்டு சங்கீத இன்பம் மேல் நாட்டானுக்கு இன்பமாக இருக்க முடியாது. ஆனால் பொதுவில் சங்கீதம் என்னும் ஒரு கலை விஷயத்தில் உலக மக்களுக்கெல்லாம் ஒருவித போக்கிய அனுபவமிருக்கின்றதை மாத்திரம் காணலாம். ஆனாலும் அதை ஒருவர் அதிகமாக அனுபவிக்க ஆசைப்படுவார். மற்றொருவர் அதை சாதாரணமாகக் கருதுவார். எப்படி இருந்தாலும் உலகில் உள்ள பல கலைகளில் அதுவும் ஒன்றாய் இருக்கின்றது.

நம்மைப் பொறுத்தவரை, நாம் இம் மகாநாட்டில் கலந்து கொள்வதானது அக்கலையில் உள்ள மேன்மையை உணர்ந்தல்லவென்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மற்றென்னவெனில் சங்கீதத்துறையிலும் நமது பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டும் என்பதற்காகவேதான், சுயமரியாதை மகாநாட்டை அனுசரித்து இதை நடத்த வேண்டுமென்று கருதி நாம் அதில் கலந்து கொள்ள ஆசைப்பட்டதாகும்.

எப்படி நமது நாட்டில் மற்ற எல்லாத் துறைகளையும் பார்ப்பனர்கள் கைப்பற்றி, தங்கள் ஆதிக்கத்திற்குள்ளாக்கி, அத்துறையில் மற்ற மக்களைத் தலையெடுக்க ஒட்டாமல் அழுத்தி வைத்திருக்கிறார்களோ, அதுபோலவே சங்கீதத்துறையும் முழுதும் பார்ப்பனராதிக்கமாகி அதன் மூலம் நமது பொருள்கள் கொள்ளை போவதுடன், அதைக் கொண்டிருக்கும் நமது மக்களின் சுயமரியாதையும் கொள்ளை போயிருக்கின்றது; போய்க்கொண்டும் வருகிறது.

உதாரணமாக, நமது தமிழ்நாட்டில் சங்கீத விஷயத்தில் தேர்ச்சியுள்ள பார்ப்பனரல்லாத வித்வான்கள் அனேகர் இருக்கிறார்கள். அதிலும் சங்கீத சம்பந்தமான பல கலைகளிலும் தமிழ் நாட்டிற்கே சிறந்தவர்கள் முதன்மையானவர்கள் - இணையில்லாதவர்கள் - என்று சொல்லப்படுபவர்கள் எல்லாம்

பெரும்பாலும் பார்ப்பனரல்லாதார்களே யாவார்கள். இப்படி இருந்தாலும் இவர்களது வாழ்வும், அந்தஸ்தும் பெரிதும் மிக்க சுயமரியாதையற்றத் தன்மையாகவே இருந்து வருகின்றது. பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான்கள் - அதாவது வாய்ப்பாட்டு, வீணை, புல்லாங் குழல், பிடில், நாதசுரம், மிருதங்கம், தவில் முதலாகிய வாத்தியங்களில் முதன்மையான பார்ப்பனரல்லாத வித்வான்கள் தங்களிலும் எவ்வளவோ கீழ்த்தரப் பார்ப்பன வித்வான்களால் மிக்க இழிவாகவே நடத்தப்படுகிறார்கள். அது மாத்திரமல்லாமல், இதன் பயனாய் பிரபுக்கள் என்று சொல்லப்படும் பார்ப்பனரல்லாத பணக்காரர்கள் பலரும்கூட பார்ப்பனரல்லாத வித்வான்கள் என்றால் மிக்க இழிவாகவே கருதும் உணர்ச்சியைக் கொண்டு இருக்கின்றார்கள்.

உதாரணமாக, சென்ற இரண்டு மூன்று வருஷத்திற்கு முன் நாட்டுக் கோட்டை நகரத்தில் ஒன்றான கானாடுகாத்தானுக்கு நாம் போயிருந்த காலத்தில் தென் இந்தியாவுக்கே முன்மையான நாதசுர வித்வான் திரு. பொன்னுசாமி அவர்கள் ஒரு நாளைக்கு 500 ரூபா கொடுத்து ஒரு பிரபு வீட்டு விஷேசத்திற்கு வாத்தியத்திற்காக வரவழைக்கப்பட்டிருந்தார். அப்படிப்பட்ட அவர் நின்று வாசிக்கும்போது தனது வேர்வையைத் துடைத்துக் கொள்ள ஒரு சிறு வெள்ளைத் துவாலை தன் தோளின்மேல் போட்டுக் கொண்டு வாசிக்கத் தொடங்கினதும், அவ்வூர் பிரபுக்கள் சிலர் மேளக்காரன் தோளில் துண்டுப் போட்டுக் கொண்டு வாசிக்கலாமா என்று குற்றம் சொல்லி வாசிப்பதைத் தடுத்தார்கள். அதற்கு அந்த வித்வான் பதில் சொல்லமாட்டாமல் விழித்தார். அப்போது சமீபத்தில் இருந்த நமது நண்பர் ஒருவர் (பட்டுக் கோட்டை அழகிரிசாமி) அவ்வித்வானை நோக்கி நீங்கள் மேல் துவாலையை எடுக்காதீர்கள் அவர்களுக்கு கேட்கப் பிரியமில்லாவிட்டால் போய்விடட்டும் அல்லது நீங்களாவது போய் விடுங்கள் என்று சொன்னார். இதைக் கேட்ட வீட்டுக்கார பிரபு தனது விஷேச காலத்தில் இந்தப்படி ஒருசம்பவம் நடந்தது, வாத்தியக்காரர் போய்விட்டார் என்கின்ற கெட்டபெயர் வருமே என்று பயந்து சீக்கிரத்தில் வாசிப்பை முடித்துக் கொண்டார். இம் மாதிரியான சம்பவம் அனேக இடங்களில் இன்றும் நடக்கின்றது. மற்றும் பார்ப்பனரல்லாதப் பெண் வித்வான்களாயிருந்தால் உட்கார்ந்து பாடும்போது சபைக்கு ஒவ்வொரு மனிதன் வரும் போதும் எழுந்து

எழுந்து கும்பிட்டு விட்டுத்தான் உட்கார வேண்டியிருக்கிறது. ஆண் பாட்டுக்கார வித்வான்களோ பிரபுக்களிடம் பேசும்போதும் இடுப்பில் மேல் வேட்டியை எடுத்து சுருட்டிக் கட்டிக் கொண்டும், முழங்காலுக்கு மேல் இடுப்பு வேஷ்டியைக் கட்டிக் கொண்டும், இடக்கையை வலக்கக்கத்தில் வைத்து வலக்கையால் வாயைப் பொத்தி குனிந்து, மகாராஜா, எஜமான், ஸ்வாமி, சமூகம் என்று மேல்மரியாதை வைத்து பேச வேண்டியிருக்கின்றது. இப்பிரபுக்களும், இவ்வித்வான்களிடம் பேசும்போது, 'நீ, அவன், டேய்' என்கின்ற ஒருமை, அடிமை முறையில் பேசுவதும் வழக்கமாய் இருக்கின்றது.

இதே தொழிலிலிருக்கும் பார்ப்பனர்களும் தங்கள் சகோதரத் தொழிலாளிகள் பார்ப்பனரல்லாதவர்களாயிருந்தால் அவர்களிடமும் இப்படியேதான் 'நீ, அவன், அடே' என்கிற வரிசை வைத்துதான் பேசுகிறார்கள். ஒரு இரண்டு மூன்று ஜாண் உயரம் உள்ள பையனாயிருக்கும் பார்ப்பன வித்வானும்கூட எட்டரை ஜாண் இருக்கும் பார்ப்பனரல்லாத வித்வானை ஒருமையிலேயேதான் 'அவன், நீ, அடே' என்று பேசுகிறான். அந்தச் சிறு வித்வானிடம் இந்தப் பெரிய வித்துவான்கள் பேசும்போதும் சுவாமிகள் என்று மரியாதை வைத்துப் பேசுகின்றார்கள். நிற்க, நமது பிரபுக்கள் என்பவர்கள் பார்ப்பன வித்வான்களிடம் பேசும் போதெல்லாம் மரியாதையாகவே பேசுவதும், தாங்களாகவே முதலில் கும்பிடுவதும், இதற்கு பார்ப்பனர்கள் இடதுகையை தங்கள் இடுப்பிற்கு கீழாகக் காட்டி ஆசிர்வாதம் என்று சொல்லுவதுமான காரியங்கள் தினமும் நடந்து வருகின்றது.

ஆனால், சதுர் முதலிய கச்சேரிகளில் தாசிகளுக்குப் பின்னால் நின்று கொண்டு அவர்களை ஆட்டுவிப்பவராயிருந்தாலும், தாளம் போடுகிறவராயிருந்தாலும், அல்லது அப்பெண்களுக்கு மாமாக்களாய்கூட இருப்பவர்களாய் இருந்தாலும் அவர்களைக் கண்டால் நமது பிரபுக்கள் கும்பிடுவதும் சுவாமிகளே என்று கூப்பிடுவதும் ஆன காரியங்கள் முக்கியமாக எல்லா கிராமாந்திரப் பிரபுக்களிடமும் இன்னமும் பார்க்கலாம். இவைகள் ஒருபுறமிருக்க, பார்ப்பன பிரபுக்கள் தங்கள் வீட்டு விஷேசங்களுக்கும், சடங்குகளுக்கும் மேளம் வாசிப்பதற்குத் தவிர மற்றபடி

சபைக்கச்சேரிகளுக்கு பாடவோ, கதைகள் செய்யவோ கண்டிப்பாய் பார்ப்பனரல்லாதார்களை கூப்பிடுகின்ற வழக்கமே ஒரு சிறிதும் இல்லை. அதுமாத்திரமல்லாமல், பார்ப்பனரல்லாதார் பாடுவதையோ, கதை செய்வதையோ புராணம், உபன்யாசம் முதலியவை செய்வதையோ பார்ப்பனர்கள் கேட்பது மதசம்பிரதாயப்படி தோஷம் என்றே கருதி இருக்கிறார்கள்.

ஏனெனில், சூத்திரன் வாக்கைக் கேட்கக்கூடாதாம். அன்றியும் பார்ப்பன பக்க வாத்தியக்காரர்களில் அனேகர் பார்ப்பனரல்லாத வித்வான்களுக்கு பக்கவாத்தியம் வாசிப்பதையும் இழிவாய் கருதுகிறார்கள். பார்ப்பனரல்லாத பக்க வாத்தியக்காரர்கள்கூட ஒரு பார்ப்பனச் சிறு வித்வானுக்கு வாசிப்பதைப் பெருமையாய்க் கருதுகின்றார்களேயொழிய, பார்ப்பனரல்லாத வித்வான்களுக்கு வாசிப்பதைக் கவுரவக் குறைவாகவேக் கருதுகின்றார்கள். அன்றியும் ஒரு பார்ப்பனச் சிறுவன் பாடினாலும், கருவிகளால் வாசித்தாலும் சுற்றிலும் பார்ப்பனர்கள் உட்கார்ந்து கொண்டு, “பலே” “பலே” “பேஷ் பேஷ்” என்று கைத்தட்டுவதும், தலையை ஆட்டுவதும் மெய்மறந்ததுபோல் கண்கள் மேலே சொருகும்படி வேஷம் போடுவதும், அதை ஒன்றுக்கு இரண்டாக விளம்பரம் செய்து அவனுக்கு பிரக்யாதி (புகழ்) சம்பாதித்துக் கொடுப்பதிலும் அதிகக் கவலையாய் இருக்கிறார்கள்.

ஆனால், பார்ப்பனரல்லாத வித்வான்களாயிருந்தால் அவர்கள் எவ்வளவு பெரிய வித்வான்களாயிருந்தாலும் வேண்டுமென்றே கட்டை சாரீரம் என்பதும், கணக்கு போதாது என்பதும், மேல் தாயின் சுகப்படாது என்பதும் மற்றும் ஏதேதோ பொறுத்தமற்றவைகளைச் சொல்லி விஷமப் பிரச்சாரம் செய்வது எங்கும் வழக்கமாக இருக்கின்றது.

இவைகளை நாம் சுமார் 40 வருஷத்திற்கு மேல்பட்ட நமது பிரத்தியட்ச அனுபவத்தில் கண்டு வந்திருக்கின்றோம்.

ஆகவே, நாம் சங்கீத மகாநாட்டில் கலந்துகொள்ள ஆசைப்பட்டதின் முதல் காரணம் சங்கீத ஞானத்திற்கு ஆகவோ, சங்கீத கலை வளர்ச்சிக்கு ஆகவோ மாத்திரம் அல்ல என்றும்,

மேல்கண்ட பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்னும் உயர்வு தாழ்வு விஷம் சங்கீதத்திற்குள்ளும் புகுந்து அதன் மூலம் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கு விரோதமாயிருக்கும் கொடுமையை அழிப்பதற்கே ஒழிய வேறில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இதை உத்தேசித்தே சில சங்கீத சம்பந்தமான சபைகளில் நாம் பேச நேர்ந்த போதுகூட சங்கீதத்தில் இச்சை வைத்ததற்காகவும், சங்கீதத்தை தொழிலாகக் கொண்டதற்கு ஆகவும் பார்ப்பனரல்லாதார் என்கின்ற காரணத்திற்காக இவ்வளவு கேவலமாயும், இழிவாயும் நடத்தப்படுவதாயிருந்தால் சங்கீதக் கலையே அடியோடு அழிந்து போவதே மேல் என்றும், அதனால் யாருக்காவது ஜீவனத்திற்கு கேடு வருமானால் அப்படிப்பட்டவர்கள் இச்சங்கீதத்திற்கு கருமாதி செய்துவிட்டு ரோட்டில் கல் உடைத்து வயிறு வளர்ப்பதே மேல் என்றும், அத்தொழிலும் ஜீவனமும், சங்கீதத்தை விட கவுரவமும், மேன்மையுமான வேலை என்றும் சொல்லி வந்திருக்கிறோம்.

ஆகவே, சமீபத்தில் ஈரோட்டில் நடக்கும் சங்கீத மகாநாட்டில் மற்ற சங்கீத மகாநாடுகளைப்போல் சங்கீத சாஸ்திரம் என்பதைப்பற்றிப் பேசியே காலம் போக்காமல் சங்கீதத்தை கைக் கொண்ட பார்ப்பனரல்லாத மக்களுடைய சுயமரியாதையைக் காப்பாற்றும் விஷயத்திலும் அதிகமான கவனம் செலுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நிற்க, இன்றைய தினம் தமிழ்நாட்டில் சங்கீத விஷயத்தில் வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், பிடில், மிருதங்கம், கஞ்சிரா, ஜலதரங்கம், கடம், கொன்னைக்கோல், நாதசுரம் முதலிய அனேகம் துறைகளில் நிகரில்லாதவர்களும் மிக்க விற்பத்தி பெற்றவர்களுமாக சுமார் 400, 500, பேர்கள் வரையில் பார்ப்பனரல்லாதார்களில் இருந்தும் அவர்களைப் பற்றிய பெயர்கள்கூட அனேகருக்குத் தெரிய முடியாமல் அடக்கி வைக்கப் பட்டிருக்கின்றது. அவர்களில் சிலரின் பெயர்களையும் திரு. (நீலாவதி)இராமசுப்ரமணியம் அவர்கள் கொடுத்த லிஸ்டுப்படி மற்றொரு பக்கத்தில் காணலாம். மற்றப் பெயர்களும் பின்னால் வெளிவரும் இந்த சமயத்தில் நாம் இந்த வித்வான் எல்லோரையும் அவசியம் இம்மகாநாட்டுக்கு வரும்படி

இதன்மூலம் அழைக்கின்றோம். அவர்களில் அனேகர் அவசியம் வரவும் கூடும் என்று எதிர்பார்க்கின்றோம். அனேக விதமான சிரோன்மணிகள் வருவதாகவும், வந்து பாடவும் வாசிக்கவும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நாம் மனப் பூர்த்தியான நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்வதோடு, பொதுஜனங்களிலும் சங்கீத கலையிலும் சுயமரியாதையிலும் கவலையுள்ள மக்கள் பெருந்திரளாகக் கூடி வந்து இம்மகாநாட்டைச் சிறப்பிக்கச் செய்து அதை கைக்கொண்ட பார்ப்பனரல்லாத மக்களுக்கு மேன்மையும் சுயமரியாதையும் ஏற்படுவதற்கு உதவியாய் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம்.

**- 'குடிஅரசு' - தலையங்கம் - 20.04.1930**

❐

# 14. ஒரு முப்புரி நூலைச் சுமந்து இருக்குமானால்...

(தமிழ் அறிஞர்களின் அருமை, பெருமைகளை தமிழர்களுக்கு உணர்த்தியவர் பெரியார். தமிழ் மொழிப் பற்றாளர்கள் மீதும் தமிழ் கலைஞர்கள் மீதும் காழ்ப்புணர்ச்சியோடு பார்ப்பனர்கள் செய்த விஷமப் பிரச்சாரங்களை முறியடித்தவர் பெரியார்.)

சென்ற வாரம் நமது "குடி அரசு", பத்திரிகையின் தலையங்கத்தில் தோழர் K.B. சுந்தராம்பாள் அம்மாள் விஷயமாகப் பார்ப்பனர்கள் பொறாமை கொண்டு தம் பத்திரிகைகளில் செய்துவரும் விஷமத் தனமான பிரச்சாரத்தைப்பற்றி எழுதியிருந்தோம்.

இவ்வாரம் பார்ப்பனர்களுடையவும், பார்ப்பனப் பத்திரிகைகளினுடையவும் போக்கிரித்தனமான புகார்களைப்பற்றி எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கு மிகுதியும் வருந்துகின்றோம்.

நம் நாட்டுப் பார்ப்பனர்களை நாம் பகைக்கவோ, வெறுக்கவோ சிறிது கூட ஆசைப்படுவது கிடையாது என்பதோடு, எப்படியாவது அவர்களுடன் கலந்து அய்க்கியப்பட்டுத் தொண்டாற்ற ஏதாவது ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்றே, சிறப்பாகச் சிறிது காலமாய் கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். இந்நிலையில் பார்ப்பன விஷமம் எல்லைக்கடங்காது மேலும் மேலும் பெருகிக்கொண்டே போவதுடன், இந்நாட்டில் இனி, தமிழ் மக்கள் வாழ்வதா? அல்லது பார்ப்பனர் வாழ்வதா? என்கின்ற இரண்டிலொன்றைக் கரைகாண பார்ப்பனர் ஒருங்கே கூடி முனைந்து விட்டார்கள்: அது பற்றி எதையுஞ் செய்யத் துணிந்து விட்டார்கள் என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

நாடகக்கலையில் ஒரு தமிழ் மாது பேரும் புகழும் பெறக்கூடாது

என்று எப்படி விஷமப்பிரச்சாரம் செய்தார்களோ அது போலவே, இந்தவாரத்தில் தமிழ்க் கலையில், ஒரு தமிழ்ப் பெரியார் பேரும், புகழும் பெறுவதற்கு இடையூறாய் தங்கள் விஷத்தைக் கக்க ஆரம்பித்துவிட்டார்கள். தென்னாட்டுக் கலாவல்லவருள் தலைசிறந்து விளங்கும் சுவாமி வேதாசலமென்னும் **மறைமலை அடிகள்** அவர்களைத் தமிழ் உலகமும், சிறப்பாகச் சைவ உலகமும் நன்கறிந்திருக்கும் என்பதில் யாருக்கும் அய்யமிருக்காது.

சுவாமிகள் ஒரு பெரும் ஆஸ்திகர் என்பதோடு, தமிழ்ப்பாஷையில் இணையில்லாத பண்டிதர் என்பதும், தமிழ்ப்பாஷையுடையவும், தமிழ்ப்பாஷையின் வளர்ச்சியின் எதிரிகளும் அறிந்ததேயாகும். அதோடுமாத்திரமல்லாமல் சுவாமிகள் சுயமரியாதைக் கொள்கைக்கு மாறானவர் என்பதோடு சுயமரியாதைக் கொள்கையானது, மக்களுக்குக் கேடு , விளைவிக்கத்தக்கது என்கின்ற அபிப்பிராயமும் உடையவர். அன்றியும், சுவாமிகளின் தோளானது ஒரு முப்புரி நூலைச்சுமந்து இருக்குமானால், இத்தென்னாட்டுப் பார்ப்பனர்கள் இன்று அவரை , அகஸ்தியராக்கியிருப்பார்கள். ஏனெனில், அவரினின்று எத்தனையோ மடங்கு தாழ்ந்த ஞானமுடையவர்கள் பருத்தி நூலைத்தாங்கிய பண்பினாலேயே மகாமஹோ பாத்தியாயரானதோடு மாத்திரமல்லாமல் தமிழ்க் கடவுளான சுப்பிரமணியனுக்கு ஒப்பாகப்பேசியும், எழுதியும் விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள்.

உதாரணமாக, இன்று தமிழ்ப்பாஷையின் பேரால் பெரு நிதி திரட்டிக்கொண்டவரும், பெரும் புகழ் அமைத்துக்கொண்டவரும், தமிழுக்குத் தாயகமெனவும் விளம்பரப்படுத்தப்பட்டு மகாமஹோபாத்தியாயர் எனப்பட்டம் சூட்டப்பெற்றவருமான தோழர் உ.வே.சுவாமிநாதய்யர் அவர்களை ஒரு தட்டில் வைத்து சுவாமி வேதாச்சலமவர்களை மற்றொரு தட்டில் வைத்து நிறுக்கப்படுமானால், எத்தனை சுவாமிநாதய்யர்களைப் போட்டால் சுவாமி வேதாச்சலம் வீற்றிருக்கும் தட்டை அசைக்க முடியும் என்பதை, ஒவ்வொரு நேர்மையான மகனும் தன் நெஞ்சில் கை வைத்து உண்மை உணர்வோடு பார்ப்பானானால் நன்றாய் விளங்கிவிடும்.

தோழர் சுவாமிநாதய்யர் அவர்கள் வெகுகாலமாகப் பல தமிழ்ப் பெரியாரும், தமிழ் அபிமானிகளும் சேர்த்து வைத்திருந்த

தமிழ் இலக்கியச்சுவடிகளையும், அவற்றிற்கு அவ்வப்போது பல அறிஞர்களும் பண்டிதர்களும் குறித்து வைத்து இருந்த உரைகளையும், கருத்துக்களையும், கைப்பற்றி அவற்றில் பார்ப்பனரல்லாதாருக்கு அனுகூலமாகவும், பார்ப்பனர்களுக்குப் பிரதிகூலமாகவும் இருந்த கூற்றுகளை மாற்றியமைத்து ஆற்றிய நூல்கள் போலவே எல்லாவற்றையும் பார்ப்பனியத்துக்கு அரணாக்கிப் பதிப்பித்துப் பயன் பெற்றார் என்பதல்லாமல் தன் சொந்த மனோதர்மத்தில் யாவருக்கும் பயன்படும்படி, பார்ப்பனமுறையில் ஏதாவது புத்தகமோ, வியாசமோ எழுதி இருக்கின்றாரா என்று பார்த்தால், நாம் கூறுவதில் உண்மை இருக்கின்றதா, இல்லையா என்பது செவ்வன விளங்கும்.

சுவாமி வேதாச்சலமவர்கள் அவ்வாறின்றி எத்தனையோ நூல்கள் தாமாகவே இயற்றியதுடன் தமதாராய்ச்சித் திறத்தால் எவ்வளவோ அரிய விஷயங்கள் கண்டுபிடித்து, சகல மக்களுக்கும் பயன்படத்தக்க பல அரியகருத்துக்களையும் வெளியிட்டு வந்திருக்கிறார் என்பதைத் தமிழின் கூற்றுவர்'களும் உணருவார்கள். இப்படிப்பட்ட சுவாமி வேதாச்சலமவர்களைப் பற்றி நமது பார்ப்பனர்கள் விஷமப்பிரச்சாரம் செய்ய இப்போது ஏன் புறப்பட்டார்கள் என்பது சிலருக்கு அதிசயமாகத் தோன்றலாம். ஆனால், நமக்கு அது அதிசயமாய்த் தோன்றவில்லை. ஏனெனில், இதற்கு முன்னாலேயே செய்திருக்க வேண்டியவர்கள், இத்தனை நாள் எப்படிச் சுவாமி வேதாச்சலத்தைப் பற்றி... விஷமப் பிரச்சாரம் செய்யாதிருந்தார்கள் என்பது தான் ஒருவருக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம்.

இரண்டைப்பற்றியும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை என்பதே நமதபிப்பிராயம். ஏனெனில், மறைமலையடிகளைப் பற்றி நம் பார்ப்பனர்கள் முன்னும் விஷமப்பிரச்சாரம் செய்துதான் வந்திருக்கிறார்கள்: இப்போதும் செய்துதான் வருகிறார்கள்: இனியும் செய்யத்தான் போகிறார்கள்.

எப்பொழுது அவர் சுவாமி வேதாச்சலமானாரோ அப்போது முதலும், எப்பொழுது சுவாமிவேதாச்சலமவர்கள் சுவாமி வேதாச்சலமென்னும், மறைமலை அடிகள் என்பதாக ஆனாரோ அப்பொழுது அதைவிட அதிகமாகவும் அவரைப்பற்றி விஷமப் பிரச்சாரம் செய்து கொண்டேதான் இருக்கிறார்கள். - நமது

பார்ப்பனர்களுக்கு ஒருவன் விரோதியாக வேண்டுமானால் தமிழ் பாஷையில் இணையில்லாப் பற்றும், இணையில்லா ஞானமும் இருந்துவருவது ஒன்றே போதுமானதாகும். அப்படிக்கிருக்க நமது சுவாமி வேதாச்சலமவர்களைப் பார்ப்பனர் எப்படி வெறுக்காமலும், பழித்துக் கூறாமலும் இருக்க முடியும். இப்பொழுது சுவாமி வேதாச்சலம் அவர்களைப் பற்றிப் பார்ப்பனக் குழாத்திலும், அவர்களது பத்திரிகைகளிலும் நடந்து வரும் பிரச்சாரத்தை நாம் விஷமப் பிரச்சாரம் என்று மாத்திரம் சொல்வதல்லாமல், அதை ஒரு போக்கிரித்தனமான புகார் பிரச்சாரம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

ஏனெனில், சுவாமிகள் எழுதிய "**அறிவுரைக்கொத்து**" என்னும் ஒரு சிறிய நூலில் "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்" என்ற தலைப்பின் கீழ் எழுதியுள்ள ஒரு கட்டுரையைக் குறிப்பாகக் கொண்டு, அது தேசநலனுக்கும் மக்கள் நலனுக்கும் கேடானது என்பதாகச் சொல்லி அவரது பெயருக்கு இழுக்கு உண்டாகும்படியாகப் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

இரண்டு வார காலமாக இந்தப் பிரச்சாரம் பத்திகைகளில் அடிபடுவதோடு, பல பார்ப்பனப் பத்திரிகைகள் இவ்விஷயத்திற்கு ஆக, தலையங்கமும் உபதலையங்கமும் எழுதுவதோடு-வழக்கம் போல் ஆங்காங்கு கூட்டம் போட்டுக் கண்டித்ததாக, சூழ்ச்சிச் செய்திகளும் பிரசுரமாகின்றன. அவற்றுள் ஒரு பத்திரிகை, விஷமத்தனமான புத்தகம் என்கின்ற தலைப்பிலும் மற்றொரு பத்திரிகை, மறைமலை அடிகள் சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்து விட்டார் என்பது ஆகவும் மற்றும் பல தங்களுக்குத் தோன்றியவிதமாகவும் எழுதி, அப்புத்தகத்தைப் பள்ளிகளில் பாடமாக வைத்தது பிசகு என்றும், அதை எடுத்து விட வேண்டும் என்றும் எழுதியிருக்கின்றன. இந்தக் கூற்றுகளை வேண்டுமென்றே செய்யப்படும் போக்கிரித்தனமான விஷமக் கூற்று என்று சொல்லித்தீர வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**- 'குடிஅரசு', 11.8.1935**

# 15. பழைய நிலை எப்படிப்பட்டது என்று தெரியாத வாலிபர்கள்!

(80 ஆண்டுகளுக்கு முன் 5.11.1937இல் தந்தை பெரியார் அவர்களால் எழுதப்பட்ட ‘குடிஅரசு’ தலையங்கம் இது.

மனித சீர்திருத்த முன்னேற்றத்திற்கு முற்றிலும் எதிரான, ஆபத்தான ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. என்னும் அரசியல் கட்சியின் அதிகாரத்தில் இந்தியா சிக்கியுள்ள இன்றையக் காலக்கட்டத்திற்கு பொருந்தக்கூடிய எச்சரிக்கை மணியாக உள்ளது.

எச்சரிக்கை மணி தமிழர்களுக்கா பார்ப்பனர்களுக்கா அல்லது இருவருக்குமா என்பதை ஊன்றிப் படித்து உணருங்கள் தொகுப்பாசிரியர்).

“சென்ற மாதம் நடந்த சட்டசபை தேர்தலில் பார்ப்பனர்கள் தங்கள் கட்சிக்கு வெற்றி ஏற்பட வேண்டுமென்று உத்தியோகப் பார்ப்பான் முதல் கொண்டு எச்சில் கிண்ணம் கழுவும் பார்ப்பான் வரை பெண்டு பிள்ளை குடும்ப சமேதமாய் கட்டுப்பாடாய் அக்கறையாய் ஆத்திரமாய் அலைந்து திரிந்து வேலை செய்தார்கள் என்பதைப் புகழ்ந்து அச்சமூகத்தை மெச்சிப்பேசுவதே இன்றைய எந்தக் கூட்டத்தினுடையவும் முதல் பேச்சாய் இருக்கிறது. அது உண்மைதான். ஆச்சரியப்படத் தக்கதுதான்.

ஆனால் அதன் காரணம் அவர்களுடைய பொது நல சேவை என்று சொல்ல முடியுமா? அல்லது அதிகாரம், பதவி ஆகியவற்றின் ஆசை என்று சொல்லிவிட முடியுமா? என்றால் இரண்டும் அல்ல என்று தான் சொல்லுவோம். மற்றென்னவென்றால் பார்ப்பனர்களை நாம், (ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதைக் கட்சியும்) அந்த நிலையில் கொண்டு வந்து வைத்து விட்டோம். அவர்களது வாழ்க்கையை

சமூகத்துறையிலும் அரசியல் துறையிலும் மிக்க நெருக்கடியானதாக ஆக்கிவிட்டோம். சகல தொழிலிலும் பிரவேசிக்க அவர்கள் துணிந்தும் நாம் ஒவ்வொன்றிலும் தடுத்து கஷ்டமாக்கி விட்டோம். நாம் ஆக்காவிட்டாலும் “தானாகவேயாவது’ ஆகிக்கொண்டு வர வேண்டியதாகிவிட்டது என்றாவது சொல்லித்தீர வேண்டியதா கிவிட்டது.

ஒரு சின்ன உதாரணம் கூறுவோம். உத்தியோக முறையில் நாம் வகுப்பு உணர்ச்சியை கிளப்பி விட்டதிலிருந்து - வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டதிலிருந்து அவர்கள் ஆதிக்கமும் பெருமையும் தேயத் தலைப்பட்டு விட்டது என்பதோடு, மூ டநம்பிக்கை ஒழிய வேண்டும் என்கின்ற அபிப்பிராயத்தை செல்வாக்குப் பெறும்படி நாம் செய்துவிட்டது முதல் மதத்திலும் சமூகத்துறையிலும் அவர்களுடைய உயர்வும் மதிப்பும் தேய்ந்துவர ஆரம்பித்துவிட்டது.

அச்சமூகத்தில் 100க்கு ஐம்பது பேருக்கு மேல்பட்டவர்கள் படித்து 100 உத்தியோகங்களில் 90 உத்தியோகங்களை கைப்பற்றி வந்ததும், அச்சமூகத்தில் உள்ள மீதி 100க்கு 50 பேருக்கு புரோகிதம், அர்ச்சகம், பரிசாரம், ரிஸ்டோரெண்ட், தூது ஆகிய வேலையில் ஈடுபட்டிருந்ததுமே அச் (பார்ப்பன) சமூக ஜீவன மார்க்கமாக இருந்தது.

மற்றும் வக்கீல், டாக்டர் ஆகிய வேலையும் அச்சமூகத்துக்கே ஏகபோக உரிமையாகவும் பணம் சம்பாதித்து சேர்க்கும் மார்க்கமாகவும் இருந்தது. இந்த நிலையில் இன்று அவர்களது படிப்பு, உத்தியோகம், வக்கீல், டாக்டர் ஆகிய பிழைப்புக்கு பலமான போட்டி ஏற்பட்டுவிட்டது. அரசியல் அதிகாரம் 15 வருஷ காலமாக அவர்களிடமிருந்து சிறிது சிறிதாக பறிக்கப்பட்டு விட்டதால் பார்ப்பனர்களே போட்டியில் முழு வெற்றியும் பெறுவதற்கு மார்க்கமில்லாமல் போய்விட்டது. சமூக வாழ்க்கையிலும் மதிப்பும் பெருமையும் குறைந்த உடன் அவர்களது சோம்பேறி வாழ்க்கைக்கு போதிய வருமானத்துக்கும் கூட வழி இல்லாமல் போய்விட்டது. இதன் பயனாய் பச்சை வருணாச்சிரம பார்ப்பனர் முதல் பெரிய சீர்திருத்த பார்ப்பான் - சர்க்கார் சேவக பார்ப்பான் முதல் மிதவாதப்

பார்ப்பான் அதி தீவிர சத்தியாக்கிரக பார்ப்பான் முதல் தேசிய - சமதர்ம - பொது உடமை பார்ப்பான் வரை தங்களது நிலைமைக்கு வருந்தி கூடிக்கூடி ஒருவருக்கொருவர் கட்டி அழுது தங்கள் தங்கள் துக்கத்தை ஆற்றிக்கொள்ளவும், அச்சமூகத்துக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்கு பரிகாரம் உடனே தேடவும், முயற்சி செய்யவும் வேண்டியதாய் போய்விட்டது.

இதன் பயனாகவே தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் ஒரு கூட்டத்தில் பேசும்போது "இந்த தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியை ஜெயிக்க விட்டு விட்டால் நாம் (பார்ப்பனர்கள்) எல்லோரும் வங்காளக்குடாக்கடலில் விழுந்து மடிய வேண்டியதுதான்" என்று சொன்னார்.

பார்ப்பனர்களுக்கு மேல்கண்டபடியான கஷ்டங்களால் ஏற்பட்ட நஷ்டங்கள் அவ்வளவும் பார்ப்பனரல்லாதாருக்கு லாபமாய் இருந்ததால் அதை அடைந்து சுகத்தில் இருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கு கவலைப்படவேண்டிய அவசியமோ கட்டுப்பட வேண்டிய அவசியமோ ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய் வேலை செய்ய வேண்டிய அவசியமோ இல்லாமல் அவர்கள் ஒருவருக்கொருவர் பொறாமை, போட்டி, வேற்றுமை, துவேஷம் ஆகியவைகளையே வளர்த்துக்கொள்ள வேண்டியவர்களாகி விட்டார்கள். அதோடு ஒரே கட்சியில் ஒருவர் தோல்வி அடைய மற்றொருவர் காங்கிரசுக்கு பணம் கொடுக்க வேண்டிய அவசியத்துக்கும் ஆளானார்கள்.

இந்தக் காரணங்களால் ஒரு கூட்டம் (சிறியதாய் இருந்தாலும்) ஒற்றுமைப்பட்டு வலுவடைந்து வரவும், மற்றொரு கூட்டம் (பெரியதாய் இருந்தாலும்) வேற்றுமைப்பட்டு பலவீனமடைந்து வரவும் வேண்டியதாய் விட்டது.

அதாவது சென்ற மாதத்தில் தென் இந்திய ரயில்வேக் கம்பெனிக்கு உத்தியோகத்திற்கு ஆட்கள் தேவையிருந்தபோது 200க்கு மேற்பட்ட ஆட்கள் தேவை என்று ரயில்வேகாரர் விளம்பரம் செய்யும்போது,

பார்ப்பனர் 6 பேர் வேண்டுமென்றும் பார்ப்பனரல்லாதார் 196 பேர்கள் வேண்டுமென்றும் விளம்பரம் செய்திருந்தார்கள்.

மற்றும் சென்னை ஹைக்கோர்ட்டில் இன்று முஸ்லீம் உள்பட 5 பார்ப்பனரல்லாத ஜட்ஜிகள் இருக்கவும் சென்னை மாகாணத்தில் 2 தடவை கவர்னர் ஸ்தானம் காலியானபோதும் 2 பார்ப்பனரல்லாதாரே கவர்னர் வேலைபார்க்கவும், 7 மந்திரிகளில் 5 இந்திய மந்திரிகள் ஸ்தானத்தில் சுமார் 10 வருஷகாலமாய் 5 பேரும் பார்ப்பனரல்லாதாராகவே இருக்கவும், பார்ப்பனருக்கே பெரிதும் ஏகபோக உரிமையாய் இருந்த முன்சீப், ஜட்ஜ் ஆகிய உத்தியோகங்களில் 100க்கு 20 வீதமாவது பார்ப்பனரல்லாதார்களாக ஆகி பார்ப்பனரல்லாதார் வக்கீல்கள் ஆங்காங்கு 100க்கு 10, 20, 30 வீதம் பெருகி பார்ப்பனர்களின் பிரபுத்தன்மைப் பிழைப்பு நாளுக்கு நாள் குறையவும், மற்றும் பொதுவாக பார்ப்பனர்கள் வீடுகள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3 பையன்கள் பி.ஏ. எம்.ஏ. வரை படித்து விட்டு வேலையில்லாமல் திண்டாடவும், பார்ப்பனரல்லாதாரை சிபார்சுக்கு கெஞ்சவுமான நிலையில் இருந்து வருவது யாரும் அறியாததல்ல.

மற்றும், ஆர்.கே. ஷண்முகம் அவர்கள் கொச்சி சமஸ்தான திவானாகப் போன பின்பு அதற்கு முன்பு அச்சமஸ்தானத்தில் 100க்கு 2 வீதம் இருந்த பார்ப்பனர்க்கு பெரும் உத்தியோகங்களில் 100-க்கு 40 வீதம் 50 வீதம் இருந்த உத்தியோக விகிதத்தை மாற்றி பார்ப்பனர்களுக்கு இனிமேல் 100க்கு 2 உத்தியோகந்தான் என்றும் பார்ப்பனரல்லாதாருக்கு 100க்கு 98 என்றும் தீர்மானம் செய்து விட்டார். அதிலும் தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்து வந்தவர்கள் 100க்கு 40 வீதம் உத்தியோகம் பெறும்படி ஆகிவிட்டது.

இது மைசூர் சமஸ்தானத்திலும் பம்பாய் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் பரவி அங்கும் பார்ப்பன ஏகபோக ஆதிக்கம் குறையும்படியான - ஒழியும்படியான நிலைமை ஏற்பட்டு வருகிறது என்றால் பார்ப்பான் வயிறு வேகாமலோ, ஒற்றுமைப்படாமலோ, கட்டுப்பாடாக அக்கறையும் ஆத்திரமும் படாமலோ இருக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். இந்த நிலைமை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகுமானால் பார்ப்பனர்கள் நிலை இன்னும் ஒரு 25 வருஷ காலத்துக்குள் தாழ்ந்த ஜாதி என்று கருதும்படியான நிலைமைக்கு வந்துவிடும் என்பதில் என்ன தடை?

இப்போது சங்கீத தொழில், நாடகத் தொழில், நாட்டியத் தொழில் என்பவைகளில் கூட பார்ப்பனர்கள் தங்கள் பெண்களை தாராளமாய் இறக்கிவிட்டார்கள். இத்தொழில்களுக்கு என்னதான் மதிப்பு கற்பித்தாலும் இது வரை நம்நாட்டில் இத் தொழில்களில் ஈடுபட்டிருந்த பெண்களை பெரும்பாலும் கீழ் ஜாதியார்கள் என்றும் விபசாரிகள் என்றும் கருதி வந்திருக்கிறார்கள்.

விபசாரித்தனத்தில் பயனடையவும் பெருமை பெறவும் இத்தொழில்களே பெரிதும் பெண்களுக்கு உதவி செய்து வந்திருக்கின்றன என்றும் இதை அனுபவிக்கிற புருஷன்களும் கெட்டுப்போகிறார்கள் என்றும் கருதி பல பெரியோர்கள் அக்கூட்டங்களையே பகிஷ்கரித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலை பார்ப்பனப் பெண்கள் ஏகபோகமாக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது?

மற்றும் இதுபோன்ற வேறுபல தொழில்களை - இழிவு என்று கருதப்பட்டவைகளை பார்ப்பனர்கள் தங்கள் வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நிலைக்கு வந்துவிட்டார்கள்.

நம் நிலையோ நம்மில் தாழ்ந்த ஜாதி என்றும், இழி ஜாதி என்றும் கீழ் மக்கள் செய்யும் தொழிலை உடையவர்கள் என்றும் கருதப்பட்டு வந்த மக்கள் முதல் கொண்டு சகல வகுப்பு மக்களிலும் இந்த 15 வருஷகாலத்துக்குள்ளாக தாராளமாகப் படிக்கவும் பரீட்சையில் பாஸ் செய்து பட்டம் பெறவும் 100க்கு 5, 10 வீதமாவது பெரிய உத்தியோகங்கள் பெறவும் இவர்களால் எவ்வளவோ மதிப்பாயும் பக்தியாயும் கருதப்பட்டு வந்த பார்ப்பனர்களை சாதாரணமாக நீ, நான், வா, போ, வாடா, போடா என்கின்ற மாதிரியில் சமத்துவமாகவும் சமீபமாகவும் அழைக்கும்படியான - மதிக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டோம்.

நமக்கு உத்தியோகப் பஞ்சமென்பது தெரிவதற்கில்லாமல் தானாகவே, தான் பிறப்பதற்கு முன்பே - படிப்பதற்கு முன்பே - பாஸ் செய்வதற்கு முன்பே உரிமை ஏற்பட்டிருப்பதாய் - காத்துக்கொண்டிருப்பதாய்க் கருதிக்கொண்டு ‘எனக்கு என்ன செய்தீர்கள்? எனக்கேன் அந்த உத்தியோகம் கொடுக்கவில்லை?

என்று பார்ப்பனரல்லாத பிரமுகர்களை மிரட்டி உத்தியோகம் பெறவும் சில சமயங்களில் நம்மில் சில வகுப்புகளில் உத்தியோகத்துக்கு ஆள் இருக்கிறதா என்று தேடிப்பிடிக்கவேண்டிய அவசியம் வரவும், சிலர் 'எனக்கு அந்த உத்தியோகம் வேண்டாம், இந்த உத்தியோகம்தான் வேண்டும்' என்று வாதாடவும் பாத்தியம் கொண்டாடவுமான நிலைமை சிறிதாவது ஏற்பட்டு இருக்கிறது.

மற்றும், சில குடும்பங்களில் பார்ப்பனரல்லாதார் என்பதற்காக புருஷனுக்கு உத்தியோகம் கிடைத்தவுடன் பெண் ஜாதிக்கு உத்தியோகம் ஏன் கொடுக்கவில்லை என்று கோபித்துக் கொள்ளவும், இருவருக்கும் உத்தியோகம் கொடுத்தால் இருவரையும் ஏன் ஒரே பக்கத்தில் போடவில்லை என்று கோபித்துக்கொண்டு வேண்டாம் எனவும், இருவருக்கும் ஒரே இடத்தில் உத்தியோகம் கிடைத்தால் மேல் உத்தியோகமும் அவசரப் பிரமோஷனும் உயர்ந்த சம்பளமும் ஏன் கொடுக்கவில்லை என்று நிஷ்ட்டூரப்படவுமான நிலைமையும் ஏற்பட்டு இருக்கிறது.

ஒவ்வொரு பார்ப்பனரல்லாத பெற்றோர்களும் 'என் பையன் ஏன் படிக்கவில்லை' என்று வாத்தியார்களை கண்டிக்கவும், "என் பையனை மேல் கிளாஸில் தாக்கல் செய்துகொள்' என்று ஹெட்மாஸ்ட்டரை அதிகாரம் செய்யவும் மிரட்டவும், 'ஸ்காலர்ஷிப் கொடுக்கிறாயா இல்லையா' என்று பள்ளிக்கூட மேனேஜர்களையும் பார்ப்பனரல்லாத பிரமுகர்களையும் அதிகாரம் செய்யவும், காலேஜுகளில் இடம் ஒதுக்கிவைக்கும்படி அதிகாரிகளுக்குத் தந்திகொடுக்கவும், வீடு வாசல் உடையவர்கள் 'என் வீட்டுக்கு வரி குறைக்கிறாயா இல்லையா' என்று சேர்மென் கவுன்சிலர்களை அதட்டவும், கவுன்சிலர் 'விண்ணப்பம் எழுதிக்கொடு என்றால் "நீங்களே எழுதிக்கொள்ளுங்கள், நான் கையெழுத்து போடுகிறேன்' என்று சொல்லவும், இப்படியே இன்னும் பல துறைகளிலும் கஷ்டம் இன்னதென்று உணரமுடியாமல் அதிகாரத்திலும் ஆணவத்திலும் பாத்தியத்திலுமே காரியம் செய்துகொண்டு போகும்படியான சவுகரியங்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

மற்றும் **பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் அரசியலிலும் 15 வருஷத்துக்கு முன் தாங்கள் எப்படி இருந்தவர்கள் என்பதை**

**சரிவர உணராத வாலிபர்களும் இன்று தாங்கள் இருக்கும் நிலை தங்களுக்கு உரிமை உள்ளதே தவிர இது யாராலும் ஏற்பட்டதல்ல என்று கருதும் வாலிபர்களுமே இன்று இருக்கிறபடியால் பழைய நிலை எப்படிப்பட்டது என்று தெரியாத வாலிபர்களும், பழைய நிலை மாறினதற்கு நன்றி செலுத்த வேண்டியதல்லாதவர்களும், பழைய நிலைக்குப் போக நேரிட்டால் என்ன செய்வது என்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாதவர்களுமாய் இருக்கிறார்கள்.**

உதாரணமாக, ரஷியாவை எடுத்துக்கொள்ளுவோம். ரஷியாவில் புரட்சி ஏற்பட்ட 1917ம் வருஷத்துக்கு இன்று 20 வருஷம் ஆகிறது. ஆதலால் இன்று அங்கு 20 வருஷ வயதுள்ள வாலிபர்களும் புரட்சியின் போது 10, 15 வயதுடைய சிறுபிள்ளையாய் இருந்து இன்று 30, 35 வயதுவரை உள்ளவர்களுக்கும் புரட்சிக்கு முன் அந்நாட்டில் தங்களுடைய நிலைமையும் வாழ்க்கையும் சுயமரியாதையும் எப்படி இருந்தது என்பது பிரத்தியட்சத்தில் தெரிந்து இன்றைய நிலைமையோடு ஒத்திட்டுப் பார்த்து மகிழ்ச்சியடையவும் இந்நிலைமைக்கு உதவியாய் இருந்து நடத்தி வருகிறவர்களுக்கு நன்றி செலுத்தவும் வேண்டிய நிர்ப்பந்தம் அந்த மக்களுக்கு இல்லாமலே போய்விட்டது.

இந்த காரணத்திலேயே இப்போது ரஷியாவில் புரட்சிக் கொள்கை தளர்ச்சியடைகின்றது என்றும், நாஸ்திகம் குறைகின்றது என்றும், ஜனநாயகமுறை கையாள யோசிக்கப்படுகின்றது என்றும் சொல்லப்படுகின்றது. இது உண்மையாய் இருந்தால் இதில் ஆச்சரியப்பட இடமில்லை. ஏனென்றால் மக்களுக்கு கவலை ஏற்பட அவசியம் இல்லாமல் போய்விட்டது.

அது போலவேதான் நம் நிலையும் என்று சொல்லுவோம்.

உதாரணமாக, சில வகுப்புகளை எடுத்துக் கொள்ளுவோம். 20 வருஷத்துக்கு முன் மேல் வேஷ்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு 20, 30 அடி தூரத்துக்கு அப்பால் இருந்து கை கட்டி வாய் பொத்தி சாமி, எஜமானே, புத்தி என்று மரியாதைச் சொல் வைத்துப் பேசி வந்த வகுப்பார்கள் இன்று சமீபத்தில் உட்கார்ந்து தட்டிக் கூப்பிட்டு சமமான முறையில் மரியாதை வைத்து எதிர்த்தும் பேசக்கூடிய நிலைமை வந்தால் அவர்களது மக்கள் தங்கள் பூர்வ

நிலையை எப்படி நினைக்க முடியும்? மற்றும் எத்தனையோ பேர் சமூகத்துறையில் எவ்வளவு குற்றமாக கருதக்கூடியவர்களானாலும் “நாங்கள் 30 வருஷத்துக்கு முன்பே 50 வருஷத்துக்கு முன்பே சுயமரியாதைக்காரர்கள்’ என்று கூறிக்கொண்டு மேடையில் முதல் வரிசையில் உட்காரக்கூடிய பெருமை வந்து விட்ட பின் பழைய நிலை எப்படி ஞாபகத்துக்கு வரும்? இன்றைய இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட உழைத்தவர்களுக்கு எப்படி மரியாதையோ நன்றியோ காட்ட முடியும் என்பதை யோசித்தால் அவர்களது நடத்தையும் அலட்சிய புத்தியும் தன்னை மறந்ததும் ஞாயம் தான் என்று தோன்றும்.

ஆகையால் இன்றைய வாலிபர்கள் அல்லது இன்றைய நடுப்பிராயமுள்ள மக்கள் சமூகத்துறை முற்போக்கு முயற்சிக்கு சிறிதாவது உதவி செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாமல் போனது நியாயமேயாகும். அதுபோலவே கிராமக் குடித்தனக்காரர்களின் மக்கள் உதவியும் நாம் எதிர்பார்க்க முடியாது என்பதற்கும் நியாயம் உண்டு. கிராமக் குடித்தனக்காரன் முன்பு எவ்வளவு செல்வவானாய் இருந்தாலும் பஞ்சாங்கப் பார்ப்பான், வக்கீல் பார்ப்பான், போலீசுக்காரன் ஆகியவர்களின் அடிமையாய் இருந்து வணங்கி வந்தது யாவரும் அறிந்ததேயாகும். அப்படிப்பட்டவர்களுடைய மக்கள் தன் நிலை அறிய முடியாமல் இன்று ஜில்லா, தாலுக்கா போர்டு மெம்பர்களாயும் தலைவர்களாயும் பட்டண வாசிகள் பலர் தங்களிடம் வந்து வாயில் காத்து தயவு எதிர்பார்க்கின்றவர்களாகவும் பட்டணங்களில் உள்ள வக்கீல்கள் கிராமங்களுக்கு சென்று கட்சிக்காரர்களை தேடும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கும் போதும் கிராமக்காரர்கள் சீர்திருத்த முயற்சியில் ஈடுபட வேண்டிய அவசியமென்ன என்று கேட்கின்றோம்.

ஆகவே இன்று சீர்திருத்த முயற்சி இயக்கம் வெற்றிபெறவில்லை என்றும் செல்வாக்குடன் இல்லை என்றும் சொல்லப்படுமானால் அதிலும் நாம் ஆச்சரியப்பட இடமில்லை.

ஆகையால் மனித சமூக சீர்திருத்த - முன்னேற்ற வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் பொறுமையோடு இருக்கவேண்டும்; மனத்தளர்ச்சி அடையக்கூடாது; கூடிய அளவு ஸ்தாபன நிர்மாண வேலையை நடத்திக் கொண்டு போக வேண்டும். **இன்று நாட்டின் செல்வாக்கானது மனித சமூக முற்போக்கு**

**விரோதிகளிடம் சிக்குண்டுவிட்டது. பழைய கஷ்டமறியா வாலிபர்கள் பெரிதும் அவர்களது அடிமைகளாக ஆகிவிட்டார்கள். பாமரமக்களுக்கு தங்களின் முன்னைய நிலையை தாங்கள் உணருவதற்கில்லாமல் போய்விட்டது.**

ஆதலால், செல்வாக்கு பெற்றிருப்பவர்களும் மனித சமூக விரோதிகளும் தங்கள் சுயநலமே பிரதானமெனக் கருதுபவர்களுமான பார்ப்பனர்களின் ஆதிக்கம் நன்றாக உச்சஸ்தானத்துக்கு போகவும், பார்ப்பனரல்லாத மக்கள் தங்கள் பழைய நிலைமைக்கு வரவும், வீட்டுக்கு நாலு இரண்டு உத்தியோகத்துக்கு ஆகவும் வயிற்றுப் பிழைப்புக்கு ஆகவும் எவ்வித இழிவான வேலையும் செய்யத் தயாராகவும், சமூக துறையில் வருணாச்சிரமம் மேலும் பலப்பட்டு தலையெடுக்கவும், ஒவ்வொரு காரியத்துக்கும் பார்ப்பனரல்லாத பிரமுகர்களிடம் வந்து அதிகார தோரணையில் கேட்பது போய் பார்ப்பான் வாயலில் கோயிலுக்குச் சென்று கல் முன் நிற்பது போல் பக்தியோடு - பணிவோடு நின்று கெஞ்சவுமான நிலைமை சீக்கிரத்தில் ஏற்படத் தாராளமாய் இடம் கொடுத்துவிடவேண்டும். இந்த நிலை தானாகவே வரக்கூடும். ஆனாலும் அதற்கு எதிராய் நின்றால் கொஞ்சமாவது தடைப்பட்டு காலதாமதமாகி விடுமாதலால் தாராளமாய் விட்டுவிட்டால் நம்மக்கள் கூடிய சீக்கிரம் புத்திபெற்று இரட்டை ஆவேசத்துடன் புரட்சிக்கு தயாராகிவிடுவார்கள். இதில் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை.

**- 'குடிஅரசு' - தலையங்கம் - 28.03.1937**

❐

# 16. தமிழர் வாழ்வு ‘மானமும் உயர்வும்’ பெறவேண்டும்

ஆரியக்கொடுமையில் இருந்து, ஆரியர் சூழ்ச்சியில் இருந்து, ஆரிய ஆதிக்கத்திலிருந்து தமிழன் மீள்வதே சுயராஜ்யம் என்று, நாம் சுமார் 15 வருஷ காலமாகப் பேசியும் எழுதியும் வருகிறோம். திராவிடப் பெரியார்கள் பலர், இதற்காக, சுமார் 1500, 2000 வருஷத்துக்கு முன்பிருந்தே முயற்சித்து வந்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

இந்நாட்டிற்கு ஆரியர் வருவதற்கு முன் தமிழர்கள் என்ன நிலையில் இருந்தார்கள், எவ்வளவு சுதந்திரமும் வீரமும் நாகரிகமும் பெற்று இருந்தார்கள் என்பதும், ஆரியர்கள் வந்தபிறகு தமிழர்களை (திராவிடர்களை) அவர்கள் எவ்வளவு கொடுமையும் சூழ்ச்சியும் செய்து ஆதிக்கம் பெற்றார்கள் என்பதும், ஆரியர்களும் மற்றும் தமிழர்கள் அல்லாத அந்நிய மாகாணத்தவர்களும் அய்ரோப்பிய நாட்டு ஆராய்ச்சி வல்லார்களும் எழுதி வைத்திருக்கும் அநேக ஆராய்ச்சி நூல்களில் இன்றும் காணலாம்.

இந்தப் படியாக ஏமாற்றி இழிவு படுத்தி அடிமைப்படுத்தப்பட்ட திராவிட மக்கள் ஆரியர்களைவிட ஜனத்தொகை 33 பங்கு அதிகமாக இருந்தும், இன்றைய வரையிலும் கூட ஏன் ஆரியர்கள் கொடுமையில் இருந்தும், ஆதிக்கத்தில் இருந்தும் விடுபடவில்லை என்றால் இதற்கு ஒரு காரணம்தான் கூறலாம் என்று தோன்றுகின்றது.

ஆரியர் ஆதிக்கத்திற்கு வந்தவுடன் திராவிடர்களின் கலைகளை அழித்து விட்டதும், திராவிடர்களைக் கல்வி

அறிவில்லாமல் செய்ததும், மீறிப் படித்தவர்களைக் கொடுமைப்படுத்தி அழித்தும், அழிபடாதவர்களைத் தங்களுக்கு அடிமைப்படுத்தி தங்கள் சமயங்களையும் கலைகளையும் தங்கள் உயர்வுக் கதைகளையுமே தமிழ் பாஷையில் மொழிபெயர்த்து எழுதச்செய்து, அதிலேயே அவர்களது பிழைப்பையும் பெருமையையும் கட்டுப்படுத்தி ஆரியக் கூலிப்பிரச்சாரகராய் ஆக்கிக்கொண்டதால், படிப்பு வாசனையற்ற தமிழ் மக்கள் இந்தத் துரோகிகளும் வஞ்சகர்களுமான இழிமக்களை நம்பி, தமிழ் மக்கள் பூராவும் ஆரியர் அடிமைகளாகவும், ஆரியர் இன்பத்திற்கும் போக போக்கியத்துக்குமாகவே தமிழர்கள் வாழவேண்டியவர்களாகவும் ஆக்கப்பட்டு விட்டார்கள்.

உண்மையில் தமிழர்களுக்கு, தமிழர்களை அசுரனாகவும், இராட்சசனாகவும் ஆக்கி அழித்த சிவனும், விஷ்ணுவும், மற்றும் தமிழர்களை அழித்து அடிமைப்படுத்திய ஆரியக் கொடியோர்களும் இன்று தமிழர்களுக்குக் கடவுள்களாய் இருக்கக் காரணம் - படித்த தமிழன் பண்டிதனாகி ஆரியர்களுக்குக் கூலியாகி ஆரியர்கள் தங்கள் உயர்வுக்காக எழுதி வைத்துக் கொண்ட ஆதாரங்களை மொழிபெயர்த்துப் பிரச்சாரம் செய்ததல்லாமல் வேறு என்ன காரணம் என்று யாராவது சொல்லமுடியுமா? என்று யோசித்துப் பார்த்தால் யாவருக்கும் இந்தக் காரணம் சுலபத்தில் விளங்கிவிடும்.

மற்றும், விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் பாரதம், இராமாயணம், கந்தபுராணம், சிவபுராணம், விஷ்ணுபுராணம் ஆகிய ஆரியர்களின் உயர்வும் திராவிடர்களின் இழிவும் கொண்ட ஆதாரங்களைக் கம்பன் முதலிய தமிழ் அறிந்தவர்கள் தமிழில் மொழிபெயர்த்துப் பிரச்சாரம் செய்திருக்காவிட்டால் ஆரியர் உயர்வும் ஆரியக் கடவுள்களின் உயர்வும் தமிழர்களுக்கு இவ்வளவு ஏற்பட்டிருக்க முடியுமா என்பதுதான்.

அரக்கன், அசுரன், இராட்சதன் என்கின்ற பலமும் பராக்கிரமும் வீரமும் கொண்ட பெயர்கள் தமிழர்களை - திராவிடர்களைக் குறிப்பது என்பதும், ஆரியர்களுக்கு

எதிரிகளானதினாலேயே இப்பெயர்கள் தமிழர்களுக்கு இடப்பட்டதே தவிர அந்தப்படிப் பிறவியில் யாரும் இல்லை என்பதும் சரித்திர ஆராய்ச்சியாளர்களின் முடிவு ஆகும்.

உதாரணமாக, ஆரியரை எதிர்த்த இராவணன் இராட்சசன் என்றால், அவனைக் காட்டிக்கொடுத்து, ஆரியருக்குத் தஞ்சம் புகுந்து வாழ்வுபெற்ற அவன் தம்பி விபூஷணன் ஆழ்வார் ஆக்கப்பட்டு இருக்கின்றான். இரணியன் இராட்சசனென்றால், அவன் மகன் தகப்பனுக்குத் துரோகியாகி ஆரியனுக்கு அடிமைப்பட்டுத் தகப்பனைக் கொல்லச் செய்யப்பட்ட சூழ்ச்சிக்கு உடந்தையாய் இருந்ததால் பிரகலாதன் ஆழ்வாராக ஆக்கப்பட்டு இருக்கிறான். அதுபோலவே, கிருஷ்ணனை எதிர்த்ததற்கு, மகாவிஷ்ணு என்கின்ற ஆரிய ஆண் கடவுளுக்கும், பூமிதேவி என்கின்ற ஆரிய பெண்கடவுளுக்கும் பிள்ளையாகப் பிறந்தவன் என்று இழிவுபடுத்தி, அவன் நரக அசுரனாக ஆக்கப்பட்டுவிட்டான். நரகர் என்பது பெரிதும் ஆரியரல்லாதார்களைக் குறிப்பது. நரன் என்பது இந்தப் பூலோகத்தில் இருப்பவர்களுக்குப் பெயர். இந்தப் பூமியிலேயே ஆரியர் இருந்தாலும் அவர்கள் தங்களைப் பூதேவர்கள் என்று எழுதிவைத்துக்கொண்டதால், மற்றபடி இந்தப் பூமியில் - தமிழ்நாட்டில் - திராவிடத்தில் இருப்பவர்களுக்கு நரர் என்றும், திராவிடர்களின் தலைவர்களுக்கு நரகர், அசுரர் என்றும் ஆரியர் பெயர் வைத்து, திராவிடத் தலைவனை நரகாசுரன் என்று சொல்லிவிட்டார்கள்.

அந்த நரகாசூரன், ஆரியத் தலைவனாகிய கிருஷ்ணனையும் அவன் மனைவியையும் எதிர்த்து இருக்கிறான். திராவிடர்கள் பார்ப்பனருக்குச் சூத்திரர்களாகவும் சூத்திரர்களான வைப்பாட்டி மக்களாகவும் மநுதர்மப்படி கருதப்படுவதால், திராவிடத் தலைவன் நரகாசூரன் விஷ்ணுவுக்கு வைப்பாட்டியாகிய திராவிட நாட்டுப் பூமியில் பிறந்த மகனாகப் பாவிக்கப்பட்டுவிட்டதில் அதிசயமொன்றுமில்லை. ஆதலால், கிருஷ்ணன் நரகாசூரனைக் கொன்றான் என்று கொள்ளப்பட்டுவிட்டது. அதைப் பண்டிகையாகவும் கொண்டாட ஆரியர் சூழ்ச்சி

செய்ததின் காரணம் ஆரியர்கள் தேவர்கள் என்பதையும், ஆரியர்களைத் தமிழன் எதிர்த்தால் அழிக்கப்பட்டுவிடுவான் என்பதையும் பிரச்சாரம் செய்வதற்காகவேயாகும் என்று கருதவேண்டியிருக்கிறது என்பதோடு, ஆரியர்களுக்கு விரோதமானால் அவன் அசுரன், இராட்சசன், அரக்கன் ஆகிவிடுகிறான். அன்றியும் அக்கிரமமாக அழிக்கப்பட்டும் விடுவான்.

இந்த நிலைமையில் நாம் ஆரியக் கொடுமையிலும் இழிவிலும் சூழ்ச்சியிலும் இருந்து மீள வேண்டுமானால் இந்த உண்மைகளை உணர்ந்து மனதில் பதியவைத்து அதற்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டும்.

இதுநாள் வரையில் போனது போகட்டும்; இனிமேலாவது தமிழன் தலை நிமிர்ந்து நடக்கவாவது முயற்சிக்க வேண்டாமா? அந்தப்படி எந்தத் தமிழனாவது தனது தன்மானத்தை நினைத்துப் பார்த்து அறிவு வந்து தலை நிமிர்ந்து நடக்க வேண்டுமென்று கருதுவானேயானால், ஆரிய சம்பந்தங்களிலிருந்து விலக முயற்சிக்க வேண்டாமா என்று கேட்கிறோம்.

சமயத்துறையில் நம் நிலை இவ்வளவு மோசமாயிருந்தாலும்கூட, அரசியலிலும் ஆரியர்களுடைய சூழ்ச்சியை நாம் கண்ணாரக்கண்டு அனுபவித்து வருகிறோம் அல்லவா? ஆரிய சூழ்ச்சியின் பயனாய் தமிழன் சமுதாயத்தில் ஆரியனுக்குத் தீண்டக்கூடாத கீழ் ஜாதியாய் இருந்தாலும், அரசியலில் நாம் அனுபவித்துவரும் இழிவுக்கு நமக்கு ஏதாவது உதாரணம் வேண்டுமானால் அரசியலில் ஆரியர்கள் நிலைமை எப்படி இருக்கிறது, தமிழர் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தாலே போதுமானதுதானே.

இந்தத் தமிழ்நாட்டில் உள்ள தமிழ் மக்களாகிய பழம்பெரும் சமூகத்தினரைச் சுமார் 10, 15 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. வேளாளர்

2. கள்ளர்கள்

3. மறவர்கள்

4. படையாட்சிகள்

5. செட்டியார்

6. நாயக்கர்மார்கள்

7. செங்குந்தர்கள்

8. ரெட்டிமார்கள்

9. நாடார்கள்

10. முஸ்லீம்கள்

11. கிறிஸ்தவர்கள்

12. ஆதித்திராவிடர்கள்

மற்றும்

சிலவகையாளர்கள்.

இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஜனத்தொகையில் 100 க்கு 97 பேர்கள் ஆவார்கள். இவர்கள் ஜமீன்தார்கள், செல்வவான்கள், வியாபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், வீரர்கள், கலைவாணர்கள் என்கின்ற பல முக்கியமான சமூகஸ்தர்களுமாவார்கள். ஆனால், ஜனத் தொகையில் 100 க்கு 3 பேர்களாய் உள்ள ஆரியர்கள் மேல் கண்ட தமிழர் கூட்டத்தினரைப்போல் எவ்வித அந்தஸ்து, தொழில் முதலியவை இல்லாது ஊரார் உழைப்பின் பயனையே உறுதுணையாய்க் கொண்டவர்கள் ஆக இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இவர்களுக்கு எந்த உரிமையும் பதவியும் இருந்ததாகச் சொல்லமுடியாது.

அப்படிஇருந்தும்இன்றுஅரசியல்ஆதிக்கத்தில்தலைமையில் யார் இருக்கிறார்கள்? சாதாரண முறையில் கேட்கின்றோம், தோழர்கள் ஆச்சாரியாரைப் பற்றியும், மூர்த்தியாரைப்பற்றியும் அவர்களது பிறப்பு வளர்ப்பு ஊர், பேர், அவர்களது சந்ததி, பெற்றோர் நிலை முதலாகியவை எந்தத் தமிழருக்காவது

தெரியுமா என்று கேட்கின்றோம். அப்படிப்பட்டவர்கள்தான் இன்று தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்குத் தலைவர்களாக இருக்கிறார்கள்.

வேளாள வகுப்பும் பெருநிலக்கிழார்களான பழம்பெரும் பெருமையும் சரித்திர உரிமையும் கொண்ட மக்களாகிய அவ்வகுப்புப் பிரமுகர்களின் யோக்கியதை இன்று எப்படியிருக்கிறது? ஆச்சாரியார், மூர்த்தியார் ஆகியவர்களின் அரியணையைச் சுமந்து கொண்டும் அதற்கு ஆதாரமாய் இருக்கும் முட்டுக்கால்கள் போலவும் அல்லவா விளங்குகிறார்கள்; கள்ளர், மறவர் என்னும் சமூகத்தலைவர்களும் பிரமுகர்களுமாகிய இராஜாக்கள் ஜமீன்தார்கள், மிராசுதார்களான இராமநாதபுரம் இராஜா, சேத்தூர், சிங்கம்பட்டி ஜமீன், பூண்டி வாண்டையார் போன்ற சரித்திரப் பெருமையும் தமிழ்நாட்டு உரிமையும் பெற்ற வீரர்கள் நிலை இன்று எப்படி இருக்கிறது? ஆச்சாரியார், மூர்த்திக்கு அடிபணியும் விலாசம் தெரியாத நபர்களாக வல்லவோ இருக்க நேர்ந்துவிட்டது.

மற்றும் படையாட்சி வீரர்கள் எங்கே? நாயக்கர், ரெட்டி, நாடார், செங்குந்தர், முஸ்லீம், கிறிஸ்தவர், ஆதித்திராவிடர் முதலிய பெருமான்கள் எங்கே? இவர்கள் தமிழ்நாட்டை ஆண்ட கூட்டத்தினரல்லவா? தமிழ் நாட்டுச் சரித்திரத்தை அலங்கரித்த பேர் பெற்ற மன்னாதி மன்னர்கள் கொண்ட சமூகத்தாரல்லவா? இவர்கள் கதி இன்று எப்படி இருக்கிறது? ஆச்சாரியார், மூர்த்தி ஆகிய ஆரியப் பார்ப்பனர்களின் முன்னால் உடை வாளேந்தி, குடை - கொடி பிடித்தும், சாமரம் போடும் சரமக்கள் நிலையில் அல்லவா இருக்க நேர்ந்தது.

இது ஏன் இப்படியாயிற்று என்று எந்தத் தமிழனாவது சிந்திக்கிறானா? வெட்கப்படுகிறானா? மூலையில் உட்கார்ந்து, பேர், ஊர், விலாசம்கூடத் தெரிவிக்க முடியாமல் குப்பைத் தொட்டியில் கிடக்கிற நிலை ஏற்பட்டுக் கூடத் தமிழனுக்கு மானம், ரோஷம், மனிதத் தன்மை வராமல் ஆரியனை வலம்வந்து

வணங்கி உயிர் வாழ்கிறான் என்றால் தமிழன் இழந்த மனிதத் தன்மை பெறத் தகுதி உடையவனா என்று வருத்தத்தோடு - கவலையோடு பயப்படவேண்டி இருக்கிறது.

தமிழர்களே! நீங்கள் மனிதத்தன்மை பெற அதிகமான கஷ்டம் ஒன்றும் அடையவேண்டியதில்லை. உங்கள் உடலில் இருப்பது ஆரிய இரத்தக் கலப்பில்லாத தனித் தமிழர் இரத்தம் என்று கருதிக்கொள்ளுங்கள். உங்கள் சமய இயல், அரசியல் ஆரிய சம்பந்தமற்ற தனி இயல்கள் என்று கருதிக்கொள்ளுங்கள். உடனே உங்களுக்குப் புதிய உணர்ச்சி வரும், புதிய ஊக்கம் வரும்; உங்கள் அறிவு ஒளிபெற்று உங்கள் மனத்தில் படிந்துள்ள துப்பும் தூசியும் விலகி உங்கள் நரம்புகளுக்கும் நாடிகளுக்கும் முறுக்கு ஏறும். அப்பொழுதே நீங்கள் உண்மைத் தமிழராகி - தமிழ்நாடு தமிழருக்காகி, தமிழர் வாழ்வு மானமும் உயர்வும் பெறும் என்று பணிவோடு விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம்.

மற்றபடி அந்நிய மக்கள் மீது நமக்கு வெறுப்பு வேண்டாம்; துவேஷம் வேண்டாம்; பொறாமை வேண்டாம்.

நம் ஈன நிலைமீது வெறுப்பும் துவேஷமும் கொண்டு வீறிட்டு எழுங்கள்!

எங்கே? உங்கள் எழுச்சியின் முதல் உணர்ச்சியை இந்தத் தீபாவளிப் பண்டிகைமீது காட்டி அதை வெறுத்து ஒழிக்கிறீர்களா?

பார்ப்போம்!!

**- ‘குடிஅரசு’, தலையங்கம், 5.11.1939**

❒

## பகுதி - 6

# தமிழ் அறிஞர்கள் போற்றிப் புகழும் ‘பெரியார்’

# 1. பெரியார் சொல்வதன் பொருள்

தமிழ் மொழி, இலக்கியங்கள் குறித்த தந்தை பெரியாரின் கருத்துகளுக்கு திடீர்த் தமிழ்ப் பற்றாளர்களும், அதைப் பயன்படுத்திக் கொள்ளத் துடிக்கும் பார்ப்பனியமும் காட்டும் எதிர்ப்புகளுக்கு அன்றே மிகத் தெளிவாக பதில் அறைந்திருக்கிறார் **புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்** அவர்கள்.

குயில் இதழ்களிலிருந்து புரட்சிக் கவிஞரின் கேட்டலும் கிளத்தலும்.....

கே: சிலப்பதிகாரம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது ஆரியத்தைத் தமிழரிடம் புகுத்தும் நோக்கமுடையது என்று பெரியார் சொல்லலாமா?

கி: கதையமைப்பு நன்று. தமிழர் வாழ்க்கை முறைகள் சில நல்லன. பொருந்தாதவை பகுத்தறிவுக் கொவ்வாதவையாய் இருக்கின்றன. பாடம் சொல்லும் புலவர்கள் இவைகளை மாணவர்கட்கு எடுத்து விளக்குவதில்லை.

அதனால் ஆரியம் தமிழகத்தில் வலியுறுகின்றது. தமிழர் ஒழுக்கம், கலை, நாகரிகம், பண்பாடுகள் குறைவுபடுத்தப்படுகின்றன. புதியதொரு சிலப்பதிகாரம் எழுதிக் கொள்ளலாமன்றோ!

கே: தொல்காப்பியம் ஒரு தமிழனால் செய்யப்படவில்லை. தமிழர் ஒழுக்கம், கலை, நாகரிகம் அதில் மறுக்கப்படுகின்றன என்று கூறலாமா பெரியார்?

கி: ஆயிரம் முறை கூறலாம். வெள்ளை வாரணனாரும் பிறரும், தொல்காப்பியத்தில் பார்ப்பனரைப் பற்றிய செய்யுட்களை இடைச் செருகல் செய்துள்ளார்கள் என்று கூறினார்கள்.



இடைச் செருகல்களை நீக்கிப் பதிப்பிக்கலாமன்றோ புலவர்கள்! செய்யட்டும் செய்த பிறகு பெரியார் அவ்வாறு கூற மாட்டார்.

**(குயில் 16.2.1960)**

கே: தமிழரசர்கள் முட்டாள்கள்; காட்டுமிராண்டிகள் என்று பெரியார் சொல்லலாமா?

கி: ஏன் சொல்லக் கூடாது? தெருவில் கிடக்கும் நாய் விட்டையில் சிவனைக் கண்டான். கண்டவன் சும்மாவா இருந்தான். கோவில் கட்டி அதில் நிறுவிக் கும்பிடவும் வைத்தான்.இப்படி ஒரு தமிழரசன்.

வடநாட்டினின்று ஆரியப் பார்ப்பனர்களை அழைத்து தமிழர் மேல் ஏறிச் சவாரி செய்யச் சொல்லுகிறான். இப்படி ஒரு தமிழரசன்! இப்படிப்பட்டவர்கள் எல்லாம் பிற்கால மன்னர் தாமே அதற்கு முற்காலத்தில் இருந்தவர்கள் நாகரிகம் உள்ளவர்களல்லவா என்று கூறலாம்.

நாகரிகம் உள்ளவர்கள் நாகரிகம் இல்லாதவர்கள் ஆகிய இருவகையாரில் கொள்கையில் வெற்றி பெற்றவர்கள் எவர்?

நாகரிகம் இல்லாதவரல்லவா? அவர் கட்டிய கோவில், அவர் காட்டிய நாய் விட்டைகள் தாமே இன்று ஆட்சி நடத்துகின்றன?

தமிழகத்தில் பற்றுள்ள புலவர்கள், நாகரிகமில்லாதவர் கண்ட கோவில் நாய் விட்டைகளை ஒதுக்கியும், நாகரிகம் கொண்டிருந்த மன்னரின் நாட்டுத் தொண்டைப் போற்றியும் நூற்கள் செய்ததுண்டா? செய்ய வேண்டுமல்லவா! அவ்வாறு அவர்களைச் செய்யத் தூண்டுவதுதான் பெரியாரின் பேச்சு!

கே: தமிழுக்கு இலக்கியம் இல்லை எனலாமா பெரியார்?

கி: இராமாயணத்தையும் பாரதத்தையும் ஆரியரின் காட்டுமிராண்டித்தனத்தைப் பின்பற்றி எழுந்த புராணம் முதலியவற்றையும் நம் இலக்கியம் நம் இலக்கியம் என்று கூறுவதன்றி

தமிழர் இலக்கியங்கள் இன்னின்னவை என்று எடுத்துக் காட்டும் வலி இருந்ததா புலவர்களிடம்? அமைச்சர்களிடம்?

தமிழிலக்கியத்தை முன்னுக்குக் கொண்டு வாருங்கள், அவைகளைப் பின்பற்றி இலக்கியத்தைக் குவியுங்கள். சீர்திருத்தக்-காரர்களை எதிர்ப்பதன் மூலம் வயிறு வளர்க்க எண்ணாதீர்கள் என்பதுதான் பெரியார் சொல்வதன் பொருள்.

**(குயில் 23.2.1960)**

❒

# 2. பெரியார் தொண்டு மிக விரைவில் வெற்றி காண இருக்கிறது

இந்தி ஆரிய தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆரிய தர்மம் வர்ணாஸ்ரம தர்மத்தை, ஜாதி வேறுபாடுகளை, ஜாதி உயர்வு தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது. தமிழர் கலாச்சாரமோ இதற்கு முற்றிலும் மாறுபாடானது.

அப்படி இருக்க, ஜாதி வேற்றுமைகளையே அடிப்படையாகக் கொண்ட இந்தி மொழியைத் தமிழ்நாட்டில் புகுத்துவதென்றால் இங்கு கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்டுவரும் ஒற்றுமை மனப்பான்மையைக் கெடுக்க ஆரியர்களால் செய்யப்படும் சூழ்ச்சி இது என்றுதானே கொள்ள வேண்டியிருக்கிறது! நாம் இந்தி வேண்டாம் என்றால் சமஸ்கிருதம் படியுங்கள் என்று கூறுவதன் கருத்து இதுதானே. இரண்டும் மக்களுள் வேற்றுமை உணர்ச்சிகளை வளர்க்கும் மொழிகள் என்பதுதான் இதற்குக் காரணம். தமிழர்களிடையே தோன்றியுள்ள புத்துணர்ச்சியை, பகுத்தறிவு உணர்ச்சியைக் கெடுக்க, நாசமாக்க, தம்மாலியன்ற எல்லா வகையாலும் தொல்லை கொடுக்க முற்பட்டு விட்டனர் என்பதன் அறிகுறிதான் இது.

இதை ஆரம்பத்திலிருந்தே உணர்ந்து கொண்டுள்ள பெரியார் இராமசாமி அவர்களும் ஆரியத்தை இந்நாட்டிலிருந்து எவ்வகையிலேனும் ஒழித்தே தீருவதென்று கங்கணம் கட்டிக் கொண்டு முயற்சி செய்து வருகிறார்கள். இத்தொண்டு மிக விரைவில் வெற்றிகாண இருக்கிறது என்பது இங்குக் கூடியுள்ள மக்கள் உணர்ச்சியால் நன்கு தெரியப்படுகின்றது.

**- தமிழ் கடல் மறைமலையடிகள்,**

**நூல்: இந்திப் போர் முரசு**

❒

# 3. பெரியார் ஒருவரே



நயன்மைக் கட்சித் தலைவர், பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பின் இருக்குமிடந் தெரியாது ஓடி ஆங்காங்குப் பதுங்கிக் கொண்டனர். அன்று பெரியார் ஒருவரே திராவிட - ஆரியப் போர்க்களத்திற் புகுந்து உடைபடை தாங்கி இடைவிடாது போராடி கல்லாப் பொதுமக்கள் கண்ணைத் திறந்து கற்றோர்க்குந் தன்மான உணர்ச்சியூட்டி தலைதூக்க வொண்ணா தடித்து வீழ்த்தி, ஆச்சாரியார் புகுத்திய இந்தியை எதிர்த்துச் சிறைத் துன்பத்திற்காளாகி, கணக்கற்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்தி வைத்தும், பகுத்தறிவு இயக்கத்தைத் தோற்றுவித்தும் மூடப்பழக்க வழக்கங்களை யொழித்தும்.

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்

குற்றம் மறைப்பான் உடம்பு - குறள் 1029

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்

செயற்கரிய செய்கலா தார் - குறள் 26

என்னும் குறள்கட்கு இலக்கியமானார்.

**- தமிழறிஞர் தேவநேயப்பாவாணர்,**

**நூல்: தமிழர் வரலாறு**

# 4. பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார்



தமிழர் உண்மையிலேயே தமிழராய், தனித் தமிழராய் உலகில் பிறருடன் ஒப்புரிமை கொள்ளத் துணிவர். தன்னாட்சி புரிவர். அறவாட்சியில், அன்புக் கலையாட்சியில் முனைவர் என்பதற்கு பெரியார் வாழ்க்கையின் வெற்றி ஓர் அரிய வழிகாட்டியும் நற்குறியுமாகும்.

ஜனவரி 1-15, 2014 உண்மை

❒

# 5. -இராவண காவிய ஆசிரியர் புலவர் குழந்தை



பெரியார் பிறவாதிருப்பாரேல் தமிழர், தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழாட்சி, தமிழினம், தமிழ் நாகரிகம் என்னும் உணர்ச்சியெல்லாம் தமிழ் மக்களுக்குத் தோன்றியிரா. தமிழ் வாழ்க எனும் நெஞ்சத் துணிவு ஒரு காலும் உருவாகியிருக்காது. தமிழ் முதன்மொழி ஆனதற்கு மாறாக தன் பெயரை இழந்திருக்கும். தமிழ்ப் பண்பாட்டை ஆரியப் பண்பாடு விழுங்க ஏப்பம் விட்டிருக்கும்.

- ஜனவரி 1-15, 2014 உண்மை

❒

# 6. முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதன்



‘தமிழர் இயக்கத்தின் தந்தையும், பகுத்தறிவு இயக்கத்தின் தலைவருமாகிய ஈ.வெ. ராமசாமி பெரியார் அவர்களின் வாழ்க்கை சரிதத்தை நன்கு கவனித்துப் பார்த்தால் வள்ளுவர் வாக்கைப் பின்பற்றி தமிழ்நாட்டில் நடந்து காட்டுபவர் பெரியார் ஈ.வெ.ரா. ஒருவரே என்பது இனிது புலனாகும்.’

**- ஜனவரி 1-15, 2014 உண்மை**

❒

# 7. திருக்குறள் வீ.முனுசாமி



பெரியாரின் நுண்ணிய வாழ்க்கையினைத் துருவிக் காணுவோருக்கு வள்ளுவர் கூறும் வழியினிற் செல்வோர் இவர் ஒருவரே என்பது வெள்ளிடை மலையென வெளிப்படும்.

**- ஜனவரி 1-15, 2014 உண்மை**

❒

# 8. பின் சரித்திரங்களில் எழுதப்படும் தீரபுருஷன் !



மதத்தாலும், மதக் குருக்களின் போதனைக்குட்பட்ட கருணையற்ற ராஜாக்களின் கொடுமையாலும் முன்தோன்றின சீர்திருத்தக்காரர்கள் அழிந்தாலும், அவர்கள் சொன்னவை அழியவில்லை! அவற்றைச் சிறிது காலத்திற்கு முன்னிருந்த அறிவாளிகளும் சொன்னார்கள். இப்பொழுதிருக்கும் அறிவாளிகளும் ஒத்துக் கொள்கிறார்கள். அவற்றையே, இராமசாமிப் பெரியாரும் பிரச்சாரம் செய்கிறார். இவ்விருபதாம் நூற்றாண்டில், தென்தேசத்தில் உண்டான அறிவின் பயனையெல்லாம் அனுபவிக்கச் செய்த தீரபுருஷன் இராமசாமிப்பெரியாரே என்பது பின் சரித்திரங்களில் எழுதப்படும்!

**- கைவல்ய சுவாமியார்,**

**நூல்: தமிழர் தலைவர்**

# 9. பெரியார் என்னும் பெரும் பேரரசனை இழிப்புரை சொல்வதா? சொல்லியிங்கிருப்பதா?



கருகிப்போய்க் கிடந்த இந் நாட்டிடை வந்தே
உருகி உருகி உயிரைத் தேய்த்தே
ஒளியைப் பரப்பிய ஊழித் தலைவராம்
அளிசேர் எங்கள் அருமைப் பெரியார்

பேசிய பேச்சுக்கள் நச்சுகள் என்றால்
ஊசிய கருத்தை உரைத்த புராணங்கள்
வேத அழுக்குகள், பொய்ம்மை விளக்கங்கள்
ஊதை உளுத்தைகள் நச்சிலா உரைகளா?

சேற்றில் புழுக்களாய் சிற்றுயிர் இனங்களாய்
மாற்றிட இயலா மந்தை ஆடுகளாய்

வழிவழிப் பார்ப்பனர் வந்து புகுத்திய
ஆரியக் கொடுநச்சரவம் கொத்திச்

சிறந்தநல்லறிவையும் ஆயிரம் ஆயிரம்
அறிவுநூல் தொகையையும்
ஏயநல்லிலக்கிய இலக்கண இயல்பையும்
நாகரிகத்தையும் நல்லபண் பாட்டையும்

ஆட்சி நலத்தையும் கொண்ட ஓர் இனத்தைப்
பெருங்கொள் கையினால் பிழைக்க வைத்த
தன்மான ஊற்றினைத் தகைமைத் தலைவனை
மண்பானங் காத்த மாபெரும் மீட்பதனை,

அரியாருள் எல்லாம் அருஞ்செயல் ஆற்றிய
பெரியார் என்னும் பெரும்பேர ரசனை
இழிப்புரை சொல்வதா? சொல்லியிங் கிருப்பதா?
பழிப்புரை வந்துநம் செவிகளிற் பாய்வதா?

நச்சு விதைகளா. நயந்துஅவர் சொன்னவை?
பச்சிலை மருந்தன்றோ, எமக்கவர் பகர்ந்தவை?
பார்ப்பனப் பதடிகள் எம்மைப் படுத்திய
ஆர்ப்பொலி அடங்கியது அவரினால் அன்றோ?

ஆரியக் குறும்பர்கள் ஆக்கிய கொடுமையின்
வேரினைத் தீய்த்தது அவர்வினை யன்றோ?

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

❒

# 10. எவன் பிறந்தான் இதுவரை ?



குமரி நாட்டின் தமிழ்நான் மறைகள்
அமிழ்ந்தன! வடவர் மறைகள் நிமிர்ந்தன!
தமிழன் முதலில் உலகினுக் களித்த
அமிழ்துநேர் தத்துவம் ஆன எண்ணூல்
அமிழ்ந்தது! வடவரின் அறிவுக் கொவ்வாப்
பொய்மை மெய்ம்மை ஆகிப் பொலிந்தன
அகத்தியன் தொல்காப் பியன்முத லானவர்
தகுதிறம் தமிழிற் பெறுதிறம் அருளிய
எண்ணருங் கண்ணிகர் தமிழ்ப்பாடும் ஏடுகள்
மறைந்தன! வடவர் தீயொழுக்க நூற்கள்
நிறைந்தன! இந்த நெடும்புகழ் நாட்டில்
"தீதுசெய் யற்க செய்யில் வருந்தி
ஏதும் இனியும் செய்யற்க" வெனும்
விழுமிய தமிழர் மேன்மை நெஞ்செலாம்
கழுவாய் எனுமொரு வழுவே நிறைந்தது
"நல்குதல் வேள்வி" என்பது நலியக்

கொல்வது வேள்வி எனும் நிலை குவிந்ததே
ஒருவனுக் கொருத்தி எனும் ‘அகம்‘ ஒழிய
அய்வருக் கொருத்தி எனும் அயல் நாட்டுக்
குச்சுக் காரிக்குக் கோயிலும் கட்டி
மெச்சிக் கும்பிடும் நிலையும் மேவிற்று
மக்கள் நிகர்எனும் மாத்தமிழ் நாட்டில்
மக்களின் வேற்றுமை வாய்க்கவும் ஆனதே
உயர்ந்தவன் நான்என் றுரைத்தான் பார்ப்பான்
அயர்ந்தவன் நான்என் றுரைத்தான் தமிழன்
இப்படி ஒருநிலை காணுகின் றோமே
இப்படி எங்குண் டிந்த உலகில்?
இறந்த காலத் தொடக்கத் திருந்து
சிறந்த வாழ்வுகொள் செந்தமிழ் நாடிவ்
விழிநிலை நோக்கி இறங்குந் தோறும்
பழிநீக் கிடஎவன் பிறந்தான் இதுவரை?
இதுவரை எந்தத் தமிழன் இதற்கெலாம்
பரிந்து போராடினான் எண்ணிப் பார்ப்பீர்
தமிழன் மானம் தவிடுபொடி ஆகையில்
வாழாது வாழ்ந்தவன் வடுச்சுமந்து சாகையில்
ஆ என்று துள்ளி மார்பு தட்டிச்
சாவென்று வாழ்வொன்று பார்ப்பேன் என்று
பார்ப்பனக் கோட்டையை நோக்கிப் பாயும் இவ்
வருஞ்செயல் செய் வார் அல்லால்
பெரியார் எவர்? நம் பெரியார் வாழ்கவே!

- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

மலேசியாவில் வெளியிட்ட பெரியார் 79ஆம் ஆண்டு சிறப்பு மலரில் எழுதியது

❐

## இணைப்பு

# 1. பார்ப்பனர்கள் தமிழர்களா ?

கேள்வி: பிராமணர்கள் தமிழரே இல்லை என்கிறார்களே தி.க.வினர்?

பதில்: யார் தமிழன்... யார் தமிழன் இல்லை என்று சான்றிதழ் கொடுக்க இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல், ஆயுத பூஜை கொண்டாடுகிற, அப்பா, அம்மா, வணக்கம் என்று பேசுகிற பிராமணர் தமிழர் இல்லையாம்... கிறிஸ்துமஸ், ரம்ஜான் கொண்டாடும் 'அஸ்ஸலாம் அலைக்கும்' 'குட்மார்னிங்' சொல்கிற முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் இவர்கள் அகராதியில் தமிழர்களாம்... காதில் பூ சுற்ற வேண்டாம்.

- ('விஜயபாரதம்' 30.6.2017 ஆர்.எஸ்.எஸ். வார இதழ்)

பார்ப்பனர்கள் தமிழர்கள் என்பது உண்மையானால், அங்கே பிராமணன் எங்கே இருந்து வந்தான்? சூத்திரன் எங்கிருந்து வந்தான் பிறப்பின் அடிப்படையில்?

இந்தப் பிர்மா பிராமணர்களுக்காகவே இந்த லோகத்தைப் படைத்தான் என்கிற மனுதர்மம் எங்கிருந்து குதித்தது?

அந்தப் பார்ப்பனர்களுக்குத் தாய்மொழி சமஸ்கிருதம் என்பது எப்படி? ஒருவருக்குத் தாய்மொழி ஒன்றாகத் தானே இருக்க முடியும் - ஒரு தகப்பன் இருப்பதுபோல.

நெருக்கடியான கேள்விகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் கட்டத்தில் மட்டும் நான் தமிழன் என்று சொன்னால் போதுமா? மற்றபடி மொழியால், மொழி உச்சரிப்பால் பண்பாட்டால், பழக்க வழக்கத்தால், நடைமுறைகளால், உறவு முறைகளால் பார்ப்பனர்கள் தமிழர்களாக

வாழ்கிறார்களா? கன்னியாகுமரியில் வாழும் பார்ப்பானிலிருந்து கலி போர்னியாவில் வாழும் பார்ப்பனர் வரை தமிழை உச்சரிக்கும் முறை ஒரே மாதிரியாக இருப்பானேன்? பார்ப்பனர் அல்லாதாரின் உச்சரிப்பிலிருந்து முற்றிலும் அவர்கள் மாறுபட்டு இருப்பது ஏன்?

எந்தப் பார்ப்பான் தமிழில் பெயர் சூட்டுகிறான்? பார்ப்பனர்கள் உண்மையிலேயே தமிழர்கள் என்றால், தமிழ்மொழிதான் அவர்களின் தாய்மொழி என்று ஒப்புக் கொண்டால், கோயில்களில் எங்கள் தாய்மொழியான தமிழ்தான் வழிபாட்டு மொழியாக இருக்க வேண்டும் என்று போராட முன்வராதது ஏன்? போராடா விட்டாலும் பரவாயில்லை, வழிபாட்டில் தமிழ் இருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தால் பார்ப்பனர்கள் தமிழர்கள் என்றால் அதனை வரவேற்க வேண்டாமா? மாறாக உச்ச நீதிமன்றம் வரை சென்று தடுக்க முட்டுக்கட்டை போடப் பார்ப்பனர்கள் முயலுவது ஏன்?

பூஜை வேளையில் சங்கராச்சாரியார் தமிழில் பேசாதது ஏன்? தமிழை நீஷப்பாஷை என்று கருதுவது ஏன்?

தாழ்த்தப்பட்டவர்களும் தமிழர்கள், நாங்களும் தமிழர்கள்தான் என்று பார்ப்பனர்கள் கருதுவது உண்மையானால் அந்தத் தாழ்த்தப்பட்ட தமிழர்கள் உரிய பயிற்சி பெற்று கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படும் பொழுது உச்சநீதிமன்றம் வரை சென்று முடக்குவது ஏன்?

தமிழ்ப்புத்தாண்டு,பொங்கல்,ஆயுதபூஜைகொண்டாடுகிறார்களாம் பார்ப்பனர்கள் - அதனால் அவர்களைத் தமிழர்களாக ஒப்புக் கொள்ள வேண்டுமாம்.

தமிழ் ஆண்டு என்கிறதே ‘விஜயபாரதம்‘ - அந்த அறுபது ஆண்டுகளில் ஒரே ஒரு ஆண்டுக்காவது தமிழில் பெயரில்லையே ஏன்? இதைப் பற்றி என்றைக்காவது பார்ப்பனர்கள் அக்கறை செலுத்தியதுண்டா? மாறாக தை முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று அரசு சட்டம் இயற்றினால் அதனை எதிர்ப்பது ஏன்? தி.மு.க ஆட்சி சென்று, அ.தி.மு.க ஆட்சி வந்தவுடன் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி பார்ப்பனர் மீண்டும் அந்தப் பழைய சமஸ்கிருதப் பெயர்களைக் கொண்ட வருஷத்துக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுத்தது ஏன்?

பொங்கலை சங்கராந்தி என்று சமஸ்கிருதத்தில் குறிப்பிடுவானேன்? இயற்கையான அந்த அறுவடைத் திருவிழாவிற்குப் புராண முலாம் பூசி பார்ப்பன மயமாக்குவானேன்?

ஆயுத பூஜையைப் பார்ப்பனர்கள் கொண்டாடுவதால் தமிழர்களாம்! ஆயுத பூஜை தமிழர் விழா என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? சங்க இலக்கியத்தில் இருக்கிறதா? எட்டுத் தொகையில்தான் இருக்கிறதா?

தீபாவளிக்கும், தமிழர்களுக்கும் தான் என்ன சம்பந்தம்? நாயக்கர் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் திணிக்கப்பட்டதற்கு யார் காரணம்!

இந்து மதப் புராணங்களில், இதிகாசங்களில் காணப்படும் சுரர்கள் யார்? அசுரர்கள் யார்? சுரர்கள் என்றால் - ராமணர்கள், அசுரர்கள் என்றால் திராவிடர்கள் என்று வரலாற்று ஆசிரியர்கள் (பார்ப்பனர் உட்பட) எழுதிக் குவித்திருக்கிறார்களே, இதற்கு அறிவு நாணயமான பதில் என்ன?

எந்தப் பார்ப்பான் வீட்டில் தமிழின் அடிப்படையில் விழாக்கள், நிகழ்ச்சிகள் நடக்கின்றன? விரலை மடக்குங்கள் பார்க்கலாம்.

முஸ்லிம்கள் மார்க்கத்தால் வேறுபட்டு இருக்கலாம். சென்ற தலைமுறையில் மதம் மாறிய காரணத்தால் அவர்கள் தமிழர்கள் இல்லாமல் போய் விடுவார்களா?

பார்ப்பன இந்து மதத்தில் வருணாசிரம ஜாதி அமைப்பின் காரணமாக, தீண்டாமைக் கொடுமை காரணமாகத்தானே அவர்கள் மதம் மாறினார்கள்? அந்த மதமாற்றத்திற்குப் பார்ப்பனர்களே காரணமாக இருந்து கொண்டு குதிரை கீழே தள்ளியதோடு மட்டுமல்லாமல், குழியும் பறித்த கதையாக அவர்களை எதிரிகளாகப் புனைவது மோசடியல்லவா?

தங்களின் பிறவி ஆதிக்கத்தை எதிர்த்துப் பார்ப்பனர் அல்லாத பெரும்பான்மை மக்கள் கிளம்பி விடுவார்கள் என்பதைத் திசை மாற்றம் செய்யத் தானே இந்த மாய்மாலம்!

- ‘விடுதலை’, 17.07.2017

❐

# 2. தமிழ்த் தாத்தா என்ன சொல்லுகிறார் ?




ஓர் ஏழை வேலைக் காரனைப் பார்த்து “சோறு தின்றாயா” என்று கேட்கலாம். ஆனால் கனவானைப் பார்த்து “போஜனம் ஆயிற்றா” என்று கேட்க வேண்டும். துறவிகளைப் பார்த்து பிட்ஷை ஆயிற்றா என்று கேட்க வேண்டும்.

**- வானொலி பேச்சு**

இதில் மொழி, மனிதன், இரண்டிலுமே வருண தருமம் தானே துள்ளுகிறது.

❒



இதுமொழிப் போராட்டம் மட்டுமல்ல. கலைப் போராட்டம், கலாச்சாரப் போராட்டம், மானாபிமானப் போராட்டம் என்றுகூட சொல்லுவேன். இது உரிமை வேட்கைப் போராட்டமாகும். இப்போராட்டத்தின் போது எந்த ஒரு திராவிடனாலும், எந்த ஒரு உண்மைத் தமிழ் மகனாலும் தூங்கிக் கொண்டிருக்க முடியாது.

- தந்தை பெரியார்
(பக்கம் 32-33)

9 997720 145245

₹ **120**/-